# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 23 ஞாயிற்றுக்கிழமை (08.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 255


# விடுதலைப் புலிகள் குறித்து அரசின் புலனாய்வுத் துறைக்கு எல்லாமே தெரியுமாம்

## தம்மிடம் கேட்டு அறியும் தேவை இருக்கவில்லை என்கிறார் கே.பி.

கொழும்பு,ஓகஸ்ட் 8

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் மற்றும் முக்கிய இரகசியங்கள் யாவும் இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வுத் துறையினருக்கு நன்கு தெரியும். அவர்கள் சகலவற்றையும் அறிந்து வைத்திருந்தனர்.

அதனால் அவர்கள் என்னிடம் கேட்டுத்தான் அவற்றைத் தெரிந்துகொள்ளவேண்டிய தேவையோ அவசியமோ இருக்கவில்லை.

### மூத்த தலைவர்களின் சதியினாலேயே நான் இளைப்பாற நேர்ந்தது



போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்கள் தங்களுடைய அதிகாரத்தை விஸ்தரித்து பலப்படுத்துவதில் அக்கறை கொண்டனர்.

கடற்புலிகளின் தளபதி சூசை, கடற்புலிகளே இயக்கத்தின் கப்பல்கள் முழுவதையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டும் என்று விரும்பினார். அதுவரை கப்பல்கள் அணியின் பொறுப்பாளராக நானே பணிபுரிந்தேன்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் புலம்பெயர் நாடுகளில் எமது இயக்க அரசியலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்று விரும்பினார்.

வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பாகவிருந்த கஸ்ரோ அந்த நாடுகளில் உள்ள கிளைகளின் பொறுப்பையும் கட்டுப்பாட்டையும் தமது முழு அதிகாரத்தின் கீழ் கொண்டுவரச் செயற்பட்டார்.

நிதிப்பிரிவுக்குப் பொறுப்பாக விருந்த தமிழேந்தி இயக்கத்துக்கு நிதி திரட்டும் முழு அதிகாரத்தையும் தம்வசமாக்க விரும்பினார்.

அதனால் இவர்கள் எல்லோரும் எனக்குத் தரப்பட்ட அதிகாரங்களைக் குறைத்து அந்த அதிகாரங்களை தம்வசமாக்குமாறு தலைவர் பிரபாகரனிடம் கோரிக்கை விடுத்தனர்.

போர்நிறுத்தம் நடைமுறையில் இருந்ததால் புலம்பெயர் நாடுகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான எமது மக்கள் வன்னிக்கு அடிக்கடி வந்துபோயினர். அவர்கள் மூலமாகவும் மூத்த தலைவர்கள் தாமே நேரடியாக எல்லா விடயங்களையும் தொலைபேசி, பக்ஸ், ஈமெயில் ஆகிய தொடர்பாடல் முறைகள் மூலம் நேரடியாகவே தாம் நெறிப்படுத்துவோம் என தலைவர் பிரபாகரனை நம்பவைத்தனர்; உணரவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து என்னிடம் அதிகளவிலான பொறுப்புகள் தரப்பட்டுள்ளதாகவும் அதனால் சில பணிகளில் இருந்து என்னை விடுவித்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர்கள் தலைவர் பிரபாகரனிடம் கேட்டுக்கொண்டனர்; அவரை இணங்கவைத்தனர். நான் என்ன செய்யமுடியும். அவரது உத்தரவுக்கு இணங்கிக்கொண்டேன்.

என்மீது சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்ததும் உண்மைதான். மேற்குறிப்பிட்ட மூத்த தலைவர்கள் புலம்பெயர் நாடுகளிலுள்ள பிரமுகர்களை (பெண்கள் உட்பட) வருவித்து என்னைப் பற்றித் தலைவரிடம் நேரடியாக புகார்களைத் தெரிவிக்க வைத்தனர். அவ்வாறு வருவிக்கப்பட்ட பெண்களில் பலர் பிரபாகரனின் முன்னால் அழுது பலத்த குரலில் முறைப்பாடுகளைக் கூறியதாகவும் நான் அறிந்தேன்.

உண்மையில் இது வன்னியில் இருந்த மூத்த தலைவர்களால் எனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதி என்றே சொல்வேன். மிகக் குறிப்பாக கஸ்ரோவும் தமிழ்ச்செல்வனும் இதில் முக்கிய பங்கு வகித்தனர். தலைவர் இவர்களால் ஏமாற்றப்பட்டார்.

என்னால் அங்கு நேரில் செல்லமுடியாததால் உண்மை நிலையைச் சொல்லி தலைவரிடம் நியாயம் கேட்கமுடியாமல் போய்விட்டது. அதனால் தலைவரின் சொற்படி நான் ஓய்வெடுத்துக்கொள்ள நேர்ந்தது.

(28ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை விமான நிலையத்தில் வெடிகுண்டுப் புரளி

சென்னை,ஓக.8

சென்னை விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் வந்த மர்மத் தொலைபேசி அழைப்பை அடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

கொச்சியில் இருந்து சென்னை வரும் விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகத் தொலைபேசியில் அநாமதேய நபர் ஒருவர் மிரட்டிவிட்டு தொடர்பைத் துண்டித்துவிட்டார்.

(28ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக பிரபல ஆசிரியர்களின் கருத்தரங்கு படிமுறை விவரங்களின் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

## கண்ணியற்ற பிரதேசமாக அடுத்த மாதம் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்,ஓக.8

வடக்கில் யாழ்ப்பாணம் கண்ணிவெடி அற்ற பிரதேசமாக அடுத்த மாதத்தில் அறிவிக்கப்படும் என்று யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

குடாநாட்டின் பெரும்பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டன. அடுத்து வரும் 45 நாள்களில் கண்ணிவெடிகள் முழுமையாக நீக்கப்பட்டுவிடும்.

இதன் காரணமாக 699 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படும்.

வடக்குக்கான ரயில்பாதை புனரமைப்புக்கு வசதியாக ரயில்பாதைகளில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் ப்ணி தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார் அவர். (ஐ)

## யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் விரைவில் கிளிநொச்சிக்கு மாற்றப்படும்

### சரவணபவன் எம்.பியிடம் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.8

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் இயங்கச் செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடமே இத்தகவலை கூறியுள்ளார் ஆளுநர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் விடுத்த கோரிக்கையின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆளுநருடன் பேச்சு நடத்தினார்.

ஆளுநரிடம் சரவணபவன் எம்.பி. தெரிவித்தவை வருமாறு:-

(28ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டத்தின் 5 பாடசாலைகளுக்கு உலக வங்கி வழங்கிய நிதி எங்கே?

### கட்டட நிர்மாணப் பணிகள் நிறுத்தப்படும் அபாயம்

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் உலக வங்கியின் உதவியுடன் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட 'இசுறு' பாடசாலைச் திட்டத்தை இழக்கும் நிலை தோன்றி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஒவ்வொரு பாடசாலைக்கு கட்டடங்கள் அமைக்கும் 'இசுறு' திட்டம் ஒன்றை 2008 ஆம் ஆண்டு உலக வங்கி அறிமுகப்படுத்தியது.

இத்திட்டத்தின் முதல்கட்டமாக யாழ். மாவட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா, சுழிபுரம் விக்ரோறியா, புத்தூர் சோமஸ்கந்தா, கரவெட்டி விக்னேஸ்வரா, வரணி மகாவித்தியாலயம் ஆகியன தெரிவுசெய்யப்பட்டன.

இவற்றுக்கான கட்டட அடிக்கல்களும் நடப்பட்டன. (28ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் நேற்று ஏற்பாடாகியிருந்த பட்டதாரிகளின் கூட்டத்தை நடத்த அனுமதி வழங்க மறுத்த பொலிஸார்!

யாழ்ப்பாணம், ஓக. 8

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நல்லூரில் ஒருங்கிணைந்த பட்டதாரிகள் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டம் பொலிஸாரின் தலையீட்டால் நிறுத்தப்பட்டது.

ஏற்கனவே அறிவித்தபடி இந்தக் கூட்டம் நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு முன்பாக நடைபெறும் எனக் கருதி பட்டதாரிகள் நேற்றுக் காலை முதல் அங்கு கூடத் தொடங்கினர்.

அங்கு வந்த பொலிஸார் பட்டதாரிகள் கூட்டம் கூட அனுமதிக்க முடியாது, கலைந்து செல்லவேண்டும். இல்லையேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

அதையடுத்து அங்கிருந்து அகன்று சென்ற (28ஆம் பக்கம் பார்க்க)

## நாளை ஆடி அமாவாசையன்று கீரிமலைக்கு பிதிர்க்கடன் செய்ய தடையின்றிச் செல்லலாம்

### போக்குவரத்து வசதிகளும் இம்முறை சுமுகம்

யாழ்ப்பாணம்,ஓக.8

ஆடி அமாவாசை விரதத்தை ஒட்டி கீரிமலையில் தீர்த்த உற்சவம் நாளை திங்கட்கிழமை அதிகாலை இடம்பெறவுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றில் இருந்து சுவாமிகள் கீரிமலைக் கேணியில் எழுந்தருளி கண்டகி தீர்த்தம் இடம்பெறும். அதைத்தொடர்ந்து பொது மக்கள் பிதிர்க்கடனைப் பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள பக்தர்கள் கீரிமலைக்குச் செல்வதற்காக குடாநாட்டில் சகல பகுதிகளில் இருந்தும் விசேட போக்குவரத்துச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் தேவை

சமகால அரசியலில் ஈடுபாடும் பரந்த அறிவும் அத்துறையில் விமர்சிப்பதில் தேர்ச்சியும் உள்ளவர்கள் உகந்த பணி நிலைக்குத் தேவை.

ஆவணப்படுத்தலிலும் அது சார்ந்த பணிகளிலும் அரசியல் கட்டுரைகள் எழுதுவதிலும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

ஆங்கிலத்தில் தகுந்த தேர்ச்சி அவசியம். பட்டதாரிகள் பெரிதும் விரும்பப்படுவர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முழுநேர வேலையாகவோ பகுதி நேரப் பணியாகவோ ஆற்றலாம்.

11.08.2010 முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 4052,
மே/பா. உதயன்
ஈ-மெயில்: mmslanka@gmail.com

## காலத்தின் முக்கிய தேவை
## மிக நன்றியுடையோம்



மதிப்பிற்குரிய மாண்புமிகு எமது டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியால் அருள்மிகு செல்வசந்நிதி வேலவனின் திருவிளையாட்டுக்கு முன் யாழ். இராணுவ உயர் அதிகாரிகளின் முக்கிய பணிப்பின் பேரில் தொண்டைமானாறு - அச்சுவேலி வீதி திறக்கப்பட்டது.

07.08.2010 அன்று அமைச்சர் அவர்களுக்குப் பதிலாக வடபிராந்திய ஈ.பி.டி.பி. யின் பொறுப்பாளர் மதிப்பிற்குரிய **கமலேந்திரன் (கமல்)** அவர்கள் வீதியைத் திறந்து வைத்தார். இந்த வீதி திறக்கப்பட்டதையிட்டு வடமராட்சி ஈ.பி.டி.பி. யின் அமைப்பாளர் உயர்திரு **ரங்கன்** மக்களுக்கு தெரியப்படுத்தி இருந்தார்.

அச்சுவேலி ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் உயர்திரு **தர்மராஜா** அவர்களும் முக்கிய பங்கு வகித்தார்.

சந்நிதி முருகனைத் தரிசிக்கும் யாழ்.மாவட்ட மக்கள் மிகவும் சந்தோசத்தோடு பாராட்டுவதை நேரடியாக அவதானிக்க முடிந்ததையிட்டு லாலா சோப் நிறுவனத்தினர் மிகவும் வரவேற்றுப் பாராட்டுகின்றனர்.

**லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 65 ஆவது பிறந்த தின நினைவலைகள்

08.08.2010



அமரர்
**கெ.வசந்தமல்லிகா**

உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.
314, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி முத்தையா (அப்பா)

(முகாமையாளர், ஈஸ்வரபகவான் அன் கம்பனி)



நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்தையா 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் முருகேசு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சண்முகவடிவு, கற்பகவடிவு, கிருஷ்ண வடிவு, மரகதவடிவு, திருச்செல்வம், தனலஷ்மி ஆகியோரின் பாச மிகு தந்தையும் வீ.ஆர்.கே. இரத்தினசபாபதி (ஜே.பி), சிவானந்தராஜா, அன்னலிங்கம், சுரேந்திரராஜா, சத்தியேஸ்வரி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஓம்சக்தி, யசோதன், ஆதித்தன், ஆதி சக்தி, சிவசக்தி, சுதாகரன், மணிகண்டன், ஞானசக்தி, விஜிதா, கோகு லன், தர்ஷன், விஜயன், மயூரன், பிரியதர்சினி, திபாகரன், மதுர வாணி, காந்தரூபன், சாந்தரூபன், கோமேசன், மேரிசுமா, பிரவீனா, வராகி, வாசுகி, விபூஷன், சாள்ஸ் நிக்ஷன், டெய்சி ஆகியோரின் அன்புப் பேரனும் நிலாந்தி, புராதனி, பிரணவிகா, சஞ்ஜய், ரிவா ஷினி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*532/1, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,*
*திருநெல்வேலி,*
*021 222 5919* (101685)

தகவல் :
குடும்பத்தினர்.

## வீடு விற்பனைக்கு

கண்டி றோட், 678/11, முள்ளி வீதி, அரியாலை என்னும் முகவரியில் ஒரு பரப்பும் 2 குளியும் கூடிய காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0213006263
நாவலர் றோட், ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்பாக,
(லயன்ஸ் பான்ஸி ஹவுஸ்)

## விற்பனைக்கு

Sony (LCD) வீடியோ புரஜெக்டர் (Full HD) மொடல் NO-VPL-VW10HT (ஜப்பான்) விற்பனைக்குண்டு.
தொடர்பு:
தொ.பே.: 0770868834, 0770640926

## வேலையாள்கள் தேவை

தையல் தெரிந்த ஆண்கள் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: வைஸ்ணவி தையலகம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.: 0777297526

## காணி விற்பனைக்கு

வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு மிக அண்மையில் - காதி அபூபக்கர் வீதியில் கிணறு, சுற்றுமதிலுடன் கூடிய இரண்டு (2) பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குள்ளது. தரகர் வேண்டியதில்லை.

தொடர்பு: தொ.பே:-0771310416

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 021-222 4459, 0774192275,
Fax : 021-222 4460.

### Diploma in Mobile Phone Repairing

**Mobile Phone Unlocking, Flashing, hardware & Repairing, Software Updating** என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

**15 STUDENTS IN A BATCH**

பரீட்சை முடிவுகளின் பின்னர் சான்றிதழ்கள் அனைத்தும் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும்.

Duration 3 months
(கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 021-222 4459, 0774192275,
Fax : 021-222 4460.

### Certificate in Internet & E-Mail

**Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Face Book, Video Call, Net Call.** என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

**8 Students in a Batch**

பாடசாலை மாணவர்களுக்கு, தொழில் புரிபவர்களுக்கென விசேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

Duration 2 weeks, Rs. 1000/-
(கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)

E.S. பேரம்பலம் நிறுவனத்தின் முழுமையான ஆதரவுடன்
யாழ். பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள
**13 ஞானக்குழந்தை இல்ல**
பாலர் பாடசாலைகளுக்கிடையிலான
**44ஆவது விளையாட்டு விழா-2010**

*இடம் : யாழ். இந்துக்கல்லூரி மைதானம்*
*காலம்: இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை*
*நேரம் : காலை 9 மணி*

தலைவர் :
திரு. S.B. காசிநாதன்
[தலைவர், பாலர் கல்விக்கழகம், ஆசிரியர் - பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்]

பிரதம விருந்தினர் :
திரு. E.S.P. நாகரத்தினம்
[உரிமையாளர், E.S.P. நிறுவனம்]

சிறப்பு விருந்தினர் :
பா.தனபாலன்
[சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி]

கௌரவ விருந்தினர் :
திரு.க. விமலநாதன்
[முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வித் திணைக்களம்]

அனைவரும் வருகைதந்து பாலகர்களை ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.பாலர் கல்விக்கழக உறுப்பினர்கள்,
ஞானக்குழந்தை இல்ல ஆசிரியர்கள், பாலகர்கள்.

## STUDY IN UK இலவச வழிகாட்டல்

ஐக்கிய இராச்சியத்தில் (UK) உயர்கல்வியைத் தொடர்வதற்கு மிகக்குறைந்த கட்டணத்தில் விசா பெற்றுக்கொடுக்கப்படும். தகுதியுடையவர்களுக்கு 100% விசா உத்தரவாதம். MINIMUM QUALIFICATION G.C.E. O/L - 20 மணித்தியால வேலையுடன் கூடிய பட்டப்படிப்பு (per week) UKயில் கல்வி பயின்ற திறமைமிக்க ஆசான்களின் வழிகாட்டலின் கீழ் எதிர்வரும் Septemper / October /January காலப்பகுதிகளில் UK செல்வதற்கு விரையுங்கள். .........

COLOMBO HIGHER EDUCATIONAL CONSULTANCY
**CHEC**

51, Dharmapala Mawatha, Colombo - 07.
Wep : www.chec.lk.
தொடர்புகளுக்கு : 0779265447 (சி/569748)

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை நகர சபையில் கடமையாற்றும் க.தவமலர் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி செல்லப்பாக்கியம் கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொது நூலகம், நகர சபை,
பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை செல்வநாயகம்



சுன்னாகம், முத்துக்கிருஷ்ணர் வீதியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்வநாயகம் நேற்று (07.08.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் அன்னபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் யசோதாவின் அன்புக் கணவரும் செல்வரஞ்சனா, ஜனார்த்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிக்குமார் (கண்ணன்), சுபாசினி ஆகியோரின் மாமனாரும், மதுசிகா, கேசராணி, திபுஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.* (101715)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அன்னலட்சுமி கணேசன்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கணேசன் நேற்று (07.08.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - திருமேனி தம்பதியினரின் அன்பு மகளும், கணேசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமேஸ்வரன் (மோகன்) மற்றும் ஜெகதீஸ்வரன் (ஜீவா - சுவிஸ்), சாயீஸ்வரன் (கண்ணன் - பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நந்தினி, சைலா ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகலெட்சுமி, காலஞ்சென்றவர்களான நாகராசா, நாகரெத்தினம், தருமதுரை மற்றும் ஞானப் பூங்கோதை, அன்னராசா (முன்னாள் வர்த்தக முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகாதேவா, விஜயலக்ஷ்மி மற்றும் சீதாலெட்சுமி, செல்வலிங்கம், சறோ ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாரதா, சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 228/5,*
*சேர் பொன் இராமநாதன் றோட்,*
*திருநெல்வேலி தெற்கு,*
*திருநெல்வேலி.* (101688)

தகவல் :
மகன்மார் (ஜெகதீஸ்வரன், சாயீஸ்வரன்).
T. P.-0770711464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், முஸ்லிம், மலையகத் தலைவர்கள் இணைந்து குரல் கொடுக்க வேண்டிய நில ஆக்கிரமிப்பு

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் அத்துமீறிய குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்படுவதும், பின்பு அக் குடியேற்றங்களுக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்படுவதும், காலப்போக்கில் ஏற்படும் இனமோதல்கள் மூலம் அப்பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப் படுவதும், அதற்கு அனுசரணையாக ஆயுதப் படைகள் செயற்படுவதும், இறுதியில் அப்பிரதேசங்கள் முழுமையாகச் சிங்கள மயப்படுத்தப் படுவதும் தொடர்கதையாகி விட்டது.

கந்தளாய், குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அதைச் சுற்றி ஐந்து சிறிய சிங்களக் குடியேற்றங்கள் மூதூர் மண்ணில் உருவாக்கப்பட்டன. காலப்போக்கில் அவை அரச அங்கீகாரம் பெற்று அங்கு 'சேருவில' என்ற சிங்களத் தேர்தல் தொகுதி அமைக்கப்பட்டுவிட்டது. இதன் காரணமாக கிழக்கின் திருகோண மலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் தமிழ் மக்களுக்கான

## 1984 இல் அரசால் வெளியேற்றப்பட்ட கொக்கிளாய்த் தமிழர் இப்போது 'பிரபல' செட்டிகுளம் முகாமில் கைதிகளாக!

நிலத் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. வெருகல் போன்ற இடங்கள் பாரம்பரிய சிங்களப் பிரதேசங்கள் என நிறுவ முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறே தமிழ்ப் பிரதேசங்களின் நிலத்தொடர்பைத் துண்டித்து வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசம் என்ற உண்மையைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் பல முனைகளிலும் இப் போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக அதாவது முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் திருகோணமலை மாவட்டத்துக்கும் இடையேயுள்ள நிலத்தொடர்பை ஊடறுத்து இன்று கொக்கிளாய்க் கிராமம் முழுமையாக சிங்களமயப்படுத்தப்பட்டு, பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் விரட்டப்பட்டு விட்டனர்.

குளக்கோட்ட அரசன் காலத்திலிருந்து வெள்ளையர் பண்டாரவன்னியனைத் தோற்கடித்து வன்னியைக் கைப்பற்றும் வரை வடக்கே பச்சிலைப் பள்ளி தொட்டு, தெற்கே கொட்டியாரப் பற்று வரை மேற்கே பனவநாமம் என தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசம் என்பது வன்னிமைகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டு வந்தது. இதில் தென்னை மரவாடிப் பற்றும் ஒரு தனி வன்னிமையான ஆட்சிப் பிரதேசமாக விளங்கியது. கொக்கிளாய் கொக்குத்தொடுவாய், ஒதியமலை, ஊஞ்சல் கட்டித் தனித்தல், பெரியகுளம், தனிக்கல்லு, புலிப்பாஞ்சகல்,நொட்டுக்கேணி எனப் பல வளம் மிக்க கிராமங்கள் இந்த வன்னிமைக்குள்ளேயே அடங்கி இருந்தன.

### அடையாளங்கள் கூட இல்லாமல் பல தமிழ் ஊர்கள் அழிக்கப்பட்டுவிட்டன

இன்று கொக்கிளாய், கொக்குத்தொடு வாய் என்பன முழுமையாகச் சிங்கள மயப்படுத்தப் பட்டுவிட்டன. தென்னை மரவாடி என்ற ஓர் ஊர் இருந்தமைக்கான அடையாளங்கள் கூட இல்லாமல் அழிக்கப்பட்டு விட்டன. இங்கு செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் பெருங்காடுகளாக மாறிவிட்டன. ஒரு நாட்டுக்கேணியின் நிலைமையும் இதுவே தான்.

இப்பேரழிவின் மூலம் முதலில் கொக் கிளாயில் தான் வேரூன்றப் பட்டது. அதிலிருந்து மெல்ல மெல்ல புற்று நோயாகப்படர்ந்த ஆக்கிரமிப்பு இப்போது பரந்து பல ஊர்களையே விழுங்கி விட்டது. இன்று இக்கிராமங்களில் எவ்வித தமிழ் அடையாளங் களுமே காணப்படாத வகையில் அழிக் கப்பட்டு விட்டன.

கொக்கிளாய் விவசாய நிலங்கள், வங்காள விரிகுடா, கடல் நீரேரிகள் எனப் பல வளங்களைத் தன்ன கத்தே கொண்ட பூமியாகும். இங்கு கடல் நீரேரியில் சிறு தொழில் செய்யும் மீனவர்களும் விவசாயிகளும் வரலாற்றுக் காலம் தொட்டு வாழ்ந்து வந்தனர். சோளகக் காற்று வீசும் மீன்படு பருவகாலங்களில் மயிலிட்டி, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளிலிருந்து வரும் மீனவர்கள் வாடியமைத்துப் பெரும் எடுப்பில் கரைவலைத் தொழில் செய்வதுண்டு. பருவகாலம் முடிந்ததும் அவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி விடுவதுண்டு.

1950 ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதியில் நீர்கொழும்பைச் சேர்ந்த ஒரு சம்மாட்டி அங்கு வந்து கரைவலைத் தொழிலில் ஈடுபட்டார். அடுத்தடுத்த வருடங்களில் நீர் கொழும் பு, காலி ஆகிய பகுதிகளிலிருந்து வந்து கரைவலைத் தொழிலை மேற் கொண்டு விட்டு பருவ காலம் முடிய ஊர் திரும்பி விடுவர். இவர்களில் முன்னாள் மீன்பிடித் தொழில் அமைச்சர் பெஸ்ரஸ் பெரேராவின் உறவினர்களும் அடங்குவர். காலப்போக்கில் கரைவலைத் தொழி லுக்குக் கூலித் தொழிலாளிகளாக் வந்த பலர் குடிசைகளை அமைத்து அங்கு நிரந்தரமாகத் தங்கினர். சில காலத்தில் அரசாங்கமே வீடுகளை அமைத்துக் கொடுத்து அதை ஒரு மீன்பிடிக் கிராமமாக மாற்றியது.

அதுவரை சிங்கள மக்களுக்கும் அங்கு பரம்பரை பரம்பரையாகக் குடி யிருந்த மக்களுக்கும் இடையே உறவுகள் நல்லமுறையிலேயே அமைந்திருந்தன. அங்கு அமைக் கப்பட்ட தேவாலயத்தில் இரு பகுதியினருமே பங்கு கொண்டிருந்தனர்.

1958 கலவர காலத்தில் அப் பகுதியை விட்டு பாதுகாப்பாக வெளியேறிய சிங்கள மக்கள் சிலகாலத்தின் பின்பு மீண்டும் வந்து எவ்வித பிரச்சினையும் இன்றி

## ஞாயிறு காரம்

தொழில் செய்ய ஆரம்பித்தனர். அதன்பின்பு அருகிலமைந்துள்ள பதவியா கிராமத்தில் வசிக்கும் சிங்களக் காடையர்கள் மாட்டுக் களவு ஆரம்பித்த பின்புதான் மெல்ல முறுகல் நிலை தோன்றியது.

கொக்கிளாய் மக்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை என்பது மட்டுமின்றி இறைச்சிக்காக மாடுகளை விற்பது மில்லை. நல்ல வண்டில் மாடுகளையோ உழவு மாடுகளையோ வாங்க யாழ்ப்பாணத்தில் இருந்து கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் ஆகிய இடங்களுக்கே முன்பு செல்வதுண்டு.

பதவியாச் சிங்களவர்கள் மேய்ச்சலுக்குப் போகும் மாடுகளைப் பட்டி களாக விரட்டி காடுகளுக்குள் கொண்டு சென்று லொறிகளில் இறைச்சிக்கு கொழும்புக்கு அனுப்பத் தொடங்கினர். இதற்கு கொக்கிளாயில் இருந்த சில சிங்களவர்களும் துணை போயினர். தொடர்ச்சியாக இடம் பெற்ற இச் சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தின. இவை பற்றித் தட்டிக் கேட்க முயன்ற போது மோதல்கள் வெடித்தன. பல சமயங்களில் தலையிட்டு சமாதானத்தை ஏற்படுத் திய

## கொக்கிளாய்: ஓர் அனுபவ பாடம்

போதும்' களவுகள்' தொடர்ந்த வண்ணமே இருந்தன.

எனவே அடிக்கடி மோதல்கள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. முகத்துவாரம் பகுதியிலிருந்த தமிழ் மீனவர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவை மேலும்மேலும் இனமுறுகலை உரமேற்ற ஆரம்பித்தன. சிங்களவர்களின் களவுகள், காடைத் தனங்களுக்கு எதிராகக் கொதித் தெழுந்த பல வாலிபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பலவித கொடுமை

### புற்றுநோயாகப் படரும் மண் அபகரிப்பு

களுக்கு உட்படுத்தப்பட்டனர். பலர் தலைமறைவாக வேண்டிய நிலையும் எழுந்தது.

சிங்களவருக்குப் பாதுகாப்பு வழங்க நிறுவப்பட்ட சிறு இராணுவ முகாம் மெல்ல மெல்ல விரிவடைந்து ஒரு பெரும் படைமுகாமாகியது. அதன் பின்பு தமிழ் மக்கள் வாழவே முடியாத அளவுக்குச் சிங்களக் காடை யரும், படையினரும் தமிழ் மக்களுக் குத் தொல்லை கொடுக்க ஆரம்பித் தனர். முற்றாகவே தமிழ் மீனவர்கள் கடற் தொழில் செய்ய முடியாத நிலைமையும், விவசாய முயற்சிகளுக்குப் பெரும் தடைகளும் ஏற்படுத்தப் பட்டன. இப்படியான ஒரு நிலையில் 1984 இன் ஆரம்பத்தில் கொக்கிளாய் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. அதையடுத்து அம்மக்கள்

### மணலாற்றுத் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர் இப்போது அவர்கள் செட்டிகுளம் முகாமில்

அப்பிரதேசத்தை விட்டு வெளியேறினர். வீடுகள், காணிகளைப் பார்க்கச் செல்பவர் கள் கொல்லப்படுவதும், காணாமல் போவதும், கைது செய்யப்படுவதும் என அம் மக்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப முடியாத ஒரு நிலை திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

1984 இல் பகிரங்கமாக விடுக்கப்பட்ட ஓர் அரச அறிவித்தல் மூலம் மணலாற்றுப் பிரதேச மக்கள் நமது சொந்த இடங்களிலி ருந்து இருபத்து நாலுமணி நேரத்தில் விரட்டியடிக்கப்பட்ட போது, இவர்களும் கொக்கிளாயை விட்டு வெளியேறினர்.

இப்பகுதியின் மீனவர்கள் நேப்பாப் புலவு, நீராவிப்பிட்டி ஆகிய பகுதிகளில் குடியேறினர். ஏனையோர் மாமூலை, முள்ளியவளை, முத்தையன்கட்டு போன்ற இடங்களில் போய்த்தங்கினர்.

செழிப்பான வயல் நிலங்கள், உழவு யந்திரங்கள், பெரும் மாட்டுப்பட்டிகள், பாலும் தேனும் என்றும் நிறையவை வாழ்வு எனக் கொண்டிருந்த கொக்கிளாய் மக்கள் கடந்த இருபத்தாறு வருடங்களாக அகதி வாழ்வின் எல்லாத் துயரங்களையும் சுமந்து,இப்போது செட்டிகுளம் நலன்புரி நிலையங்களில் வறுமையிலும், நோயிலும் வாடுகின்றனர். அவர்களின் வளம் பொங்கும் பூமியோ சிங்கள மயப்பட்டு நன்னிலை இழந்து வரண்டு போய்க் கிடக்கிறது. அவர்கள் தாங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தங்கள் கிராமத்தைக் கண்ணால் கூடக் காண நாதியற்றவர்களாகத் தவிக்கின்றனர்.

கொக்கிளாய் மட்டுமின்றி அந்தத் தென்னைமரவாடி என்ற தொன்மையான வன்னியையே [illegible]சிங்களமயப் படுத்தப்படும் அவலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அக்கிராமங்களின் இன்றைய நிலை எமக்கு ஒரு பேரிழப்புத்தான். ஆனால் அதை ஒரு பாடமாகக் கொண்டு அடுத்த கட்டம் நோக்கி நகரவேண்டியர்களாயுள்ளோம்.

இன்று சாந்தபுரம், இந்துபுரம் திருமுறி கண்டி, கேப்பாய் புலவு ஆகிய கிராமங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் மன்னாரில் சன்னார் பிரதேசம் மன்னார் மாவட்டத்திலும் மீள் குடியேற்றம் செய்ய அனுமதிக்கப்பட வில்லை. இவற்றில் படையினரின் குடும் பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படவுள்ளனவாம். இவ்வாறே கிளிநொச்சியிலும் கொக்காவில் பகுதியில் மீள அரசின் உதவியுடன் ஒரு பெரும் சிங்களக் குடியேற்றம் அமைக்கப்பட்டு வருகிறது.

இங்குதான் நாம் கொக்கிளாயிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும். ஒரு காலத்தில் மீன்பிடித் தொழிலுக்கென அமைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம் கொக்கிளாயை மட்டுமின்றி இன்று பல அயற் கிராமங்களையும் விழுங்கி விட்டது. இப்போது அமைக்கப்படுவதோ இராணுவக் குடும்பங்களின் குடியேற்றங்கள். இப்போது அக்கிராமங்கள் பறிக்கப்படுகின்றன. எதிர் காலத்தில் அயற்கிராமங்கள் பறிபோவதைத் தடுக்க முடியுமா? இப்படியான ஒரு சூழ் நிலையில் நாம் அனைவரும் அரசியல் பேதங்களையும், கட்சி முரண்பாடுகளையும் கடந்து ஒன்றுபட்டுக் குரல் கொடுக் கப் போகிறோமா? அல்லது அரசின் அடாவடித்தனங்களை நியாயப் படுத்தி ஜனாதிபதி புகழ் பாடப் போகி றோமா? என்பதே இன்று எம் முன் எழும் கேள்வி. கடந்து கொண்டிருக் கும் ஒவ்வொரு நிமிடமும் ஆபத் தானவை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.


சாந்தபுரம், இந்துபுரம், திரு முறிகண்டி, சன்னார் ஆகிய இடங் களில் 1977,1983 ஆகிய காலப் பகுதியில் இனக்கலவரம் காரணமாக மலையகத்திலிருந்து விரட்டப்பட்ட மக்களே பெரும்பான்மையானவர்களாக வாழ்ந்து வந்தனர். எனவே இப்பிரச் சினையில் மலையக அரசியல் வாதிகளும் குரல் கொடுக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாகும். இவ்வாறே பொத்துவிலிலும் முஸ்லிம் மக்களின் பிர தேசங்கள் சிங்களக் குடியேற்றங்களால் பறிக்கப்படுகின்றன. இந்நிலையில் இந்நட வடிக்கைகளுக்கு எதிராக முஸ்லிம் அரசி யல்வாதிகளும் நிறுவனங்களும் குரல் கொடுக்க வேண்டியவர்களாயுள்ளனர்.

எனவே தமிழ், முஸ்லிம், மலையக அரசியல் வாதிகள் அவர்கள் அரசாங்க ஆதரவாளர்களாக இருந்தால் என்ன எதிர்க்கட்சியினராக இருந்தால் என்ன இத்தகைய ஒரு நியாயமற்ற தமிழ், முஸ்லிம் மக்களின் குடிவாழ் உரிமையைப் பறிக்கின்ற இந்த நடவடிக்கைக்கு எதிராகக் களத்தில் இறங்க வேண்டியவர்களாயுள்ளனர். அப்படி யாராவது இப்பிரச்சினையில் மௌனம் சாதித்தாலோ அல்லது

**சந்திரசேகரா ஆசாத்**

அரசாங்கத்தை நியாயப் படுத்த முயன்றாலோ அவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு விரோதமான ஒரு பெரும் வரலாற்றுத்தவறைச் செய்தவர்களாகவே தமிழ் பேசும் மக்களால் நோக்கப்படுவர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



REMEMBERING THE
**PRIESTLY SILVER JUBILEE**
OF
**REV.FR.JERO SELVANAYAGAM**
RECTOR
ST. PATRICKS COLLEGE. JAFFNA
06.08.1985 - 06.08.2010

"AND SO THOSE WHOM GOD SET APART,
HE CALLED;
AND THOSE HE CALLED,
HE PUT RIGHT WITH HIMSELF
AND HE SHARED HIS GLORY WITH THEM."

PRASANNA JOSEPH & PRASAANTHA JOSEPH
WITH THEIR PARENTS


## மரண அறிவித்தல்



### கந்தையா பிறேமதாஸ் (பிறேம்)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Mallen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பிறேமதாஸ் 04.08.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா சிவப்பி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் திரு.திருமதி சிதம்பரம் தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும் வசந்தா தேவியின் அன்புக் கணவரும் பாக்கியம்(இலங்கை), ராணி (இங்கிலாந்து), புஸ்பராஜா (சுவிஸ்), சந்திரன் (இலங்கை), ரவீந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் யோகாதேவி (இலங்கை), தர்மதாஸ் (ரவி - ஜேர்மனி), பிறேமதாஸ் (தாஸ் - சுவிஸ்), காஞ்சனாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.08.2010) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணி தொடக்கம் இரவு 8 மணிவரைக்கும் Friedhof, Rain Str5,8706 Mellen எனும் முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் நாளை (09.08.2010) திங்கட்கிழமை Kramatorium Northhelm (Bucheggplatz), Kaferholz str101, 8037zurich எனும் முகவரியில் மதியம் 1.30 மணி தொடக்கம் பி.ப. 3.30 மணி வரைக்குள் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.39 வளாக வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
சிதம்பரம்.
(சீர்காழி - கே.கே.எஸ்.)

## ஆள் தேவை

19 - 22 வயது ஆண் வேலைக்குத் தேவை. 09.08.2010 மு.ப 11.30 மணிக்கு வரவும்.
AVT. MEDIC CLINIC
45, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 2228965 நிர்வாகம்

## காணி விற்பனைக்கு

கொக்குவில் தேவாலய எதிர் ஒழுங்கை, முதலி கோயிலடி அருகில் 2 பரப்பு, 3 ½ பரப்பு காணி கிணற்றுடன விற்பனைக்குண்டு.
தொ.பே.: 0778893655
மாலை 6 - 9 மணி

## தவறிவிட்டது

மக்கள் வங்கி, பிரதான வீதிக் கிளை காசோலைப் புத்தகம் ஒன்று வண்ணை சிவன் கோயிலுக்கும், இராமநாதன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.
மல்ரிபாம் சென்ரர், 61, சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி, நாச்சிமார் கோயிலடி, தொ.பே.: 0773001763

## விற்பனைக்கு

புதிதாக மீளமைக்கப்பட்ட சிவப்பு நிற HONDA CD 200 (Road Master) வகை மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0777261946

## ஆங்கில ஆசிரியர் பதவிக்கு ஏனைய பாட ஆசிரியரும் விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஒக.8

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காக இதே மாகாணத்தில் கற்பிக்கும் ஏனைய பாட ஆசிரியர்களும் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் புலமையுள்ள ஏனைய பாட ஆசிரியர்களை, ஆங்கிலம் கற்பிப்பதற்கு பயிற்றும் முகமாக மாகாணக் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பயிற்சி நெறி ஒன்றை நடத்துவதற்கு முன்வந்துள் ளது என்றும் வார இறுதி நாள்களில் நடத்தப் படவிருக்கும் இப்பயிற்சிநெறிக்கு 120 பேர் தெரிவு செய்யப்பட்டு 60 பேர் யாழ்ப்பாணத்திலும், 60 பேர் வவுனியாவிலும் பயிற்றுவிக் கப்படுவர் என்றும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள், விண்ணப்பப் படிவங்கள் என்பவற்றை வட மாகாணத்தில் உள்ள சகல வலயக் கல்வி அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என்றும்-

ஆர்வமுள்ள ஆசிரியர்கள் ஒக்ஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்றும்-

மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-310)


**SPONSOR**

Student / Visit Visa, Skill Migration

UK, Ireland, Cyprus, Canada, New Zealand Australia போன்ற நாடுகளுக்கு Student / Visit செல்ல Bank Balance ஒரு தடையா?

- உங்கள் A/C யில் பணம் போடுவோம்.
- 1,3,6 மாதம் Backdate பண்ணும் வசதி
- Visa கிடைக்கும் வரை பணம் இருக்கும்

| Student Visa | | | |
|---|---|---|---|
| UK | குறைந்த தகமை | IELTS | 5.0 |
| Ireland | குறைந்த தகமை | IELTS | 4.5 |
| New Zealand | குறைந்த தகமை | IELTS | 5.5 |

UK, Canada, German, Italy போன்ற நாடுகளுக்கு Visit செல்ல சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்க பாவிழன் உங்கள் Visa நிராகரிக்கப்படலாம். அதற்கு சரியான வழிகாட்டல் செய்து தரப்படும்.

Contact :
Riza - 0779 305 990
Priya - 0778 170 616
Rizan - 0729 295 367

100% GUARANTEED VISA

10 Years Experience & Success


## உடனே அழையுங்கள்!

உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம் ஒரே வாரத்திலே!
தோற்சுருக்கம், பருக்கள், கருவளையம், உதடு வெடிப்புக்கான சிகிச்சைகள், உடற்பருமன் அதிகரிப்பு, குறைப்பு மற்றும் உடற் கட்டழகுக்கான சிகிச்சைகள்.
0774011129

## கடை வாடகைக்கு உண்டு

யாழ். கே.கே.எஸ். றோட்டில் சத்திரத்துச் சந்திக்குப் பக்கத்தில் வங்கிகளுக்கு அருகில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 2225558
0771362202

## வியாபார முகவர்கள், தொகை கொள்வனவாளர்கள் தேவை

Gas Cooker, Mixer Grinders, Fans, Rice Cookers, Iron, Rechargeble Batteries (Size AA) and Battery Charger (Size AA).
Please Contact:
**J.C.HOLDINGS**
(Colombo)
0773-059532

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இதைத் தேவைக்கேற்பப் பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0777568685

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - கொழும்பு பயண மார்க்க அனுமதி ( பஸ் றூட் - Bus Route ) விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே.: 0779943457

## PETS AND PLANTS

பொமேரியன், அல்சேசன், Boxer நாய்கள், பாவித்த குருவிக் கூடுகள், மீன்தொட்டிகள், எல்லாவித செல்வந்தைகள், பூச்சாடிகள் மற்றும் பூக்கன்றுகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 80, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.
(வைரவர் கோயில் மின்மாற்றி அருகில்.)

## தவறிவிட்டது

24, மருதடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய ஏஞ்சலின் அன்றனி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (828342363 V) யாழ். நகர்ப் பகுதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.
24, மருதடி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0772209574

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி நாகராசா கமலாம்பிகை

கலா விற்பனை நிலையம், திருநெல்வேலி (கலா அண்ணா) அவரின் தாயாரின் திடீர் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.29, நவீன சந்தை,
திருநெல்வேலி.

தேனு களஞ்சியம்,
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(101706)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி விமலசோதிராஜா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட விமல் என்று அழைக்கப்படும் கந்தசாமி விமலசோதி ராஜா நேற்று (07.08.2010) சனிக்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - ராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் அனுசியாவின் அன்புக் கணவரும் ராகவனின் அன்புத் தந்தையும் ரூபன் (றொசான் ஐசிங் கேக்), பிரபா, மாலினி, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி றோட்,
கோண்டாவில் சந்தி.
கை.க. : 0214909002
0716528652

தகவல்:
ரூபன் (றொசான்கேக்), பிரபா
(சகோதரர்கள்).

(101710)

## தேவை

* தலைமைச் சமையலாளர். *Room Boy
நேர்முகத் தேர்வு நாளை (09.08.2010) திங்கட்கிழமை. நேரில் வரவும்
யாழ் ரெஸ்ற் இன்
இல.337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
தொ.பே.:021 222 1011

## விற்பனைக்கு

நெல்லியடி, மகாத்மா வீதி, இல. 1 இல் அமைந்துள்ள வீடு, கடை கட்டடம் கட்டக் கூடிய 4 பரப்புக் காணி ஆகியன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 0241961

## மணமகள் தேவை

அவுஸ்திரேலியா குடியுரிமை உடைய (வயது 32) இந்து கௌரவ குடும்ப விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகள் 25 - 30 இடைப்பட்ட வயதுடையவராகவும் படித்த, அழகிய, நற்பண்புடையவராகவும் இருத்தல் வேண்டும். நம்பர் 1,2,3,5 ஆக இருத்தல் விரும்பத்தக்கது. மேலதிக விவரத்துக்குத் தொடர்புகொள்ள வேண்டியது
021 222 1961

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள போட்டோபிரதி எடுக்கும் இயந்திரம் (SHARP AR 5316), லெமினேற்றிங் மிசின் (LAMCO A4), CANON, NINOLTA, NICKON Still கமராக்கள் என்பன விற்பனைக்குண்டு.
ராஜன் போட்டோ
மூத்த நயினார் கோயிலடி,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே.: 021 222 2171

## வீடு, காணி விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 5 அறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
ST Johns, Chundukuli Girls. பாடசாலைகளுக்கு அருகில்.
தொடர்புகளுக்கு T.P: 077 2900033
E.mail. smariyan@hotmail.com

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள உணவகத்திற்கு பணியாளர்கள் தேவை.
1.சமையல் பணியாளர். (தங்கிப் பணியாற்றக் கூடியவர்).
2. சமையல் உதவியாளர்.
3.உணவு பரிமாறுபவர்.
ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 0771877294, 0789487419

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பகடைக்காய்களாகும் பட்டதாரிகள்

சிறுபிள்ளை வேளாண்மை மீண்டும் ஒரு தடவை வீடுவந்து சேரவில்லை. வழமை போலவே எந்தவித முடிவுகளும்



எடுக்கப்படாமல் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் பட்டதாரிகள் சங்க கலந்துரையாடல் நாவலர் மண்டபத்தில் நேற்று நடந்து முடிந்திருக்கின்றது.

கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்குவதற்கு அரசு இழுத்தடித்து வருகின்றது. இதனால் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை வருடந்தோறும் நாடாளாவிய ரீதியில் ஏறுவரிசையிலேயே சென்று கொண்டிருக்கின்றது. அதிலும் தமிழர் பகுதியான குடாநாட்டில் பட்டதாரிகளின் நிலை பரிதாபமானது. தென்னிலங்கைப் பட்டதாரிகள் தனியே அரச உத்தியோகங்களை மட்டும் நம்பியிருப்பதில்லை. அவர்களுக்கான வாசல்கள் ஏராளமாகத் திறந்திருப்பதால் தனியார் நிறுவனங்களிலாவது நல்லதொரு வேலை வாய்ப்பைப் பெற்று விடுவார்கள். ஆனால் நீண்டகாலமாக போரின் பிடியில் குடாநாடு சிக்கியிருந்ததாலும், அரசாங்கத்தின் கடைக்கண் பார்வை யாழ்ப்பாணத்திற்கு கிட்டாததாலும் அத்தகைய வளமான எதிர்காலத்துக்குரிய வழிகள் எதுவும் நமது பட்டதாரிகளுக்கு கிடைத்த தில்லை. இதனால் கிடைத்தால் அரச உத்தியோகம் இல்லாவிட்டால் தண்டச்சோறு என்கிற நிலையில்தான் பட்டதாரிகள் இங்குள்ளார்கள்.

தமக்குரிய நியமனங்களை காலம் தாழ்த்தாது வழங்க வேண்டும் என்று அரசை வற்புறுத்துவதற்காக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இணைந்து சில செயற்பாடுகளையும் முன்னெடுப்பது அல்லது போராடுவது பட்டதாரிகளுக்குரிய கட்டாயக் கடமையாகிவிட்டது.கேட்டால் தான் எதுவுமே கிடைக்கும் என்ற நிலையே தொடர்வதால் தமக்கான நியாயமான நியமனங்களைக் கூட போராடியே பெறவேண்டியதாகிவிட்டது. ஆனாலும் பட்டதாரிகள் சங்கம் என்பது யாப்புகளோ, சட்டதிட்டங்களோ எதுவுமற்ற- யாரும் வந்து தங்கிச்செல்கின்ற சத்திரம் போல - திறந்தவெளிச் சங்கமாகவே இருக்கின்றது. இது அதன் தலைமைப் பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. தம் சக பட்டதாரிகளுக்காக உயர் அதிகாரிகளுடன் அல்லது அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டு அவர்களுக்கு வால் பிடிப்பதையே பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள் கடந்த சில வருடங்களாக தவறாது பின்பற்றி வருகின்றனர். இந்த வால் பிடிப்புக்கள் மூலம் தமக்குரிய சில நியமனங்களைப் பெற்றுக் கொண்டு தம்மோடு தோள் நின்ற ஏனைய பட்டதாரிகளுக்கு 'டட்டா' காட்டிவிட்டு மறைவதும் பட்டதாரிகள் சங்க நிர்வாகிகளுக்கு வாடிக்கையாகிவிட்டது. இவ்வாறு காலம் காலமாக ஒரு சிலரின் அபிலாஷைகளைத் தீர்க்கும் கைப்பொம்மையாகவே பட்டதாரிகள் சங்கம் மாறிநிற்கின்றது. இச்சங்கத்தை நம்பி ஏராளமான பதிவுகளையும் மேற்கொண்டு எப்படியும் வேலை கிடைத்துவிடும் என்று இலகு காத்த கிளிகளாக காத்திருக்கும் ஏனைய பட்டதாரிகளுக்கு கிடைக்கும் பரிசு ஏமாற்றம் மட்டும் தான்.

வால் பிடிச் சங்கமாக மாறி நிற்கும் பட்டதாரிகள் சங்கத்தை சீரான முறையில் இயக்க புதியவர்கள் முனைந்தாலும் ஏற்கனவே இச்சங்கத்தில் இருந்து இப்போது சில நியமனங்களைப் பெற்று தமது பொருளாதார நிலையை வளப்படுத்திக் கொண்டுள்ள முன்னாள் நிர்வாகிகள் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பாதுகாப்பு கெடுபிடிகளால் பிசுபிசுத்துப்போன கலந்துரையாடல்

இந்நிலையில் தான் அகில இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் குடாநாட்டில் உள்ள பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினை தொடர்பாக நல்லூர் ஆலய முன்றிலில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்திருந்தது. எனினும் அதற்கு அனுமதி கிடைக்காததால் இந்த ஆர்ப்பாட்டம் கலந்துரையாடலாக மாற்றப்பட்டு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. யார் குற்றியேனும் அரிசியானால் சரி என்ற நிலைப்பாட்டில் எப்படியாவது தமக்கு வேலை கிடைத்தால் போதும் என்று காலை முதலே பட்டதாரிகள் நாவலர் மண்டபத்திற்கு வரத்தொடங்கினர்.

ஆனால் அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நாவலர் மண்டபச் சூழல் எங்கும் பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். இது தவிர தனியானதொரு வாகனத்தில் கண்ணாடிக் கேடயங்கள் சகிதம் கலகம் அடக்கும் பொலிஸாரும் ஒரு களேபரத்தை எதிர்பார்த்துத் தயாராக இருந்தார்கள். அத்துடன் ஆங்காங்கே இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள வந்தவர்கள் பரிசோதனைக்கும் உள்ளானார்கள். இதனால் அப்பகுதி எங்கும் ஒரு வித அச்சநிலை தொற்றிக் கொண்டது. அகில இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் ஓர் அரசியல் கட்சியின் பின்னணியிலேயே இயங்குவதால்தான் இத்தகைய கெடுபிடிகள் என்றும் கூறப்பட்டது. அச்சத்தின் நடுவிலும் ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகள் கலந்துரையாடலில் பங்கேற்றார்கள். நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் காலம் தாழ்த்தி கலந்துரையாடலை மேற்கொண்ட போதும் அது பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைத் தருவதாக அமையவில்லை. ஆயினும் ஏதோவொரு விதத்தில் பட்டதாரிகள் வேலையில்லாப் பிரச்சினையால் பெரும் அவதிப்பட்டு வருகிறார்கள் என்பதை பிரபலப்படுத்த இந்நிகழ்வு துணை புரிந்திருக்கின்றது.

இதேவேளை , தேவையில்லாமல் பட்டதாரிகளை பிரச்சினைக்குள் மாட்டிவிடுவதற்காகவே இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாக யாழ். மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்திருந்தார். ஆனாலும் அவர் சொல்வது எந்தளவு தூரம் நியாயம் என்பதும், குறித்த பிரதிநிதி பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து என்ன செய்தார் என்பதும் பட்டதாரிகள் எல்லோருக்குமே நன்கு தெரிந்த விடயம் தான். எல்லோருக்குமே எடுபடுகின்ற - வேலைக்காக அல்லாடுகின்ற- பட்டதாரிகளை வைத்து இனியும் அரசியல் செய்யாமல் இதயசுத்தியோடு அவர்களுக்கு வேலை கிடைக்க யாராவது உண்மையாகப் பாடுபட முன்வருவார்களா?

-ஒருகாலி-

---

# உலகப் பெருந்தலைவர்களின் வேண்டுகோள் இலங்கையின் கண்களைத் திறக்க உதவுமா?

**தலைவர்:**
**முன்னாள் ஆர்ச்பிஷப் டெஸ்மொன் டுட்டு.**
**ஆரம்பம்: 2007**
**நெல்சன்மண்டேலா**
**உறுப்பினர்கள் 12 தலைவர்கள்.**
**10 பேர் செயற்படும் உறுப்பினர்கள்.**
**2பேர் கௌரவ உறுப்பினர்கள்.**
**நோக்கம்:**
**உலகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.**
**உறுப்பினர்களின் பெயர்கள்:**
**நெல்சன்மண்டேலா, ஆன்காங் சூகி - மார்ட்டி அக்டிசாரி, கோஃபி அனான், எலா பாற், லக்டார் பிராகிமி, ஜிம்மிகாட்டர், மேரி ரொபின்சன் டெஸ்மன் டுட்டு மற்றும் சிலர்.**

சில தினங்களுக்கு முன்னர் உலக மூத்த தலைவர்கள் விடுத்திருந்த அறிக்கையானது இலங்கை அரசாங்கத்தின் கண்களைத் திறந்திருக்க வேண்டும்.

போர் ஓய்ந்தமையை வரவேற்றுள்ள அம்மூத்த தலைவர்கள் கண்டிப்பான சில எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளார்கள்.

இந்த முன்னேற்ற அறிகுறிகளில் சகிப்புத்தன்மையற்ற விவாதங்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் மட்டுமல்ல அரசோடு இணைந்திருப்பவர்கள் தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளும் தன்மைகளும் இணைந்து காணப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்கள் அவர்கள்.

இலங்கை அரசு உள்நாட்டில் நடந்து கொள்ளும் முறையும் அண்மையில் ஐ.நாவை இலங்கையில் நடத்திய விதமும் வெளிப்படையாகக் கண்டிப்புடன் விமர்சிக்கப்பட வேண்டியுள்ளன. குறிப்பாக இதனை மிகவும் செல்வாக்குள்ள சீனா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் மட்டுமன்றி அணிசேரா நாடுகளும் செய்திடவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

ஐரோப்பிய யூனியன் மாத்திரமே இதுவரை இந்த நாடு சர்வதேச மனித உரிமைகளை மதிக்கத்தவறியமைக்காக நடவடிக்கை எடுத்து ஜி.எஸ்.பி+ திட்டத்தை நிறுத்தி வைக்க முடிவெடுத்துள்ளது.

### கவலை அளித்துள்ள விடயங்கள்

சர்வதேச மூத்த தலைவர்களை கவலைகொள்ளச் செய்துள்ள விடயங்கள் வருமாறு:-

* அரசை விமர்சிப்பவர்கள், அரசியல் எதிராளிகள் போன்றோர் அடிக்கடி இம்சிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது மற்றும் அரசை விமர்சிப்பவர்கள் அரசியல் எதிரிகள் , ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதவுரிமைப் போராளிகள் போன்றோர் காணாமற்போதல். சுமார் 8,000 போராளிச் சந்தேக நபர்கள் விசாரணையோ, சட்ட ரீதியிலான நடவடிக்கைகளோ இன்றி அடைத்து வைத்திருக்கின்றமை.

* புலிகளுடனான மோதல் முடிவுற்று ஒரு வருடத்துக்கு மேலாகிய பின்னரும் போர்க்காலத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட அவசரகால நிலைமையை அரசு வாபஸ்பெறத் தவறியிருப்பது.

* இலங்கையின் முப்பது வருடகால அமைதியின்மைக்கு வித்திட்ட இன ரீதியான சிறுபான்மை மக்களின் ஓரங்கட்டலுக்குக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க அரசு தவறியிருப்பது.

* ஐ.நா .தொடர்பான ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளைக் கொழும்பிலுள்ள ஐ.நா.செயலகம், அமைச்சர் ஒருவரால் தலைமை வகிக்கப்பட்டு ஆர்ப்பட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டமை-போன்றவையாகும்.

இந்த முதுபெரும் தலைவர்கள் இந்தியா, ஜப்பான், சீனா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை அரசைப் பின்வரும் அம்சங்களைச் செயற்படுத்துமாறு வற்புறுத்தும்படி கேட்டுக்கொண்டுள்ளன.

போர்க்கால அவசர காலத்தை வாபஸ் பெறச் செய்தல். சிறுபான்மையோர் உட்பட சகல இலங்கைப் பிரஜைகளதும் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கான பகிரங்கமாக உறுதிப்பாட்டை வெளிப்படுத்தச் செய்தல்.

**டெய்லிமிரர் கடந்த 5 ஆம் திகதி வெளியிட்டிருந்த ஹரிம்பீரிஸ் என்பவரின் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி**

* சந்தேகத்தின் பேரில் முன்னாள் போராளிகளாகக் காவலில் வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக ஐ.சி.ஆர்.சி. நிறுவன உதவிகள் கிடைக்க வழிசெய்தல்.

* ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கி அவர்கள் கோருமிடத்து வீசா வழங்க உதவுதல்.

* அரசியல் சந்தர்ப்ப நோக்கமில்லாமல் சாட்சியங்களின் அடிப்படையிலேயே வழக்கு விசாரணைகள் நடத்துவதை உறுதிப்படுத்த நீதித்துறையில் அரசியல் தலையீட்டை நிறுத்துக.

* உள்ளூர் மற்றும் சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் அவர்களின் பணிகளை இடைஞ்சலோ அச்சுறுத்தலோ அல்லது அவசியமற்ற கட்டுப்பாடோ இன்றி மேற்கொள்ள அனுமதிக்க வலியுறுத்துக.

* காணிப்பிரச்சினைகள், பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்தம் போன்ற விடயங்களில் நாட்டின் வடக்கு- கிழக்கு மக்களுடன் அர்த்தமுள்ள விதத்திலான கலந்துரையாடல்களை ஆரம்பித்தல் வேண்டும். இனரீதியான சிறுபான்மையினரின் நீண்டகால அரசியல் ஓரங்கட்டலுக்கு முடிவு காண்க.

* ஐ.நா.செயற்பாடுகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்க.

தமிழில் 'ரம்யன்'

முதுபெரும் தலைவர்களான இவர்கள் தகுதிபெற்ற சிரேஷ்டர்களாவர். இலங்கையில் பேசமுயாத விடயங்களை இவர்கள் தொட்டுக்காட்டியுள்ளனர்.

போர்வைக்குள் மறைப்பதும் தகவல் கொண்டு வருபவர்களைத் தாக்குவதும் வெகுகாலத்துக்குப் பலன் தரமாட்டாது. மேலே குறித்த மிக முக்கிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/ வேலணை வங்களாவடி
# அருள்மிகு ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமானின்
# தேர்த்திருவிழாச் (3 ஆவது) சிறப்பு மலர் 08.08.2010

## அருளாசிச் செய்தி



வேலணை வங்களாவடிப் பகுதியில் நீண்ட காலமாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமான் இன்று தேரேறி அருட் காட்சி தருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பல ஆலயங் களைக் கொண்ட பிரதேசமாகிய வேலணையில் சைவசமயப் பாரம்பரியமும் தமிழ்ப் பண்பாடும் உள்ள மக்களும் ஆசார சீலத்தோடு, சைவமக்கள் வாழ்கின்ற வங்களாவடி முருகன் ஆலயம் பழைமையும் பெருமையும் வாய்ந்த பண்பாட்டு ஆலயமாகும். புராண படிப்பு, பண்ணிசை ஓதல் இச்சிறப்பு நிகழ்ச்சிகளைக் கொண்ட முருகன் ஆலயத்தில் நீண்ட நாள்களுக்குப் பின் இன்று முருகன் தேரேறி அருளாசி வழங்குவது அனைவருக்கும் நன் மகிழ்ச்சியைத் தருகின்றது. அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியை ஏற்றி இப்பிறவியிலும் மறுபிறவியிலும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இறைவன் தேரேறி வருகின்றான். முத்தமிழால் வைதாரை வாழ வைக்கும் முருகப் பெருமான். தேவர் சிறைமீட்ட செல்வன். தமிழ் மக்கள் படும் அல்லலை நீக்கி நல் அருள் தந்தருள அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. இத்திரு விழாவை அனைவரும் வழிபாடு செய்து சாந்தியும் சமாதானமும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திப்போமாக. அனைவருக்கும் முருகப் பெருமானுடைய ஆசிகிடைப்பதாக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

## ஆசிச் செய்தி



வேலணை வங்களாவடி எனும் பதியில் பன்னெடுங்காலமாக கோயில் கொண்டு சிம்மாசனத்தில் வீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியவர்களின் இன்னல் இடர்களைக் களைந்து அருள் பாலித்துவரும் வள்ளி தெய்வயானை சமேத கலியுக வரதன் தேரேறி அருள் காட்சி தருவது அனைவருக்கும் மன மகிழ்ச் சியைத் தருகின்றது. தீவகங்களில் பல ஆலயங்களைக் கொண்ட வேலணை எனும் பிரதேசத்தில் நடுநாயகமாக விளங்கும் வங்களாவடி எனும் பதியில் சைவசமய கலாசாரமும் சமய பண்புகளும் கந்த புராணப் படிப்புகளும் கொண்டு சமய பண்டிதர்கள் வாழ்ந்தும் பன்னெடுங்காலமாக விளங்கிவரும் சைவசமய மக்களின் ஆலயமாகும்.

முருகப் பெருமான் மூன்றாவது முறை தேரேறி வருகின்ற காட்சி மூலமாக முருகப் பெருமான் திருவருள் ஆசி கிடைக்கப் பெற்று அடியவர்கள் அனைவரும் பதினாறு பேறும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் சாந்தி சமாதானம் நிலவி வாழ வள்ளி தெய்வயானை சமேத முருகப் பெருமானிடத்தில் வேண்டுதல் செய்வதோடு எமது மனமார்ந்த நல்லாசிகளையும் வழங்குகின்றேன்.
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
சுபம்.

ஆலய மஹோற்சவகுரு சிவஸ்ரீ செ.மங்களேஸ்வரக்குருக்கள்,
அரசடிப் பிள்ளையார் கோயில், மாதகல்.

## தேர்த்திருவிழா வாழ்த்துச் செய்தி



வேலணை வங்களாவடி எனுமிடத்திலே அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானின் தேரோட்ட விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். தீவுப் பகுதியில் அமைந் துள்ள ஆலயங்களில் வேலணை வங்களாவடி முருகப் பெருமான் ஆலயமும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாகும்.

சைவ மக்கள் வாழும் தேரார் வீதியில் தேவர் குழாம் நிறையும் தன்மைகளைப் பாடியும், துஷ்டர்களை விலக்கியும் தூயோராய் வாழ வழிகாட்டும் பெரு அற்புத விழாவே இத்தேர்த் திருவிழாவாகும். அந்தவகையிலே முருகப் பெருமான் சிங்காரத்தேரில் வள்ளி தெய்வயானை சமேதராய் ஆரோகணித்து அழித்தல் தொழிலினைப் புரிய வலம்வரும் இந்நாளில், எல்லோருக்கும் வாழ்வு கொடுத்து வினையாவும் போக்கி இவ்வையத்தில் பெரும்பேறு பெற்று வாழ அருள்புரிய அவர்தம் பாதக் கமலங்களை வேண்டுகின்றேன்.

மு.நந்தகோபாலன், பிரதேச செயலாளர்,வேலணை.

## வாழ்த்துச் செய்தி



சைவ மக்கள் வாழ்கின்ற வேலணை வங்களாவடி முருகன் பழமையும் பெருமையும் வாய்ந்த பண்பாட்டு ஆலயம் ஆகும். இன்று அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் 08.08.2010 இல் மூன்றாவது ஆண்டாக தேரேறி வரும் அருட்காட்சியைக் கண்டு மனமாரச் சிந்தை கொண்டு அனைவரும் இன்புற்று அன்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.

கே. என். டக்ளஸ் தேவானந்தா
பாரம்பரிய கைத்தொழில்மற்றும் சிறுகைத்தொழில்
முயற்சி அபிவிருத்தி அமைச்சர்



## ஆலய வரலாறு

கடைஞ்சிமால் என அழைக்கப்படும் குறிஞ்சியில் குடியிருந்த அமரர் சி.பொன்னையா, சி. சின்னையா, சி.சிவசுப்பிரமணியம் ஆகிய மூன்று சகோதரர்களும் பண்டு தொட்டு நொச்சிக்காட்டு வைரவர் அல்லது பட்டவேம்பு வைரவர் என நாமம் சூட்டி வைரவர் ஆலயத்திற்கு விளக்கு வைத்து வந்தார்கள். வருடம் தோறும் இவ்வாலயத்தில் சித்திர குப்த விரதநாளில் சித்திரைக் கஞ்சி வழங்கி வருவது வழக்கம். அமரர் பொன்னையாவின் மனைவி நாகம்மா என்பவர் ஆலயத்தின் அருகில் இருந்த வேலணை மத்திய ஐக்கிய பண்டகசாலை என்னும் கூப்பன் கடையில் கூப்பன் அரிசி வேண்டவரும் கிராம மக்களிடம் வாரம் தோறும் ஒருபிடி அரிசி தந்துதவுமாறு கேட்டு, அந்தப்பிடி அரிசியை அதே ஊர் மக்களுக்கு விற்று அதில் வரும் பணத்தைக் கொண்டு சூடம், தேங்காய் எண்ணெய் மற்றும் பூசைக்குரிய தேவையான பொருள்கள் வேண்டி வைரவரை வணங்கி விளக்கு வைத்து வந்தார்.

பட்ட வேம்பு வைரவரை இக்கிராம மக்கள் குலதெய்வமாக தங் களின் அசைக்கமுடியாத நம்பிக்கையில் வணங்கி வந்தார்கள். குடும் பத்தில் யாருக்கும் சுகயீனம் ஏற்பட்டால் பட்ட வேம்பு வைரவா என வேண்டித் தொழுது தங்கள் குறைகளைக் கூறி வைரவருக்கு சூடம் கொடுப்பார்கள். வைரவக் கடவுளும் அவர்களின் குறைகளைத் தீர்த்து கிராமத்தில் எந்தத் துன்பமும் நிகழாது காத்து வருகின்ற வேளையில் வைரவக் கடவுள் கிருபையால் 31.03.1965 ஆம் ஆண்டு முருகா என அழைக்கப்படும். மு.சி சிற்றம்பலம் அவர்கள் தனது அளவு கடந்த முருக பக்தியினால் வைரவர் ஆலயத்தையும் உள்வாங்கி அதன் அருகில் முருகன் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற அசைக்க முடியாத பக்தியில் ஒரு சபையை தனது தலைமையில் க.சதாசிவம், சோ.கந்தையா, ந.நாகலிங்கம், பே.கனகரத்தினம், ஆ.செல்லத்துரை, சு. சீவரத்தினம், ஈ.கே.ரி. தியாகராசா, சு.சிவகடாச்சம், வ.அருணகிரி இவர்கள் அனைவரையும் நிர்வாக சபையில் தெரிவு செய்து முருகன் ஆலய கட்டுமானப் பணிகளைச் செய்து கும்பாபிஷேக நிகழ்வும் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து நித்திய பூசைக்கு சிவாச்சாரியார் மகேஸ்வரக்குருக்களை நியமித்து பூசை வழிபாடுகள் நடைபெற்றன. விஷேடமாக நயினை ஆலய உற்சவத்தை முன்னிட்டு தாகசாந்தி வழங்கியதும் நல்லூர் முருகன் தேர்த்திருவிழாவுக்கு நயினையில் இருந்து வரும் பாதயாத்திரிகளுக்கு மதிய உணவு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

இடப்பெயர்வுக்குப் பின் 1997 ஆம் ஆண்டு வ. தியாகராசா ஆசிரியர் தலைமையில் நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு ஆலயத்திற்குரிய விஷேட பூசைகள் யாவும் சிறப்பாக நடைபெற்று வந்தன. 28.02.2002 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் திறம்பட நடைபெற்றது. தலைவர் வ. தியாகராசா அவர்கள் அமரரான படியால் தலைமைப்பதவிக்கு சோ.பசுபதி என்பவர் தெரிவு செய்யப்பட்டார். இவர் வெளிநாடு சென்ற படியால் உபதலைவராக இருந்த கை.மகேந்திரலிங்கம் தலைமையில் இவ்வாலயத்தின் நிகழ்வுகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

2010 ஆம் ஆண்டு ஆடி 14 ஆம் நாள் 30.07.2010 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று 08.08.2010 ஆடி 23 ஆம் நாள் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

ஆலய பரிபாலன சபையினர்.


### வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவுநகர், வங்களாவடிச் சந்தி, கூட்டுறவுநகர் துறையூர் நுகர்ச்சிச் சேவை, கிராமிய சேவை, எரிபொருள் நிரப்பு நிலையம், கட்டட மூலப்பொருள் விற்பனை நிலையம், ஒப்பந்த வேலை செய்து கொடுத்தல், அரைக்கும் ஆலை, உற்பத்திப் பகுதி, போட்டோ பிரதி சேவை, சுயமுயற்சிக் கடன் சேவை, பால் கொள்வனவு விற்பனை, மொத்த, சில்லறை வியாபாரம் மற்றும் நவீன கூட்டுறவு நகர் மூலம் மக்களுக்கு நியாய விலைக்கு தரமான பொருள்கள் விநியோகித் தல். T.P. 021 3211370
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வங்களாவடி,வேலணை.

### இந்திரா பல்பொருள் வாணிபம்

பத்திரிகை விநியோகஸ்தர்கள்
குறிக்கட்டுவான் வீதி,
வங்களாவடி, வேலணை.

### மைவிழி மரக்காலை

சகல விதமான மரங்கள், சிலாகைகள் சகல விதமான அளவுகளில் எந்நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை.

### துவாரகன் பான்சி ஹவுஸ்

அழகுசாதனப் பொருள்கள், பரிசில்பொருள்கள், விளையாட்டுப்பொருள்கள், அன்பளிப்புப்பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.03, வங்களாவடி, வேலணை.

### ஜீவா உணவகம்

சகல விதமான உணவுவகைகள் காலை, மாலை, மதியம் உணவு வகைகள் குறித்த நேரத்தில் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை.

### ரூபன் விவசாய விற்பனை நிலையம்

சகல விதமான உரவகைகள், கிருமிநாசினிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். T.P. 021 222 3154, 3161
07793352416, வங்களாவடி, வேலணை.

ஆசிரியர்கள், மாணவர்கள்
### ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை
வங்களாவடி, வேலணை.

### முத்து வெற்றிலைக் கடை

சுவையான தாம்பூலவாசனைகள் பெற்றுக்கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை.

### நியூ சோதி ஸ்ரோர்ஸ் - நிக்கடோ சோதி

NEW SOTHY STORES NICKADO SOTHY
பிரதான விற்பனை - கொமிசன் ஏஜென்ட்,
மொத்த, சில்லறை விற்பனை நிலையம்.
WHOLESALE DEALERS IN RICE & CEYLON AGENTS,
26, ST. Johns Road, Colombo - 11
T.P. No.: 2430572- 23377177

### ஆஞ்சநேயர் றேடர்ஸ்

பல்பொருள்வாணிபம் சகல பொருள்களும் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
இல.05 பிரதான வீதி, வங்களாவடி.

### மகாமாரி குளிரகம்

மகாமாரி ஒலி, ஒளி அமைப்பாளர்
சகல விதமான உணவு வகைகள், குளிர்பானங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை.

### விஜயன் வெதுப்பகம்

சகல விதமான சுவீற், கேக் வகைகள், ஐசிங் கேக் வகைகள் ஓடருக்கு குறித்த காலத்தில் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
வங்களாவடி, வேலணை.

### கஜமுகன் மல்ரி சொப்

அழகுசாதனப் பொருள்கள், பரிசில்பொருள்கள், விளையாட்டுப்பொருள்கள், அன்பளிப்புப்பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.
வங்களாவடி, வேலணை.

### தினேகா கிரைண்டிங் மில்

நெல் குற்றுதல், அரிசி, மிளகாய்த் தூள் அரைத்தல், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
வங்களாவடி, வேலணை.

### சண்முகானந்தா ரெக்ஸ்

சகல விதமான புடைவைகள் சூட்டிங், கோட் வகைகள் சிறுவர்களுக்கான புதிய டிசைனில் புடைவைகள் தரமான நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### விதுசன் உணவகம்

காலை, மதியம், மாலை உணவுவகைகள் ஓடருக்கு குறித்த நேர காலத்துக்கு செய்துதரப்படும்
இல.02, வங்களாவடிச்சந்தி, வேலணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேர்வின் சில்வா வருகிறார்




## கட்டிவைத்தவர் இனி வெற்றிலை கொடுக்கத் தயாராகிறார்

குழந்தைஒன்றுசாப்பிட மாட்டேன் என்று அழுது புரண்டுஅடம்பிடித்துக் கொண்டிருந்தது. அதன் அருகே வந்த தாய் ''அங்க மேர்வின் சில்வா வருகிறார். சாப்பிடாட்டி மரத்தோட கட்டிவைச்சிடுவார்.'' என்று பயமுறுத்தியதும், மறு பேச்சின்றி முழு உணவையும் தானே அள்ளி உண்ணத் தொடங்கிவிட்டது அந்தக் குழந்தை. இப்படி சிறு பிள்ளைக்கும் தெரிந்தவராகிவிட்டார் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா.

மேர்வின் சில்வா! பேரைக் கேட்டாலே சும்மா அதிருதில்லே! ஒரே நாளில் உலகம் எங்கும் பிரபல்யமாவது எப்படி? என்றொரு போட்டி வைத்தால் அதில் 'டெங்கு' புகழ் மேர்வின் சில்வாவை மிஞ்சுவதற்கு ஆளே கிடையாது. அத்துணை தூரம் அட்டகாச மான திட்டங்களுடன் தன்னை முடிந்த வரை பிரபல்யப்படுத்திக் கொண்டிருக்கிறார் மேர்வின் சில்வா. பிரபல்யமாவதில் பல விதங்கள் உண்டு. தங்கள் கடமைகளை மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமாகவும் தரமானதாகவும் செய்வதன் ஊடாக பலரது கவனத்தையும் ஈர்ப்பது ஒரு ரகம். இதைவிட தான் செய்யவேண்டியதைச் செய்யாமல் மற்றவர்கள் செய்வதையும் குழப்பியடித்துக் கொண்டு, வலிந்து சர்ச்சைகளை உருவாக்குவதன் ஊடாகவும் உடனடியாகப் பிரபல்யம் அடைந்துவிட முடியும். இதில் முதலாவது வகையில் பிரபல்யம் அடைய கடின உழைப்பும் நீண்ட காலமும் தேவை. இது நமது அமைச்சருக்கு ஒத்துக்கொள்ளாது என்பதால் இரண்டாவதும், இலகுவானதுமான வழியைத் தேர்ந்தெடுத்து ராஜ நடை போட்டு வருகின்றார் மேர்வின் சில்வா.

பழைய தமிழ்த் திரைப்பட நடிகர் 'இரத்தக் கண்ணீர்' புகழ் எம்.ஆர். ராதாவை உங்களில் பலருக்கும் தெரிந்திருக்கும். படங்களில் வில்லனாக வருகின்ற அதே வேளை தன்னுடைய கோமாளித்தனமான நடிப்பின் ஊடாக பார்ப்போரிடத்தே நகைச்சுவை உணர்வையும் தோற்றுவிக்கக் கூடியவர். இதுவே இவரது தனித்துவமாக மாறியதால் இன்று வரையும் சிலாகிக்கப்படுகின்ற நடிகராக - இறந்தபின்னும் - வாழ்கின்றார். மேர்வின் சில்வாவின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது ஏனோ எம்.ஆர் ராதாவின் விம்பமே மனக்கண்ணின் முன்னால் மேலெழுகின்றது. அடாவடித்தனமும்,அதை மற்றவர்கள் சிரிக்கும் வகையில் செய்வதும் மேர்வின் சில்வாவின் பாணியாகிப் போய்விட்டது.

இலங்கை அமைச்சரவையில் ஒரு சர்ச்சை நாயகனாகவே மேர்வின் சில்வா தொடர்ந்தும் அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றார். இந்த அடையாளத்தை அவரே விரும்பி - வலிந்து - உண்டாக்குகிறார். ஊடக நிறுவனங்கள் மீது - அதுவும் அரசுக்குச் சொந்தமான ரூபவாஹினி மீதும் - மேர்வின் சில்வா நிகழ்த்திய வன்முறைகள் அவரை முழு உலகுக்குமே வெளிச்சம் போட்டுக் காட்டியது. பல முறை தன்னுடைய முன்பின் யோசிக்காது வெளிவிடுகின்ற கருத்துக்களால் மஹிந்த அரசை சிக்கல்களிலும் மாட்டி விட்ட பெருமை இவருக்கு உண்டு.

பாடசாலைகளில் அதிகமாக குழப்படிகளில் ஈடுபடுகின்ற மாணவர்களை 'மொனிற்றர்களாக' நியமித்தால் அவர்கள் திருந்தி விடுவார்கள் என்பது வழிவழியாக வரும் ஒரு வாய்ப்பாடு. அதேபோன்று ஊடகங்கள் மீது எப்போதுமே ஒருவித 'காய்ச்சலோடு' அலைந்து திரிந்த மேர்வின் சில்வாவால் தொடர்ந்தும் சர்ச்சைகளில் சிக்கு வதைத் தவிர்ப்பதற்காக இம்முறை புதிய அரசாங்கத்தை அமைக்கும் போது ஊடகத்துறையின் பிரதி அமைச்சர் பதவி மேர்வின் சில்வாவுக்கு வழங்கப்பட்டது. இது நாள் வரையும் ஊடகங்கள் மீது வசைமாரி பொழிந்து வந்த மேர்வின் திடீரெனக் குத்துக்கரணம் அடித்து, ஊடகங்களை ஜனநாயகத்தின் உயிர் நாடி, அது இதுவென்று வானளாவப் புகழ்ந்து தள்ளினார். ஊடகவியலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அறிக்கை மேல் அறிக்கையாக வெளியிடத் தொடங்கினார். ஆனாலும் மேர்வினின் இத்தகைய பம்மாத்து விளையாட்டுகளுக்கு ஊடகவியலாளர்கள் மயங்கி விடவில்லை . பல்வேறு தரப்புகளிடமிருந்தும் அவரைக் குறித்த அமைச்சுப்பதவியில் இருந்து நீக்குமாறு அரசுக்கு அழுத்தங்கள் கழுத்தை நெரிக்கத் தொடங்கின. இதனால் ஒருசில நாள்களிலேயே ஊடகத் துறைப் பிரதி அமைச்சர் பதவி அவரிடம் இருந்து பிடுங்கப்பட்டு, நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

**மேர்வினுக்கு வாய்த்த டெங்குப் பிரச்சினை**

அப்போது கூட தன்னுடைய புத்தியை அவர் கைவிட்டாரில்லை. ஊடகத்துறை அமைச்சராக ஹெகலிய ரம்புக்வெல நியமிக்கப்பட்ட பின்னரும் கூட, தான் இன்னமும் ஊடகத் துறை பிரதி அமைச்சர் பதவிலேயே நீடிப்பதாகவும் 'கப்சா'விட்டார். பின்னர் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சராக எப்படிப் பிரபல்யமாவதென்று மண்டையைப் போட்டு உடைக்கத்தொடங்கினார். இவ்வாறு முன்னரைப் போல பிரபல்யத்தைத் தேடுவதற்கான வழியை அவர் தேடிக்கொண்டிருந்த போதுதான் 'டெங்கு' பிரச்சினை அவருக்கு வாய்த்தது.

இலங்கை முழுவதையுமே ஒரே நேரத்தில் ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் டெங்கு நோயை ஒழிக்க முடியாமல் அரசு தவித்து வருகின்றது. இதனால் பல்வேறு விதங்களில் டெங்கை ஒழிக்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. ஆயினும் அவையெல்லாம் ஆற்றில் எறிந்த கற்களாக எவ்வித பயனையும் தரவில்லை. வெட்ட வெட்ட முளைக்கும் அசுரத் தாவரம் போல தொடர்ந்தும் டெங்குவின் பேயாட்டம் தொடரவே செய்கிறது. டெங்கு நோயை உண்டு பண்ணும் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய குப்பை கூழங்கள், குட்டைகள், கழிவுப் பொருள்கள், அடர்ந்த பற்றைகள் என்பனவெல்லாம் விழிப்புணர்வு நடவடிக்கையின் போது அகற்றப்பட்டு சூழல் முழுவதும் சுத்தமாக்கப்பட்டாலும் கூட அத்தகைய நிலையைத் தொடர்ந்து பேணுவதில் எவரும் அக்கறை செலுத்துவதில்லை. இதனால் குறித்த பகுதி சுத்தமாக்கப்பட்ட ஒரு சில நாள்கள் மட்டும் வேறெங்காவது இடம்பெயர்ந்து செல்லும் நுளம்புகள் மீண்டும் அவ்விடத்தில் குப்பைகள் பெருகத் தொடங்கியதும் மீளக்குடியமர்ந்து விடுகின்றன. (எங்கள் நாட்டில் நுளம்புகளே மீளக்குடியமரும் போது நாம் மட்டும் ஏன் மீளக்குடியேற முடியாதுள்ளது? என்று போர் முடிந்த பின்னும், ஊரிழந்து இன்னும் அகதிகளாக அலைபவர்கள் கேட்பது காதில் விழவே செய்கின்றது) இதற்கு - சுத்தமாக்கப்பட்ட பகுதிகளில் சில நாள்களி லேயே தொடர்ந்தும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியா வதற்கு - அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கும், பொது மக்களின் அலட்சியமும் பெரிதும் துணைபுரிந்து விடுகின்றன.

இந்நிலையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் அசமந்தம் காட்டுகின்ற அரச அதிகாரிகளை கட்டி வைப்பேன் என்று கடந்த வாரம் மேர்வின் சில்வா பேட் டியளித்திருந்தார். வழக்கம் போல இதுவும் மேர்வினின் இன்னொரு 'புருடா' என்று தான் பலரும் நினைத்திருந்தனர். ஆனால் இவ்வாறு பேட்டியளித்த ஒரு சில நாள்களுக்குள்ளேயே டெங்கு ஒழிப்புத் தொடர்பான கூட்டம் ஒன்றுக்கு சமூகமளிக்கத் தவறிய களனிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமுர்த்தி அலுவலர் ஒருவரை தான் சொன்ன படியே மரத்திலே கயிற்றால் கட்டிவிட்டார் மேர்வின் சில்வா. மேர்வினே எதிர்பார்க்காத அளவுக்கு அவரை இந்தச் சம்பவம் பிரபலப்படுத்திவிட்டது.

சமுர்த்தி அதிகாரியை மேர்வின் கட்டி வைத்த விவகாரம் காட்டுத்தீ போல அடுத்த நொடியே ஊடகங்கள் வாயிலாகப் பரவி விட்டன. ஒரு அரச அதிகாரியைப் பலர் முன்னிலையில்- சட்டத்தை தன் கையில் எடுத்துக் கொண்டு - மிகக் கேவலமான வகையில் கண்டித்த மேர்வின் சில்வாவின் செயலைக் கண்டிக்காதவர்கள் எவருமே யில்லை. அமைச்சரவையில் அங்கம் வகித்துள்ளவர்கள் கூட மேர்வின் சில்வாவின் செயலை கண்டிக்கவே செய்துள்ளார்கள். இது தவிர நாடளாவிய ரீதியில் சமுர்த்தி அலுவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டங்களையும், வேலை நிறுத்தப் போராட்டங்களையும் முன்னெடுத்தனர்.

ஆரம்பத்தில் தான் செய்தது சரிதான் என்று வாதிட்ட மேர்வின் சில்வா, தன்மீதான எதிர்ப்பலைகளின் வேகம் அதிகரிப் பதைக் கண்டதும் மெல்ல மெல்ல தனது நிலைப்பாட்டை மாற்றத் தொடங்கி விட்டார். குறித்த சமுர்த்தி அலுவலரை தான் கட்டி வைக்கவில்லை எனவும், கடமையில் இருந்து தவறியமைக்காக மற்றவர்களுக்கு முன்னுதாரணமான வகையில் குறித்த சமுர்த்தி அலுவலர் தன்னைத் தானே கட்டிக்கொண்டார் எனவும் அவரை கட்டவிழ்த்துவிட்டது தான்தான் எனவும் இப்போது 'பிளேட்டை' மாற்றியிருக்கிறார்.

**வள்ளுவர் வழிக்குத் திரும்பும் போக்கு**

இது தவிர இனி வரும் காலங்களில் கடமையில் இருந்து தவறிய அரச அதிகாரிகளுக்கு இத்தகைய தண்டனையைக் கொடுக்காமல் அவர்களுக்கு வெற்றிலை வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 'இடிஅமீனின்' தடத்தில் பயணித்த அவர் இன்னா செய்தார்க்கும் இனியனவே செய்யும் வள்ளுவரின் வழிக்கு திரும்புவதற்கு நாடெங்கும் எழுந்த எதிர்ப்புணர்வே காரணம் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தனியே பொது மக்கள் மீதும் அரச அதிகாரிகள் மீதும் பழியைப் போட்டு தப்பிப்பதை அரசும் வழக்கமாகக் கொண்டுள்ளது. உண்மையில் அரசு நினைத்தால் ஒரு வாரத்துக்குள்ளேயே இலங்கை பூராகவும் டெங்கு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும். சில காலங்களுக்கு முன்னர் கியூபாவில் இவ்வாறு டெங்கு நோய் தீவிரமாகத் தலைவிரித்தாடிய

**- ஔண்யன் -**

போது அதனைக் கட்டுப்படுத்த டெங்கு நுளம்புகளை நொடியிலேயே அழிக்க 'பி.ரி.ஐ.' பக்றீரியாத் திரவம் விசிறப்பட்டது. அடுத்த ஒரு சில வாரங்களுக்குள்ளேயே கியூபாவில் டெங்கு நோய் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டது. 'பி.ரி.ஐ.' பக்றீரியாத் திரவத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்து விமானம் மூலம் அதனை விசிறி டெங்கு நோயை ஒழிக்கப்போவதாக அரசு அறிவித்திருந்தது. ஆனால் அதற்கு மிகப் பெருந்தொகையான பணம் தேவைப்படும் என்பதால் 'பி.ரி.ஐ.' பக்றீரியாத் திரவத்தை வீடுவீடாக விநியோகிக்கப் போவதாகப் பின்னர் கூறப்பட்டது. கடைசியில் 'பி.ரி.ஐ.' பக்றீரியாத் திரவத்தை இறக்குமதி செய்யும் திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிகின்றது.

இவ்வாறு அரசே தவறு செய்கையில் அரச அதிகாரிகளைத் தண்டித்து என்ன பயன்? அதுவும் ஓர் அமைச்சர் தன் இஷ்டப்படி ஒரு அதிகாரியைத் தண்டித்தது நியாயமற்ற செயல் தானே. தான் மரத்தோடு கட்டி வைக்கப்பட்டிருந்த விடயம் உலகமெங்கும் பரவிவிட்ட அவமானத்தாலோ அல்லது மேர்வின் சில்வாவாலோ அல்லது அவரது அடிப்பொடிகளாலோ தான் பழிவாங்கப்பட்டு விடக் கூடுமோ என்ற அச்சத்தில் அந்தச் சமுர்த்தி அலுவலர் சம்பவம் நிகழ்ந்த ஓரிரு தினங்களில் தலைமறைவாகி விட்டார்.

குறித்த அதிகாரி தவறு செய்திருந்தால் அவரைத் தண்டிக்க சட்ட ரீதியாகப் பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அதை விடுத்து தனக்குப் பிரபல்யம் தேடுவதற்காக ஒட்டுமொத்த அரச அதிகாரிகளையும் அவமானப்படுத்துவது போல் செயற்பட்ட மேர்வின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு தயங்குவதும் அரச அதிகாரிகள் மத்தியிலேயே மஹிந்த அரசின் மீதான நம்பிக்கையீனத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இதேவேளை மேர்வின் சில்வா குறித்த சமுர்த்தி அலுவலரை கட்டி வைத்த சம்பவம் தொடர்பாக யாரேனும் முறைப்பாடு செய்தால் அது குறித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராகவே உள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா? நாடு முழுவதும் பகிரங்கப்படுத்தப்பட்ட குற்றம் ஒன்றுக்கு முறைப்பாடு செய்த




பின்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பது அபத்தமான விடயம்தானே. தங்கள் தவறுகளை மறைக்க பிறர் மீது பழிபோட்டு தப்பித்துக் கொள்ளும் மனோபாவம் இருக்கும் வரை நம் நாட்டில் டெங்கு போன்ற கொடிய நோய்களும் இருக்கத்தானே செய்யும்? ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது காரைநகர் பிரதேசசபையில் தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.மு.கணேசநாயகம் அவர்களின் அன்புத்தந்தை

**அமரர் பொன்னுத்துரை முத்துச்சாமி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு:15.07.1926
இறப்பு:09.07.2010

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேசசபை, காரைநகர்.

## திருமண சேவை

15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல்அமுதன் பாரிய சேவைக் கட்டணக் குறைப்பு! விவரங்களைச் சுய தெரிவு முறை முன்னோடி, சர்வதேச, மூத்த, திருமண ஆற்றுப்படுத்துநர் வேல்அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி மாலையிலோ சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்பு கொண்டு விசாரித்தறிக!

தொ.பே:0112360488,
0112360694,
0114873979

## வேலையாள்கள் தேவை

**வவுனியாவின் பிரபலமான Hotel ஒன்றுக்கு ஆள்கள் தேவை. சமையல் தெரிந்தவர்கள், சமையல் உதவியாளர்கள், Room Boy போன்ற வேலையாள்கள் உடன் தேவை.**

Hot- line: 0242222074

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

3½ மாதம் நிரம்பிய சகல தடுப்பூசிகளும் ஏற்றப்பட்ட "டாஸ்சோன்" நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
077 1350082

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சகல வசதிகளும் அமையப் பெற்ற இடத்திலுள்ள லொட்ஜில், மாதாந்த மற்றும் நாளாந்த வாடகைக்கு பல தரங்களிலமைந்த அறைகள் விடப்படும். குறைந்த கட்டணங்களில் நிறைந்த பயனை அடைய நாடுங்கள்.

இல.8, புகையிரத - வீதி, வெள்ளவத்தை.
தொலைபேசி
எண் : 011 2504281



**STUDY & WORK IN UK**
**NO NEED IELTS**

**SPOT ADMISSION**

Place : 4, IBC Road, Wellawatte, Colombo 6.
Date : 14th August 2010
Time : 10.00am to 4.00pm

For appointment please contact : 0777-761346

**OUR SERVICE ABSOLUTELY FREE**
BEFORE THE VISA OR AFTER GETTING VISA

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.8

வல்வை நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை தேர்த்திரு விழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.(204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.8

மட்டுவில்கிழக்கு, புதரன்கேணி வளவு மாகாளி அம்பாள் திருவருட்கூடத்தின் ஆடிப்பூரப் பெருஞ் சாந்திவிழா எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

அம்பாள்புலிவாகனத்தில் கொலுவீற்றிருக்க பாதபூஜை, ருதுசாந்தி விசேட பிரார்த்தனை, திருநடனம் ஆகியவை இடம் பெற்று பி.ப. 5 மணிக்கு விசேட பூஜை, திருவூஞ்சல் உற்சவம் என்பனவும் இடம்பெறும்.
(204-207)

## விண்ணப்பம் கோரல்

கொழும்பு,ஓக.8

சிறைச்சாலைத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள சிறைக் காவலர், நலன்புரி அலுவலர் பதவிகளுக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அடுத்தமாதம் 3ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும் - மேலதிக விவரங்களுக்கு இந்தமாதம் ஆறாம் திகதிய 1666ஆம் இலக்க அரச வர்த்தமானியைப் பார்வையிடவும். (க)

## CSE
COLOMBO STOCK EXCHANGE

கௌரவம் மிக்க தொழில்சார் குழுவின் ஒரு அங்கமாக......

கொழும்பு பங்குப்பரிவர்த்தனையானது (Colombo Stock Exchange) இலங்கையில் பங்குச்சந்தை செயற்பாடுகளுக்கான அடிக்கட்டுமான வசதிகள் மற்றும் முறைமைப்படுத்தல் செயல்முறைகளை பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது. எமது நோக்காக சொத்து மற்றும் பெறுமதி உருவாக்கத்திற்கான விருப்பத்தெரிவுகளில் முதன்மையான தெரிவாக அமைந்திருத்தல்.

நாங்கள் ஆரோக்கியமான, புத்தாக்கமுடைய மற்றும் பரந்த வெளிப்படைத்தன்மையுடைய ஒரு மூலதனச்சந்தையை உருவாக்குவதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளோம். எமது நோக்கினை அடைவதற்கு வினைத்திறனான நடுநிலமையுடன் கூடிய மனிதவளத் தெரிவு அவசியம்.

எமது குழுவில் பொருத்தமான மனப்பாங்கினைக் கொண்ட சுறுசுறுப்பான புத்தாக்க முயற்சியுடைய நபர்கள் எம்முடன் இணைந்துகொள்வதனை நாம் விரும்புகின்றோம்.

நிறைவேற்று அதிகாரி – யாழ்ப்பாணக் கிளை
**Executive - Jaffna Branch**

தொழில் விபரணக் குறிப்பு – **Job Profile**
தொழிலின் மையக்கடமைகளாக செயற்திறனுள்ள முதலீட்டாளர்கள் மற்றும் பங்குச்சந்தை தொடர்பான அக்கறையுடைய கட்சியினருக்குத் தேவையான அறிவுசார் தொழிற்பட்டறைகள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்கமைத்து நடாத்துதல். அவை தொடர்பான வினாக்களுக்கு பதிலளித்தல், காலக்கிரமமாக தகவல்கள் மற்றும் தரவு நிரல்களைப் பேணுதல் அத்துடன் கிளைநிறுவனத்தின் நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்றவை அமைகின்றன.

தனிப்பட்ட தகைமைகள் - **Personal Profile**
விண்ணப்பதாரர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பின்வரும் ஏதேனும் ஒரு துறையில் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், வர்த்தகம் மற்றும் பொருளியலில் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
அத்துடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் திறமையாக எழுத, உரையாடக் கூடிய தொடர்பாடல் திறன் உடையவராக இருத்தல். அத்துடன் கணனி அறிவும் அவசியம். மேலும் மூலதனச்சந்தை தொடர்பான முன்அனுபவம் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரர் 30 வயதிற்கு உட்பட்டவரும், யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான வேதனமும் ஏனைய அனுகூலங்களும் வழங்கப்படும்.

உங்கள் சுயவிபரக்கோவை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தப்பட்டிருப்பதுடன, இரண்டு உறவினர்கள் அல்லாத சிபார்சு செய்பவர்களின் பெயர் விபரங்களை உள்ளடக்கியதாக அமைவதுடன் 2010ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20ஆம் திகதிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு கீழ்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

குறிப்பு:- தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான பெயரினைக் குறிப்பிடவும்.

Head of Human Resource
**Colombo Stock Exchange**
Level 4, West Block, World Trade Centre
Echelon Square, Colombo 1.
E-mail: vacancies@cse.lk

## STUDENT VISA
## (SPOT ADMISSION)

- UK, Australia, Malaysia, Singapore, Belarus, Russia
  - சகல விதமான கற்கை நெறிகளுக்கும் ( including Medicine, Engineering )
  - வங்கி நிலுவை ஏற்பாடுகள்.
- Skilled Migration - Canada.
- Minimum Qualification - (O/L)

Consultation by.
Dr.M.Mylashan MBBS (Sri Lanka)
Director,
Overseas Students' Programme (pvt)LTD
T.P: 0777 250555, 0715231023

Kopay South,
Jaffna.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்னை மடியில்
13 * 06 * 1932



ஆண்டவன் அடியில்
09 * 07 * 2010

**சீனித்தம்பி இராஜேஸ்வரி**
(குரும்பசிட்டி)

அன்பிற்கு இலக்கணமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
நேற்றுவரை இருந்த உங்களை
தினமும் நினைத்து வாடுகின்றோம்.

கடந்த 09.07.2010 அன்று நீர்வேலியில் இறைவனடி சேர்ந்த குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சீனித்தம்பி இராஜேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை நீர்வேலியில் உள்ள அவரின் மகள் சிவகௌரியின் இல்லத்தில் நடைபெறும்.

தொ.பே.: 004722655031
(Norway)

(101674)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை கனகலிங்கம்



யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள யாழ்.வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கனகலிங்கம் 05.08.2010 (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் லில்லிபுஷ்பத்தின் (செல்லா) அன்புக் கணவரும் துஷ்யந்தன், குருசார், டிலுக், துர்க்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னபூரணம் மனோறஞ்சினி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற ராசேந்திரம் மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விஜயகாந் மற்றும் ராஜேஸ்வரன், பரவின் சந்திரா, யோசப் தர்மநாயகம் (துரை), ஜரின் அஞ்சலா (குட்டி), புனிதவதி (சாந்தா), ஞானசீலி (காந்தா) ஆகியோரின் மைத்துனரும் நிஷாந்தன், பிரசன்னா, பாமதி, ராஜினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

339, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நூலியர்
கொர்னேலியஸ் M.M.C

## செயல்பாட்டை அதிகரிப்பதுடன் உங்கள் சரீரத்தை கச்சிதமாக வைத்திருக்க உதவுகிறது

Betty Lou's®
சீனி அற்ற புரோட்டீன் சத்து பானம்

குளுக்கோஸ் கட்டுப்பாட்டு உணவுகள் நிறை கட்டுப்பாடு என்பனவற்றுக்கு Betty Lou's கச்சிதமானது, சுறுசுறுப்பான பூரணமான வாழ்க்கைக்கும் உடம்மை ஊட்டத்துடன் பேணவும் உதவுவதுடன் மேலதிக சுவையை அளிக்கின்றது

Betty Lou s உணவுகளுக்கு பதிலாக பாவிக்க கூடிய ஆரோக்கியம் வழங்கும் பகல் போசணமாக விளங்குகிறது. இதில் அடங்கியுள்ள தாதுப்பொருட்கள் மற்றும் மினரல்கள் உடன் சமிபாடடைவதற்கும் ஏற்றதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

தண்ணீரில் உடனடியாக கலக்கின்றது.
உயர் தர பால் மற்றும் அரிசி புரோட்டீன் அடங்கியுள்ளது. கடல் மினரல் உட்பட அதிக உயர்சத்துகளும் கனிபொருட்களும் உள்ளடங்கியுள்ளன.

உங்களுக்கு ஊட்டமளிக்கும் சக்தி அளிக்கும்!





சந்தைப்படுத்துவோர்
வரையறுக்கப்பட்ட சூரி ட்ரேடிங் (தனியார்) கம்பனி
தொலைபேசி: + 94 11 4810251, ஈமெயில்: info@suritrading.com
City Medicals- Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகளும் விடைகளும்

01. அக்கா விதைத்த முத்து அள்ள முடியாத முத்து அது என்ன?
02. அவனுக்கு ஒரு முறை பல் விழுந்தால் மறு முறை முளைக்காது அது என்ன?
03. அகன்ற வாய் உடையவன் திறந்த வாய் மூடாதவன் அவர் யார்?
04. அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது அது என்ன?
05. அள்ளலாம் கிள்ள முடியாது அது என்ன?

05. [illegible]
04. [illegible]
03. [illegible]
02. [illegible]
01. [illegible]

சி. நேருஜா, தரம்8
யா/ இந்து மகளிர் கல்லூரி.

## இறப்பை நினைத்து பயப்படாதே!



ஒரு நாள் கப்பலில் பல பயணிகள் பயணம் செய்தனர். அந்தக் கப்பலை ஓட்டும் மாலுமி கப்பலை வேகமாக ஓட்டினார். பயமடைந்த பயணிகள் அவரைப் பார்த்து இவ்வளவு வேகமாக ஓட்டுகிறீர்களே, இறந்து விடுவோம் என்ற பயம் இல்லையா? என்றனர். மாலுமி எதுவும் பேசாமல் இருந்தான். மீண்டும் அவனைப் பார்த்து உங்கள் தந்தை எவ்வாறு இறந்தார் என்றனர். உடனே அவன் கப்பல் விபத்தில் என்றான். உங்கள் தந்தையின் தந்தை எவ்வாறு இறந்தார் என்றனர். அவரும் கப்பல் விபத்தில் என்றான். இப்படி இருக்கும்போது எப்படி பயமில்லாமல் ஓட்டுகிறீர்கள் என்றனர். அவன் அவர்களைக் உங்கள் அப்பா எவ்வாறு இறந்தர் என்று கேட்டான். அவர்கள் படுக்கையில் என்று கூறினார்கள். உங்களின் அப்பாவின் அப்பா எவ்வாறு இறந்தார் என்றான் அவரும் படுக்கையில் என்றனர். இப்படி இருக்கும்போது எப்படி நீங்கள் பயமில்லாமல் படுக்கையில் படுக்கின்றீர்கள் என்றான். அவர்கள் பதில் ஏதும் சொல்லாமல் நின்றனர். அம் மாலுமி சொன்னான் இறப்பை நினைத்து ஒரு போது பயப்படக்கூடாது என்றான். அவர்களும் தலையை ஆட்டினார்கள்.

எம். ரோஷானி, பெந்திகோஸ்த வீதி, யாழ்ப்பாணம்.

## அம்மா!



தாயென்றும் அன்னை என்றும்
தரணியிலே உருவெடுத்து
தவமிருந்து எம்மைப் பெற்ற
நடமாடும் தெய்வம் அம்மா!

பாடசாலை அனுப்பி வைக்க
பாதை வரை கூட்டிவந்து
பாசத்துடன் கட்டியணைத்து
கையசைப்பாள் எமதன்னை!

எத்தனை துன்பங்களோ அத்தனையும்
அத்திபாரமாய் தான் தாங்கி – எம்மை
கோபுரமாய் உயர்த்தி நிற்கும்
கோயிலே எம் அன்னை!

காஜானி, தரம் 3,
யா/ வயாவிளான் மத்திய மகா வித்தி.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..........................................
தரம் :-..........................................
பாடசாலை :-..........................................
..........................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

## சிறுவர் கதிர்

### உங்களுக்கும் பரிசில்கள்
### விடை தெரியுமா? 68

1. விமான விபத்துக்கான காரணத்தை கண்டறியும் கறுப்பு பெட்டியை வடிவமைத்தவர் யார்?
2. நண்பர்கள் தினம் கொண்டாடப்படும் நாள்?
3. உலகிலேயே மிகப் பெரிய கோள் மண்டலம் உள்ள நாடு எது?
4. உடலில் மாற்ற முடியாத ஒரே ஒரு உறுப்பு எது?
5. பாலைவனக் கப்பல் என அழைக்கப்படும் மிருகம் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 16.08.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.


### விடை தெரியுமா?
### 66 இற்கான சரியான விடைகள்

1. இஸபல் குரேரா அம்மையார்
2. என். வித்தியாதரன்
3. முத்தையா முரளிதரன்
4. நெல்சன் மண்டேலா
5. 136 ஏ.எல்

### பரிசுபெறுவோர் விவரம்

1. கு. அயிலவன், தரம் 06,
யா/ இந்து கல்லூரி யாழ்ப்பாணம்.
2. அ. விஜிதா, தரம் 9B,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
3. இ. நிருத்திகா,
யா/ கதீட்ரல்றேசரி, வட்டுக்கோட்டை.
4. அ. அனுசியா, தரம் 13,
யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகா வித்தி.
5. ஜெ. துவாரகா, தரம் 4C,
யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

## மாணவத் தூரிகை



சாருஷா,
கமலிற்றகூலை முசேல்ஸ்ராச, ஜேர்மனி.



இ. ஆத்மன், தரம் -7A,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.



க. அச்சுதன், தரம் -6B,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



மு. பவித்திரன், தரம் -9,
யா/மட்டுவில் அமெரிக்கன் மிசன் த.க.வி



ப. தமிழினி, தரம் 5,
யா/ இனுவில் மத்திய கல்லூரி.



ஜீ. ஜ[illegible], தரம் 5,
யா/அரு[illegible]



[illegible], தரம் -3C,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.



க. மதுதரன், தரம் -7,
யா/அராலி சரஸ்வதி மகா வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

1.11.1976இல் ஆசிரியர் சேவையில் இணைந்து
யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலையிலும், யா/மெதடிஸ்த
பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் சேவையாற்றி, எமது
பாடசாலையில் 13 ஆண்டுகள்
சேவையாற்றி
08.08.2010 இல்
ஓய்வுபெறும் அதிபர்



**திருமதி**
**ஸ்ரீவடிவாம்பிகை சிவராசா**
**(B.A. Hons, Dip in Edu.)**
இ.அ.சே. 2-I அவர்களையும்
அவர்தம் சேவையினையும்
பாராட்டி வாழ்த்துவதில்
பாடசாலைச் சமூகத்தினராகிய
நாம் பெருமையடைகின்றோம்.
மேலும் அவர் தமது
ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும் நலமாக வாழ எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
**திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம்.**

## கரைச்சி கிழக்கில் இன்று பதிவுகள்

கண்டாவளை, ஒக. 8

கரைச்சிகிழக்குப் பகுதியைச் சேர்ந்த வெளிமாவட்டங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான மீள்குடியமர்வுப் பதிவுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை அவர்களது சொந்த இடங்களில் கிராமசேவகர்பிரிவுகளில்நடைபெறவுள்ளன.

இதில் இதுவரை மீள் குடியேற்றப் பதிவுகளை மேற்கொள்ளாது வெளிமாவட்டங்களில் தங்கியுள்ள மக்கள் தங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-10-405-432)

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் – கிளிநொச்சி பயிலுநர்களுக்கான விண்ணப்பம் கோரல்

கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு பயிலுநர்களை நியமித்து பயிற்சியளிப்பதற்கு தகைமை யுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

01. களஞ்சிய முகாமையாளர் பதவி

தகைமைகள்

* கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறிச் (சாதாரண தீரம்) சான்றிதழ் அல்லது கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் தமிழ்மொழி அல்லது சிங்களமொழி உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* வயதெல்லை 18-45
* சம்பளம்: பயிற்சிக்காலத்திற்கு ரூபா 9000.00 (கடமை புரியும் நாட்களுக்கு நாளாந்த அடிப்படையில் கணிக்கப்படும்)
* விண்ணப்ப முடிவு திகதி: 18.08.2010

02. விற்பனை உதவியாளர் பதவி

தகைமைகள்

* கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறிச் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.சாதாரணதரத்தில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் தமிழ்மொழி அல்லது சிங்களமொழி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை 18-45
* சம்பளம்: பயிற்சிக்காலத்திற்கு ரூபா 8000.00 (கடமைபுரியும் நாள்களுக்கு நாளாந்த அடிப்படையில் கணிக்கப்படும்)
* விண்ணப்ப முடிவுத்திகதி: 16.08.2010
* சங்க எல்லைப்பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் நிழற்பிரதிகளை இணைக்கவும்.

மேற்படி பதவிகளுக்கு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கனகபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரிலோ பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி.

## வேலை வாய்ப்பு

ஆசியாவிலே முதல்தர நிறுவனத்தில் அதிக வருமானத்தைப் பெறக்கூடிய வேலைவாய்ப்பு.
யாழ்.மாவட்டத்தில் வசிப்பவர்கள்
O/L இல் கணிதம் உட்பட 5 பாடம்
சித்தியடைந்தவர்கள் ஆண், பெண்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: R.அமல அருள்ராஜன்,
560, Hospital Road, Jaffna.
E-mail: anpukodu@gmail.com
Telephone: 0777565157
(101560)

## உதவி முகாமையாளர் தேவை

நிதி நிறுவனம் ஒன்றுக்கான உதவி முகாமையாளர் தேவை.

தராதரம்:

* G.C.E. A/L சித்தியடைந்தவராக இருத்தல்.
* சிங்களம், ஆங்கிலம் கதைக்கக் கூடியவராக இருத்தல்.

நேர்முகப் பரீட்சை:
நாளை (10.08.2010) செவ்வாய்க்கிழமை
மு.ப. 10.30 - பி.ப. 5 (நேரடியாக சமுகம் தரவும்)
தொடர்புகளுக்கு:
**Kalutota Financial Service Pvt Ltd.**
88, Martin lane, Hospital Road, Jaffna.
T.P.: 0777710585 (101557)

## STUDY IN LONDON
## STUDY IN INDIA



* O/L சித்தி மாத்திரம் போதுமானது
* University / College Admission
* தேவையான Document ஒழுங்குகள்
* முன்றே வாரத்தில் விசாவுக்கான ஒழுங்குகள்
* பணரீதியான ஒழுங்குகள் (Sponsor)
* 100% விசாவுக்கான ஒழுங்கமைப்புகள்

100% GUARANTEE VISA JOB BOARDING

UK - 650000 to 750000 } 1 YEAR
INDIA - 250000 to 300000 } TOTAL

ISO CERTIFIED INSTITUTION
HND-BBA-BA-BSc-MA-MSc-BEng-B.Com-MBBS, PhD-IT-LLM-LLB-PGDip-MPharm-computer& ect
LAWYERS: Mr M. DINESH - Mr.M.ZAHIR - Miss.SUBASINY

**INTERNATIONAL CITY COLLEGE**
No: 07,W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06,
10 METERS FROM GALLE ROAD Tel : 0114 594 104 , fax: 0112 582722
தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 0771250789

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 ★ 05 ★ 1930 | 09 ★ 07 ★ 2010 |



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**திருமதி குமாரலிங்கம் செல்லம்மா**

எல்லோர்க்கும் அன்னையாய்
எம்தாயே நீரிருந்தீர்!
பேதமொன்று நாமறியோம்!
உணவோடு அறிவுரையும்
ஊட்டி யெமைவளர்த்தீர்!
கலிகாலக் காலனவன்
உம் கணக்கை முடித்துவைக்க
வானுலகு சென்றனையோ
உமதாத்மா சாந்திபெற! - எந்நாளும்
நாமுமக்காய் வேண்டுகிறோம்
அரனடியில் நீர்பெறுக சாந்தி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விளாத்தியடி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம், இந்து (கௌரவ குடும்பம்) சைவபோசனம், 1982, உத்தராடம் - 2, உயரம் 5'6'', 8 இல் செவ்வாய் கிரகபாவம் 45¾, M.B.B.S. டாக்டர் மணமகளுக்கு, டாக்டர் அல்லது பொறியியலாளர் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: 021 300 2548

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம், இந்து, 1981.01.09 பிறந்த அவிட்டம் 3, பாவம் 16, செவ்வாய் தோசம் இல்லாத 5'.5'' உயரம், சொந்த வாகனம் வைத்து வியாபாரம் செய்பவர். தற்போது கிளிநொச்சியில் வசிக்கிறார். எவ்வித தீயபழக்கமும் இல்லாத மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 021 320 0287
காலை 6 மணி - 9 மணிவரை
மாலை 5 மணி - 9 மணிவரை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 ★ 06 ★ 1966 | 09 ★ 07 ★ 2010 |



**கந்தையா சிவகுமார்**

எமது மகன் சிவகுமாரின் மறைவுச் செய்திகேட்டு வருகை தந்தோர், வருகை தரமுடியாமல் தொலைபேசியில் துயர் பகிர்ந்தோர் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடந்த 09.07.2010 அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகன் சிவகுமார் அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தருமாறும் சபிண்டீகரண நிகழ்வு நிறைவுற்று தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி. (101654)

சி.கந்தையா, க.வாமதேவி
(தந்தை, தாய்).

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், 4 ஆம் குறுக்குத்தெரு, O.L.R சேச்சிற்கு அருகாமையில் 2¾ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
T.P.0774562810, 021 7900337

## விற்பனைக்கு

NP-II இலக்கமுடைய isusu ரக டிப்பர் வாகனம் (1 கியூப்) விற்பனைக்குண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
0777432665, 0770650730

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட 42 வயது சதய நட்சத்திரத்தை உடைய மணமகளுக்கு ஏற்ற மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்பு கொள்ள வேண்டிய
தொ.பே.இல. 0778591276

## வீடு விற்பனைக்குண்டு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக்காணியுடன் கூடிய வீடும், 3 பரப்புக்காணியுடன் [illegible]
தொடர்பு: 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி,
[illegible]

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



**முருகேசு திருஞானம்**
**(நல்லையா)**
திதி: திரயோதசி
(08.08.2010)

தாயின் மடியில்
25.07.1949

இறைவன் அடியில்
30.07.2008

தேன் உண்ணத் தந்துவிட்டு தேனீக்கள் பறந்துவிடும்
மழைநீரைப் பொழிந்துவிட்டு மேகங்கள் கலையும்
பாதைக்கு வழிகாட்டி பகலவனும் மறையும்
சுடர் ஏற்றி வைத்தவர் சுடராகி நிற்கின்றார் - இனி
எங்கே தேடுவது எம் - இனிய அப்பாவை!

நிரந்தர முகவரி:
146/1, சிவன் வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு.

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**
இல. 411, கேயில் வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துவெளித் தொன்மையைத் தமிழுடன் இணைக்கும் பல சான்றாதாரங்கள் கண்காட்சிக் கூடத்தில்

கண்காட்சி அரங்கத்தைப் பார்வையிடுவது கடினமான காரியம் எனப் பேராளர்கள் பலரும் பேசிக் கொண்டனர். கண்காட்சியைப் பார்வையிட அதிகாலை முதல் மக்கள் நீண்ட வரிசையில் தவம் கிடக்கின்றனர் எனவும், சுமார் 3 கிலோமீற்றர் நீளத்திற்கு வரிசையில் நிற்கின்றனர் எனவும் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



கார்ட்டில்ஹா நூலின் முதல் பக்கம்

முதல் நான்கு நாள்களில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் கண்காட்சியைப் பார்வையிட்டிருப்பதாகவும் ஒரு நாளில் 13 மணி நேரம் பார்வையிடுவதற்காக அனுமதிக்கப்படுவதாகவும் தகவல்கள் அறிந்தோம். வரிசையில் தவம் கிடப்போருக்குக் கோப்பி தேநீர் விற்றுச் சிலர் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தனர். எப்பாடுபட்டேனும் கண்காட்சியைப் பார்வையிடுவதென நண்பர் எஸ்.எஸ். ஆனந்தன் தெம்பூட்டினார். எமக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அடையாள அட்டையைக் கழுத்தில் தொழுவியவாறு பிரமுகர்களுக்கான வழியூடாகக் கண்காட்சி அரங்கினுள் நுழைந்தோம். "நாங்கள் கட்டுரையாளர்கள்". எமது அடையாள

## உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - 2010 05

## யாழ்கனின் ஒரு பார்வை

அட்டையில் உள்ள பதத்தை வாயினால் உச்சரித்து அறிமுகம் செய்தார் ஆனந்தன். காவலர் முகத்தில் கோபக்கனல் கொழுந்து விட்டபடியிருந்தது. "லைன்ல வாங்க சார்" அலட்சியமாகக் கிடைத்த பதில் எம்முள் வேல் போல் பாய்ந்தது. சரி, ஆங்கிலத்தில் ஒரு முறை கூறிப்பார்ப்போம் என முயற்சித்தேன். "சார், வீ ஆர் பேப்பர் பிரசன்ரேர்ஸ் புறோம் சிறிலங்கா." "அப்பிடீங்களா? இதை முன்னாடியே சொல்லியிருக்கப்படாதா?" செல்லமாகக் கடிந்து கொண்டார் அதிகாரி. "உள்ளே வாங்க சார்." நம்மூர்த் தனியார் மருத்துவமனை வைத்தியரின் பாணியில் குழைவாகப் பேசினார். கம்பீரமாக உள்ளே சென்றோம். அவர் அக்கணத்தில் செய்த மரியாதையைப் பார்த்துக் கூட நின்றவர்களும் குட்மோனிங் சார் எனக் கூறிக் கொண்டனர். பதிலுக்கு "வணக்கம்" என்றவாறு உள்நோக்கி நடந்தோம்.



தம்பிரான் வணக்கம் நூலின் முதல் பக்கம்

கண்காட்சி அரங்கின் வாயிலில் மிகப் பிரமாண்டமான மங்கல விளக்கு எம்மை வரவேற்றது. கண்காட்சியைப் பார்வையிடுவதற்குக் கூட்டம் அதிகமாயிருந்ததால் ஆறுதலாக நின்று பார்வையிடுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. "முன்னாடிப் போங்க சார். போங்க..." என்ற வேண்டுதலைக் காவலர்கள் ஓயாமல் சொல்லிய வண்ணம் இருந்தனர்.

மொழியொன்றின் வரலாற்றுக்கான மூலாதாரங்களாகப் பல்வேறு மூலங்கள் அமைந்துள்ளன. புதைபொருளாய்வுகள், கல்வெட்டுச் சான்றுகள், இலக்கியங்கள் முதலியன அவற்றுள் முக்கியமானவை. இத்தகைய மூலாதாரங்கள் மூலம் தமிழின் செம்மொழித் தகுதியை நிறுவும் வகையில் கண்காட்சி வடிவமைக்கப்பட்டிருந்தது.

உலகத் தொன்மிகு நாகரிகங்களுள் முன்முது நாகரிகமாக விளங்குவது சிந்துவெளி நாகரிகம். சுமேரிய, எகிப்து, பாபிலோனியம் போன்ற தொன்மிகு நாகரிகங்களைவிட சிந்து வெளி நாகரிகம் இடப்பரப்பில் பெரியது. அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்களின்படி, சிந்து வெளி எழுத்துக்கள் இந்தியா முழுவதும் பரவியிருந்ததாகவும் ஈழத்திலும் நிலைகொண்டதாகவும் பேராசிரியர் இரா.மதிவாணன் குறிப்பிடுகின்றார். ஜோன் மார்ஷல் போன்றோரது ஆய்வுகள் சிந்து வெளி நாகரிகம் திராவிடர்களுக்குரியது என்ற உண்மையைப் புலப்படுத்தியது. ஆயினும் இங்கு கிடைக்கப்பெற்றுள்ள முத்திரைகளிலும் பானை ஓடுகளிலும் உள்ள அடையாளங்கள் பற்றிப் பலத்த வாதப் பிரதிவாதங்கள் நிலவி வந்தன. இவை, எழுத்துக்களே அல்ல. வெறும் அடையாளக் குறியீடுகளாகும் என அமெரிக்கப் பேராசிரியர்கள் மூவர் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் இவ்வடையாளங்கள் சிந்து வெளி எழுத்துருவங்கள் என்றும் இது திராவிட மொழிக்குரியதென்றும் பேராசிரியர் அஸ்கோ பார்ப்போலா, ஐ.மகாதேவன் போன்றோர் அண்மையில் நிறுவியிருக்கின்றனர். சுவஸ்திகா எனப்படும் ஓங்காரக் குறியீடு சிந்து வெளிக்காலத்திலிருந்து இன்று வரை தொடர்ந்து நீடிக்கிறது என்றும் இந்தக் குறியீடு கி.மு. 6000 சார்ந்த மெகர்கார் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது எனவும் பேராசிரியர் இரா.மதிவாணன் குறிப்பிடுகின்றார். இந்த அடிப்படையில் நோக்கும்போது கி.மு. 6000 இற்கு முன்னரே தமிழ் எழுத்துக்கள் தோன்றிவிட்டதாகக் கொள்ள முடிகிறது. சிந்து வெளித் தொன்மையைத் தமிழுடன் இணைக்கும் வகையில் கண்காட்சிக் கூடத்தில் பல சான்றாதாரங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.


தமிழரின் தொன்மையை உலகிற்கு அறிவித்தவர்களுள் கால்டுவெல் என்ற மேனாட்டு அறிஞரும் மொழிஞாயிறு எனப் போற்றப்பட்ட தேவநேயப் பாவாணரும் குறிப்பிடத்தகக வர்கள். உலகின் முதல் மாந்தர் தமிழரே எனவும் தமிழர் தோன்றிய இடம் குமரிக்கண்டமே எனவும் பாவாணர் குறிப்பிட்டுள்ளார். குமரிக் கண்டத்தையே லெமூரியாக் கண்டம் (Lemuria) எனக் குறிப்பிடுகின்றனர். இங்கு பஃறுழி என்றோர் ஆறு ஓடியிருக்கிறது. குமரிக் கண்டம் கடல்கோள் (சுனாமி) காரணமாக அழிந்து போயிற்று.

*"பஃறுளியாற்றுடன் பன்மலை*
*அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள"*

எனச் சிலப்பதிகார ஆசிரியர் இதனை ஆதாரப்படுத்துகிறார்.


இலெமூரியாக் கண்டத்தின் அழிவின் பின்னர் குமரிக்குத் தெற்கில் இருந்த நிலப்பரப்பு நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட தீவாகக் காணப்பட்டது. (இதுவே இலங்கை). இலங்கை ஒரு காலத்தில் தாமிரபரணி நாடு என அறியப்பட்டதாகவும் இதுவே திரிந்து தப்ரபேன் என வந்ததாகவும் சிலர் கருதுவதாக முனைவர் ந.க.மங்களமுருகேசன் குறிப்பிடுகின்றார்.

நானிலம் என்ற சொல் பூமியைக் குறிக்கின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலத்தைத் தமிழர்கள் பாகுபாடு செய்து கொண்டமையாலேயே நானிலம் என்ற சொல்கையாட்சி ஏற்பட்டிருக்கிறது. விலங்கு பறவைகளை வேட்டையாடி வாழ்வதற்கு ஏற்ற இடம் குறிஞ்சி. அதற்கு அடுத்தபடியாக ஆடு மாடுகளைச் சிறப்பாக வளர்த்து வாழ்வதற்கு ஏற்ற இடம் முல்லை. அதற்கு அடுத்துப் பயிர்த் தொழில் செய்து வாழ்வதற்கு ஏற்ற இடம் மருதம். அதற்கு அடுத்தபடியாகக் கடல் வாணிகம் நடத்திட ஏற்ற இடம் நெய்தல். இந்நான்கு நிலங்களும் மாந்தரது நாகரிக வளர்ச்சிக்கு ஏற்றவாறு அமைந்திருந்ததாகப் பாவாணர் குறிப்பிடுகின்றார்.



செங்காந்தள் - (கார்த்திகைப் பூ) செம்மொழித் தமிழ் மலர்

ஒவ்வொரு நிலப்பிரதேசமும் அப்பிரதேசத்திற்குரிய பூவகையால் அழைக்கப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன பூக்களுக்குரிய பெயர்களே. இவற்றின் புற ஒழுக்கங்களாகக் குறிப்பிடப்படும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவும் பூக்களது பெயர்களே. சங்கத் தமிழ் நூலாகிய குறிஞ்சிப்பாட்டு கபிலர் என்ற பெரும் புலவரால் பாடப்பட்டது. வடக்கே வேங்கட மலைக்கு அப்பால் ஆரிய நாட்டின் அரசனாகப் பிரகதத்தன் என்பவன் இருந்தான். அவனுக்குத் தமிழின் அருமையை உணர்த்துவதற்காக இப்பாடல் பாடப்பட்டது. இதில் 99 பூக்களைப் பற்றிய செய்தி வருகிறது. இவ்வாறு தமிழர் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ள பூக்களது புகைப்படங்களை காட்சிப்படுத்தியிருந்தனர். ஒரு சில பூக்களைத் தவிர ஏனையவற்றைப் பெயரளவிலேயே அறிந்து வைத்திருந்த எனக்கு உருவமைப்புக் காட்சி உள ஆனந்தத்தை உண்டு பண்ணியது. பண்டைத் தமிழரது தாவரவியல் அறிவை எண்ணி வியந்து கொண்டேன். வரவேற்புக்காக மலர்க் கொத்துக்களைக் கையளிப்பது இன்று உலகப்பண்பாடாக விளங்குகின்றது. இதிலிருந்து ஒரு படி மேற்சென்று மலர்கள் மலரும் பொழுதைக் கொண்டு காலக் கணக்கையும் தமிழர்கள் கையாண்டுள்ளனர்.



சுவஸ்திகா குறியீடு - மொஹஞ்சதாரோ


கல்வெட்டுச் சான்றாதாரங்களும் தமிழின் தொன்மையை எடுத்தியம்புவனவாக உள்ளன. இவை கோயிற் சுவர்கள், பாறைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. செப்புத் தகடுகளில் பொறிக்கப்பட்டவை செப்பேடுகள் எனப்படுகின்றன. சோழராட்சிக் காலக் கல்வெட்டுக்கள் தமிழின் செம்மொழித் தகுதிப்பாட்டிற்கான சிறப்பான சான்றாதாரமாக உள்ளன. சோழர் கால நிர்வாக முறைகள் பற்றிக் குறிப்பிடும் முனைவர் பெ.அர்த்தநாரீசுவரன் சோழராட்சியின் நிருவாக முறைகளைக் கோயில் நிருவாகம், ஊரவை நிருவாகம், அரசு நிருவாகம் எனப் பகுத்துக் காட்டுகின்றார்.



தஞ்சையில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய ஆடவல்லான்

சோழராட்சியில் நிர்வாகக் கட்டிலில் தமிழ் குடி கொண்டமையால் தூய தமிழ்ப் பெயர்களும் புழக்கத்திற்கு வந்தன. புதிய கலைச் சொற்கள் ஆக்கப்பட்டன. கோவிலில் இருக்கும் மண்டபம் திருவோலக்கம் எனப்பட்டது. அரண்மனையில் இருந்த இராச சபை "உள்ளாலை' எனப்பட்டது. சோழர் காலக் கோவில்களில் மருத்துவமனைகள் காணப்பட்டன. இவை 'ஆதுலர் சாலைகள்' எனப்பட்டன. இப்படியாகத் தமிழில் ஆக்கப்பெயர்க் கையாட்சிக்குச் சோழ அரசர்கள் ஆதரவு நல்கினர். சோழர்கள் சிவ வழிபாட்டிற்கு முதன்மை கொடுத்தனர். அவர்கள் காலப் புதைபொருள் சான்றுகள் இதனை ஆதாரப்படுத்துகின்றன. இவற்றுள் சிலவும் கண்காட்சிக் கூடத்தை அலங்கரித்தன.

சிந்து வெளியில் தொடங்கி ஓர் ஒழுங்கு முறையிலேயே தமிழின் பெருமையை எடுத்தாண்டிருந்தனர். கால வரன் முறைக்கமைய இதனை ஒழுங்கமைத்திருந்தனர். ஆதி மனிதனது கற்குகை வாழிட மாதிரியொன்றையும் அமைத்திருந்தனர். தமிழர் பயன்படுத்திய பல்வேறு ஆயுதங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வில் வகைகள், அம்பு வகைகள் என்பன அவற்றுள் சிறப்பானவை.



கண்காட்சி அரங்க வாயிலில் அமைந்திருந்த மங்கல விளக்கு

அச்சுக்கலையின் தோற்றம் உலகளாவிய அறிவுப் புரட்சிக்கு அடிப்படையை அமைத்தது. இந்திய மொழிகளில் தமிழில்தான் அச்சில் பதித்த நூல் முதன்முதலில் வெளிவந்தது. தமிழ் மொழி உச்சரிப்புடன் போர்த்துக்கேய மொழியில் கிறிஸ்தவ சமய வினாவிடைப் புத்தகத்தை 1554 இல் போர்த்துக்கேயர் அச்சிட்டனர். இது போர்த்துக்கேய நகரான லிஸ்பனில் அச்சிடப்பட்டது. இதன் பெயர் 'கார்ட்டில் ஹா'. (Cartil Ha). தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத ஆனால் போர்த்துக்கேய மொழி தெரிந்த கிறிஸ்தவப் பாதிரியார்களுக்கு உதவும் வகையில் தமிழ் உச்சரிப்பில் வேதவாசகங்களைக் கூறும் நூல் இதுவாகும். தற்போது இந்நூலின் ஒரு பிரதி மாத்திரம் லிஸ்பனை அடுத்துள்ள பெலேம் நகரில் உள்ள மானுடவியல் அருங்காட்சியகத்தில் உள்ளதாம். இந்நூல் பற்றிய தகவல்களை 1954 இல் நம்நாட்டவரான தனிநாயகம் அடிகளார் வெளிக்கொணர்ந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1578 இல் வெளியான தம்பிரான் வணக்கம் என்ற நூலையே தமிழில் வெளியான முதல் புத்தகமாகக் கொள்கின்றனர். இதனை ஹென்றிக் ஹென்றிக்ஸ் (Hnrique Henriques) என்ற பாதிரியார் கொல்லத்தில் வெளியிட்டார். ஹென்றிக் பாதிரியாரைத் தமிழ் அச்சுநூல்களின் தந்தை எனச் சிறப்பிப்பர்.

ஜேர்மன் நாட்டுப் பாதிரியாரான சீகன் பால்கு என்பவர் 1712 இல் தரங்கம்பாடியில் அச்சகம் ஒன்றை நிறுவினார். இவ்வச்சகத்தின் துணையுடன் 1714 இல் பைபிளைத் தமிழில் அச்சிட்டு வெளியிட்டார். இவர் அச்சிட்ட பைபிளைப் பாதுகாப்பாகக் கண்ணாடிப் பெட்டியொன்றில் வைத்துக் கண்காட்சியில் வைத்திருந்தனர்.

*(பார்வை தொடரும்)*



ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகப்பேற்று நிபுணர் சபாரத்தினம் காலமானார்

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மகப்பேற்று நிபுணர் டாக்டர் சரவணமுத்து சபாரட்ணம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை இல.10, மீற்றோ தொடர்மாடிக் கட்டடம், வெள்ளவத்தையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலமானார். இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நீண்ட காலமாக மகப்பேற்று நிபுணராக கடமையாற்றியவராவார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 • 12 • 1941



உதிர்வு
21 • 07 • 2009

அமரர்
**திரு. விசுவலிங்கம் கைலாயபிள்ளை**

திதி சதுர்த்தசி (09.08.2010)

ஆண்டு ஒன்று ஆன போதும்
ஆறவில்லை நம் துயரம்
நீங்காது உங்கள் நினைவுகள் - எங்கள்
நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கின்றன
அன்பாய் அனைத்தெம்மை
விண்ணளவு உயர்த்திவிட்டு
வேதனையில் நாம் தவிக்க
மண்ணுலகை விட்டுப் போய்
ஆண்டு ஒன்றான போதும்
உங்கள் நினைவலைகள்
என்றும் எம்மை விட்டகலாது
உங்கள் ஆத்மாசாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற மூவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஓக. 8

இணுவில், மருதனார்மடம் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவர் வகையாக மாட்டிக்கொண்டனர்.

சுன்னாகம் பொலிஸாரும், மின்சார சபையினரும் இணைந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்திய தேடுதல் நடவடிக்கையில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிவான் இம்மூவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். மின்சார சபைக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்காக ஒருவரிடம் 5 ஆயிரத்து 900 ரூபாவும் மற்றைய இருவரிடம் தலா மூவாயிரத்து 200 ரூபாவும் மேலதிகமாக அறவிடுமாறு உத்தரவிட்டார். (ஒ-16)


Lecturers, Instructors, Administrative Staff

**"CINEC Jaffna"**

Colombo International Nautical and Engineering College (CINEC) is an institute of education certified for quality, safety, health and environment, situated in the picturesque suburb of Malabe

The organization is also a recipient of the prestigious national quality award

CINEC Maritime Campus
Millennium Drive, IT Park, Malabe.

Tel: +94(011) 241 3500
Fax: +94(011) 241 3505
jobs@cinec.edu

CINEC Maritime Campus wishes to recruit suitably qualified candidates for the newly opened CINEC Jaffna.

Currently there are following vacancies:

- Lecturer in **Electrical Technology**
- Lecturer in **English Language**
- Instructors/demonstrators in
  - **Welding and Aluminium Fabrication**
  - **Electrical Technology**
- Centre Manager
- Centre coordinator/Marketing Assistant

Qualifications:
Relevant academic and professional qualifications from a recognised institution of learning and appropriate job experience.

*Applicants who are fluent in all three languages (Tamil/English/Sinhala) and who are domiciled in Jaffna or in any of its suburbs will be given the preference.*

World Class Excellence in Education and Training... WWW.CINEC.EDU







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிய உடற்பயிற்சிக்கு பின் 2 குவளை பால் குடித்தால் பெண்களுக்கு எடை அதிகரிக்காது

வழக்கமான சில எளிய உடற்பயிற்சிகளுக்குப் பின் தினமும் 2 குவளை பால் குடித்தால் பெண்கள் எடை அதிகரிக்காது என ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கனடாவைச் சேர்ந்த மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தின் உடலியல் துறை பேராசிரியர் ஸ்டு பலிப்ஸ் தலைமையிலான குழுவினர், பெண்களின் கொழுப்புச் சத்தை குறைப்பது தொடர்பாக ஆய்வை மேற்கொண்டனர்.

ஒரே உடல்வாகு உடைய இளம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அவர்கள் தினமும் எளிய உடற்பயிற்சிகள் செய்யும் வழக்கம் உடையவர்கள் .

பயிற்சியை முடித்தவுடன் . ஒரு பிரிவினருக்கு கொழுப்பு நீக்கப்பட்ட ஒரு குவளை பால் கொடுக்கப்பட்டது. மற்றொரு குழுவுக்கு சர்க்கரையை அடிப்படையாகக் கொண்ட பானம் கொடுக்கப்பட்டது. பயிற்சி முடிந்த ஒரு மணி நேரத்துக்கு பின், மீண்டும் அதே அளவு பால் மற்றும் பானம் கொடுக்கப்பட் டது. இவ்வாறு 12 வாரங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டது. பின்னர் அவர்களின் உடல் எடை, கொழுப்புச்சத்தின் அளவு பரிசோதிக்கப்பட்டது. பானம் குடித்த பெண்களை விட பால் குடித்த பெண்களின் உடலில் கொழுப்பு அதிகம் சேராதது ஆய்வில் தெரிய வந்தது. இவர்களின் உடல் எடையும் அதிகரிக்க வில்லை. தினமும் எளிய உடற்பயிற்சிக்குப் பின் பால் குடித்து வந்தால் பெண்களின் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பது ஆய்வில் நிருபிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை உடல் எடையை பராமரிக்க உதவும் என பிலிப்ஸ் தெரிவித்தார்.★


தரத்திற்கான எமது அர்ப்பணிப்பு

SUPIRIVICKY, Kekulu மற்றும் SUMUDU

ஆகிய மூன்று சித்தாலேப பற்பசை தொகுதிகளின் உயர் தரத்தை அங்கீகரித்து இலங்கை தர நிர்ணய நிறுவனம் SLS சான்றிதழை வழங்கியுள்ளது.

சித்தாலேப உற்பத்திகள் ஒவ்வொன்றும் ஆயுர்வேத பாரம்பரிய ஆயுர்வேத மருத்தவ நடைமுறைகளை பின்பற்றும் உயர் அனுபவம்வாய்ந்த ஆயுர்வேத மருத்துவர்களின் வழிகாட்டலில் தயாரிக்கப்படுகிறது.

சகல தயாரிப்புகளிலும் தரத்திற்கு அதி முக்கயத்துவம் வழங்கும் சித்தாலேப தரம்வாய்ந்த உற்பத்தியை தயாரிப்பதில் அதிக அக்கறை காண்பித்து வருகிறது.

The Hettigoda Industries (Pvt) ltd தரத்தில் கவனம் செலுத்தும் ஒரு நிறுவனமாகும்.




சித்தாலேப வெதமாத்தயா

H.I. Advertising



A-star புதிய நட்சத்திரத்தின் உதயம்







எமது காட்சியறைகளில் A-star வை பார்வையிட்டு இன்றே உங்களது கனவு வாகனத்தை முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

துரித அழைப்பு - 0772 245719/ 0716 896909

கொழும்பு குருநாகலை இரத்தினபுரி கண்டி
மாத்தறை நீர்கொழும்பு அம்பாறை

10000 ரூபா தொடக்கம் சேமித்துக் கொள்வதற்காக இலவச பதிவு, இலக்கத் தகடு, மற்றும் வேறு பல. கி.மீ. 50000 ∴ இரண்டு வருட உத்தரவாதம்

SUZUKI Way of Life!

AMW அசோசியேட்டட் மோட்டர் வேஸ் (பிரைவட்) லிமிட்டட்
E-Mail - dhanika.rodrigo@amwltd.com
Web - www.amwltd.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நிவாரணம்

என்....
வீட்டுப் படலைக்கும்
விதானையாரின்
வீட்டுப் படலைக்கும்
எவ்வளவு தூரம் என
என் கால்கள் சொல்லும்
ஓடவும் முடியாமல்
உழக்கவும் முடியாமல்
ரீதி–வண்டியும் இல்லாமல் என்னுள்
உரமேறி இருக்கிறது– என்
கால்களும் நாளும்– ஆயினும்
உருக்குலைந்த என் குடும்பத்திற்கு
நிவாரணம் என்னும்
வரம் வேண்டியே
நித்தமும் நான் அலைவதால்
எல்லாம் இழந்த எனக்கு
எப்படியும் பெற வேண்டும்
என்றாவலுடன் இங்கு
துயில்கிறேன் நாளையும்
விதானையார் வீடு
நடக்க வேண்டும் என்பதால்.

—தி.சிவஉமாகரன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.slt.lk

# இவ்வாறான சலுகைகள் வேறெங்கு கிடைக்கும்?

slt citylink CDMA

## இப்பொழுது மிகக்குறைந்த அழைப்புக் கட்டணங்கள்!

### முற்கொடுப்பனவு

24 மணித்தியாலமும்
எந்தவொரு நிமிடத்திற்கும்
SLT வலையமைப்பினுள்**
**ஒரு ரூபாய்**
வேறு எந்தவொரு வலையமைப்பிற்கும்
**2 ரூபாய்**
நாளாந்த கட்டணம் ரூ. 3/=

### பிற்கொடுப்பனவு

24 மணித்தியாலமும்
ஆறாவது நிமிடத்திலிருந்து எந்தவொரு நிமிடத்திற்கும்
SLT வலையமைப்பினுள்**
**ஒரு ரூபாய்**
வேறு எந்தவொரு வலையமைப்பிற்கும் நிமிடத்திற்கு
**2 ரூபாய்**
முதலாவது 5 நிமிடத்தில் SLT வலையமைப்புக்குள் நிமிடத்திற்கு ரூ.1.25
வேறு வலையமைப்புக்களுக்கு நிமிடத்திற்கு ரூ.2.25

ஆரம்ப கட்டணம் இல்லை

**SLT வலையமைப்பினுள் சகல SLT சிட்டிலிங் மற்றும் SLT மெகாலைன் இணைப்புக்களுக்கிடையில் இச்சலுகை உரித்தாகும்.

கட்டணங்கள் நிமிடத்திற்கு.

இந்த கட்டணங்கள் புதிய இணைப்புக்களுக்கும் பொருந்தும்.

தற்போதுள்ள இணைப்புக்களும் புதிய கட்டணங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்

ஸ்ரீ லங்கா ரெலிகொம் விஷேடத்துவம் மற்றும் விசுவாசம்.

அரச வரிகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

TRC/SLT/10-09 (P) TRC/SLT/10-10 (P)

Sri Lanka Telecom

மேலதிக விபரங்களுக்கு (011) 2 555 555

slt citylink CDMA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வைரஸை நீக்கும் இயற்கை வைத்திய முறைமை


நமது உடலின் மென்மையான பகுதிகளே பெரும்பாலும் வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. பூஞ்சை, பாக்ரீறியா, காளான் போன்ற பலவகையான நுண்கிருமிகளுக்கு அதற்கென சிறப் பாக வழங்கப்படும் நுண்கிருமி நாசினி பலனளித்தாலும், வைரஸ் கிருமியினால் ஏற்படும் தாக்குதலுக்கு மட்டும் சிறப்பான நுண்கிருமி நாசினிகள் இல்லை. ஏனெனில் வீரியமற்ற நிலையில் காணப்படும் வைரஸ் கிருமிகள் உயிருள்ள செல்களின் உள்ளே நுழைந்ததும், மிகவும் வீரியமடைந்து தன் தோற்றத்தையும் தாக்குதலையும் மாற்றிக் கொண்டே இருக்கின்றன. ஆகையால்தான் வைரஸ் கிருமிகளை எதிர்க்கும் அல்லது தடுக்கும் மருந்துகள் சிறப்பாக செயற்படுவதில்லை.

சளி, குருதி, குருதி படிந்த கருவிகள், உடல் திரவங்கள், இனப்பெருக்க திரவங்கள் ஆகியவற்றின் மூலம் வேகமாக பரவும் வைரஸ் கிருமிகள், குறிப்பிட்ட காலம் வரை காத்திருந்து வீரியம் பெற்றதும், அத்தியாவசிய உறுப்புகளைத் தாக்கி, பலவித நோய்களை ஏற்படுத்துகின்றன. ஒரு வைரஸ் கிருமி உடல் செல்லை தாக்கி, அதற்கான நோய் குறிகுணங்களை முதன்முதலில் காட்டத் தொடங்கும் காலத்தில் சரியான முறையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் வைரஸ் கிருமிகளைச் சரியாக எதிர்கொள்ள முடியும். இல்லையெனில் நோயின் தீவிரம் அதிகரித்து பல உடல் நலக் கோளாறுகளை ஏற்படுத்திவிடும். வைரஸ் நுண்கிருமிகளை அழிக்கக்கூடிய நோய் எதிர்ப்பு செல்கள் நம் உடலிலேயே போதுமான அளவு அமைந்துள்ளன. இவை வைரஸ் கிருமிகள் உள்ளே நுழைந்ததும் இம்யுனோ குளோபன்களை அதிகரித்து நோயைக் கட்டுப்படுத்துகின்றன. இந்த இம்யுனோ குளோபன்களின் அளவைக்கொண்டே நோயின் தீவிரம் கணக்கிடப்படுகிறது. ஏனெனில் டி.என்.ஏ. வரை தாக்குதலை ஏற்படுத்தும் மிக நுண்ணிய ஆற்றலுடையவை வைரஸ் கிருமிகள். உயிரற்ற செல்களில் இவை அழிந்துவிடு வதாலும், வீரியம் குறைவதாலும் பக்ரீரியா, பூஞ்சை போன்ற கிருமிகளைப் போல் மின் நுண்ணோக்கியில் பார்க்க இயலுவதில்லை.

வாய், உதடு, நாக்கு, தொண்டை, ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகள், மென்மையான தோல் பகுதிகள் ஆகியவையே வைரஸ் கிருமிகளின் இலக்காகும். இவற்றில் ஏற்படும் தாக்குதலே தொண்டை வலி, அம்மை, அக்கி, மரு, பாப்பலோமா, நாய்முள், நாக்கு, வாய் மற்றும் பிறப்புறுப்பில் கடுமையான குழிப் புண்கள் ஆகிய வற்றில் கொப்புளங்களாகவும், புண்களாகவும் வைரஸ் கிருமியின் தாக்குதலின் அடையாளமாக நாம் உணருகிறோம். இதனால் தோன்றும் சிறு சுரம், வலி ஆகியன நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்வதற்கான இயற்கையின் வழிமுறைகளாம். ஹெர்பஸ் வைரஸ், அடினோ வைரஸ், புளூ வைரஸ் போன்றவற்றால் ஏற்படும் கிருமி தாக்குதலை நீக்கி, நம்மைக் காக்கும் எளிய மூலிகை மயிற்கொன்றை.

வைரஸ் கிருமித் தொற்றினால் தோன்றும் சுரம் மற்றும் தொண்டைவலி நீங்க மயிற்கொன்றை இலைகளை இடித்து, சாறெடுத்து 15 முதல் 30 மில்லியளவு வெந்நீருடன் கலந்து சாப்பிட வேண்டும். இதன் விதைகளை அரைத்துப் பூச, இருமலினால் தோன்றும் மார்பு வலி நீங்கும். இலைச்சாற்றைப் பூச, அக்கி தீவிரம் குறைந்து, தழும்பு மற்றும் அதனால் உண்டாகும் வலி மறையும்.

மயிற்கொன்றை இலை மற்றும் பூக்களை நிழலில் உலர்த்தி, ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ள வேண்டும். 15 கிராம் இலைப்பொடியை 500 மில்லி நீரில் போட்டு கொதிக்கவைத்து 125 மிலியாகச் சுண்டிய பின் வடிகட்டி குடிக்கக் காய்ச்சல் நீங்கும். ★★★★★★













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவனும் நாயும்

சிறுகதை

மெய்யனுக்கு அன்று வேலைகள் எல்லாம் சட்டுப் புட்டென்று முடிந்து விட்டன. சல்லடை காம்ப ராவில் அவன் வேலை செய்யும் கடைசி நாள் அது. இனிமேல் இங்கிருந்து போய்விட வேண் டியதுதான் - திரும்புவதில்லை. அதை நினைக்கவும் முடியவில்லை. சல்லடைக் காம்பராவிலுள்ள சக்கரங்கள்



அவனது வாழ்க்கையில் பத்து வருடங்களைச் சுழற்றி விட்டன. காம்பரா வாயில் கதவிலுள்ள கைபிடி அவன் கை பட்டுப் பட்டுத் தேய்ந்து போய்விட்டது. பதின்மூன்றாவது வயதில் சல்லடைக் காம்பராவுக்குள் நுழைந்தவன் அன்று முதல் இன்று வரை அதுவே அவனது உலகம், வேலையே அவன் வாழ்க்கை.

மூன்று மாதங்களுக்கு முன்பு, அவன் மதுரைக்கு யாத்திரை புறப்படும் சமயம் அந்தச் சூழ்நிலை முழுவதும் அவனது நரம்புகளை உரித்துப் பிய்த்தன. கடகடவென்று உருளும் சக்கரங்களின் இடைவிடாத ஏகநாதம் அவன் மனதைச் சோர்வடையச் செய்தது. 'இன்னும் உழை' 'இன்னும் வியர்வை சிந்து' என்று அவை சதா நச்சரித்துக் கொண்டிருந்தன. ஆனால் இன்று அவற்றின் அசைவில் ஒரு வித தாளக் கட்டுப்பாடு இருந்தது. அவனுடைய இருதயத் துடிப்புடன் ஒன்றி அவையும் கும்மாளம் போட்டன. ஆண்களும் பெண்களும் ஒவ்வொருவராகப் போய்ச்சேரும்வரை மெய்யன் மயிந்தி மயிந்தி நின்றான் - ஒரு கடைசிப் பார்வைக்காக.

வரண்ட, ஒளியற்ற அந்த சல்லடைக் காம்பரா திடீரென்று உயிர்ப்புற்றது. புத்தம் புதிய தேயிலைத் தூளின் நறு மணம், மௌனமாகக் கிடக்கும் சக்தி வாய்ந்த அந்த சக்கரங்கள் - இவையெல்லாம் அவன் மனதில் வர்ணிக்க முடியாத ஓர் உணர்ச்சியை எழுப்பின. சல்லடை தேயிலையை அரிக்கும் போது உண்டாகும் 'டக், டக், டக்' என்ற ஓசையும், சுழலும் சக்கரங்களின் குமுறலும் 10 வருடங்களாக அவன் செவிகளில் லயித் திருந்தன.

''நாளை இன்னொருவன் இந்த இடத்துக்கு வரப் போகிறான். என்றாலும் ஒன்றும் நடவாதது போல வழக்கமாக வேலைகள் நடக்கும். எல்லாம் அது அதுக்குரிய இடத்தில் இருக் கும். நான் மட்டும் இருக்க மாட்டேன். வாழ்க்கைச் சுழலின் சுதந்திரம்தான் என்ன? ஆமா, பார்க்கப் போனால் யார் தான் இவ்வுலகத்தில் இன்றியமையாதவர்கள்'' - இவ்வாறு எண்ணமிட்டான் மெய்யன்.

பழைய சம்பவங்கள் திரைப்படம்போல் அவன் மனக்கண் முன்பு ஓடின. பிரயாணப் பத்திரங்களை எடுப் பதற்குத் தான் கொழும்புக்குப் போனதை நினைவு படுத்தினான். இமிகிரேஷன் ஆபிஸில் 'விசாரணை கள்' என்ற போட் பலகையின் கீழிலிருந்த அதிகாரி - ஆம் எருமை மாட்டைப் போல தடித்த கழுத்துள்ள ஒரு குட்டையான மனிதன், அவன் கண்களில் அனல் வீசியது. வலையில் சிக்கிய வன விலங்கு போலக் காணப்பட்டான். டி.ஆர். பியைப் புதுப்பிக்கத் தான் இரண்டாம் முறையும் இந்த மனிதன் முன் பத்திரங்களை நீட்டியது ஞாபகம் வந்தது. அங்கு வந்த எல்லோரும் அவனுடைய கோரப்பார்வையைக் கண்டு கதிகலங்கினர்.

சிறிது நேரம் பொறுத்து, 'ஏய் உன்னுடைய டி.ஆர்.பியைப் புதுப்பிக்க முடியாது. போ வெளியே' என்று தடிக்கழுத்து உறுமியது.

''சாமி, நான் மதுரைக்கு சாமி கும் பிடத்தானே போனேன். நான் இங்கேயே தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவன் சாமி'' என்று மெய்யன் குளறினான். ''ஆமா, எல்லாப்பிச்சைக்காரப் பயலும் இப்போ இலங்கையனாய்ப் போய் விட்டான். இங்கே ஒன்றும் செய்வதற்கியலா விட்டால் வீட்டிலை போய் கிட போ'' ''சீ, என்ன மனிதன் இந்த ஆள்! வீட்டிலை போய் கிடக் கட்டாமெல்லே! இவர்கள் ஏன் இப்படி முரடர் களாய் இருக்கிறார்கள்? பிரஜா உரிமை அதி காரியும் இப்படித் தான் நடந்து கொண்டான். என் அம்மா, அப்பாவைக் கல்யாணம் செய்தவளா என்றல்லவா கேட்கிறான்! என்ன கொடுமை'' சிந்தித்தபடியே மெய்யன் அவ்விடத்தை விட்டு அகன்றான். படம் மாறி யது. அன்பு விஞ்சும் அருமைத் தாயாரின் நினைவு வந்தது. சோகப் புன்னகையும், நீர் ததும்பும் கண்களும், தாங்க முடியாத ஒரு வலி அவன் நெஞ்சத்தைப் பிளந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க)



1950 களிலேயே ஈழத்துச் புனைகதைத் துறையில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சிறுகதைகளை எழுதியுள்ள சி.வி வேலுப்பிள்ளை மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ஆங்கில மொழிமூலம் கல்வி கற்ற இவர் தமிழிலும் நல்ல பாண்டியத்தியம் உள்ளவர். தமிழில் மூன்று நாவல்கள் மற்றும் ஒரு கட்டுரைத் தொகுப்பு வெளிவந்துள்ளன. ஆங்கிலததில் ஒரு நாவல், இரு கவிதை நூல்கள், 'உழைக்கப் பிறந்தவர்கள்' என்ற தலைப்பில் ஆங்கிலச் சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளன. இவரது 'வீடற்றவன்' நாவல் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1947 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முதலாவது பாராளுமன்றத்தில் மலையக தமிழர்களைப் பிரதி நிதித்துப்படுத்தியவர். 1959 இல் இவர் ஆங்கிலத்தில் எழுதி தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட 'நாடற்றவனும் நாயும்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 161

---

# நாடனொடு நட்பே

இலக்கியக் காட்சி 52

பண்டைத்தமிழர் வாழ்வியல் இயற்கையோடு மிகவும் ஒன்றியதாக இருந்தது. அதனை அக்காலத்துப் புலவர் களுடைய பாடல்கள் நன்கு பதிவு செய்துள்ளன. இயற்கை நிலையில் அங்கு வாழ்ந்தவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடும் இயற்கையோடு ஒன்றியிருந்ததைப் புலவர் கள் காட்சிப்படுத்தியுள்ளனர். மனித வாழ்வியலில் அகம், புறம் என இரு கூறுகளைத் தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணநூல் வரையறை செய்வதற்குச் சங்கப் பாடல்களே பேருதவி புரிந்தன. பாடலின் புனைவுக்கு இயற்கை எவ்வாறு துணை நின்றதென்பதையும் தொல் காப்பியம் தெளிவாக விளக்கியுள்ளது. முதல், கரு, உரி என்ற மூன்று சொற்களைச் சிறப்புப் பொருள் கொள்ளும் கலைச் சொற்களாகப் பயன்படுத்தி இயற்கை நிலைகளை யும் மனிதர் வாழ்வியலையும் தொல் காப்பியம் இணைத் துக் காட்டுகிறது. இந்த அடிப்படையை வைத்து இலக்கியக் காட்சிகளாகப் பாடல்களை நோக்குவது பயனுடைத்து.

பாடல் புனைவில் சிறப்பாக இடம் பெறும் கூற்று நிலை வகைப்பாடு பாடல் புலப்படுத்தும் உணர்வு நிலையைத் தெளிவாக அறிய உதவுகின்றது. கூற்று நிலையை யாரு டைய கூற்று என இனங்காண்பதற்கு சில சொற்கள் அல்லது சொற்றொடர்கள் உதவுகின்றன. பின்வரும் பாடலை இவ்வகையில் காட்சிப்படுத்திக் காணலாம்.

''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
'நீரினும் ஆரளவின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''

[குறுந்தொகை 3]

இப்பாடல் பெண்ணின் கூற்றாக அமைந்துள்ளது. தன்னோடு தொடர்பு கொண்டுள்ள ஆண்மகனின் நட்பு எத்தகையது என்பதைப் பெண் உரைப்பதாகப் பாடல் புனையப்பட்டுள்ளது. 'நாடனொடு நட்பு' என்ற தொடர் பெண் கூற்றாக அமைந்த பாடல் என்பதை உறுதி செய் கிறது. 'நாடன்' என்ற சொல் ஆண்மகனின் வாழ்விடப் பரப்பை யும் அறிவுறுத்துகிறது. ஒரு சிறிய பிரதேசத்தைச் சார்ந்த வனாக அல்லாமல் நில அளவால் பாரிய பிரதேசத்தை உள்ளடக்கிய நாட்டுக்கு உரிமையாளன் என்ற ஒரு பொருளையும் இத் தொடர் தருகிறது. எனினும் பாடலின் அமைப்பில் ஒரு செய்தியைச் சொல்ல வந்த பெண்ணின் மொழிநடை தனித்துவமாக உள்ளது. சங்கப் பாடல்களைப் பாடிய புலவர்கள் பெண் கூற்றாகப் பாடல்களைப் புனையும் போது அதனைச் சிறப்பாக வெளிப் படுத்தியுள்ளனர். தன்னோடு நட்பாயிருக்கும் ஆணின் நட்பை அளந்து காட்ட முடியாது என அப்பெண் கூறுகிறாள். அந்த நட்பு அவளுடைய பார்வைக் கெட்டிய நிலப்பரப்பைக் காட்டிலும் பெரியது. இன்னும் நிலம் என்பது இக் கூற்றில் வேறொரு பொருளையும் தருகிறது. வள்ளுவர் நிலத்தை அகழ்வாரைத்தாங்கும் நிலமெனக் குறிப் பிட்டுள்ளார். தனக்குத் துன்பம் செய்பவரையும் தாங்கிக்கொள்ளும் நிலத்தைவிடத் தன்னுடன் நட்பு பூண்டவனுடைய நட்பை உயர்வானதெனக் கூறுகிறாள். தனக்காக எத்தகைய இடர்களையும் தாங்கக் கூடியவன் என்ற நம்பிக்கையோடு இருக்கிறாள்.



மேலும் அந்த நட்பு வானத்தைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த தென்பதை 'வானினும் உயர்ந்தன்று' என்ற தொடர்குறிப்பிட்டு நிற்கிறது. அதே போல நீரைக்காட்டிலும் ஆழமானது என்று குறிப்பிடுகிறாள். பெண் மொழி என்ற வகைப்பாட்டில் ஒரு பெண்தன் உணர்வு நிலையின் அள வைப்புலப்படுத்த நிலம், வான், நீர் என்னும் இயற்கை நிலைகளையே பயன்படுத்தியுள்ளாள்.

அடுத்து அவனுடைய நாட்டைப் பற்றி விளக்கும் போது இயற்கைக் காட்சியை எடுத்துரைக்கின்றாள். அவளுடைய நாட்டிலே மலைச் சாரல்களிலே கரிய கொம்பர்களிலே குறிஞ் சிப்பூ மலர்ந்திருக்கிறது. அதிலிருந்து தேன் எடுத்துத் தேனீக் கள் கூடுகளைக் கட்டியுள்ளன. குறிஞ்சி மலர்களின் பெருக் கத்தால், நிறைந்த தேனைச் சேகரிக்கமுடிகிறது. நட்புக்கொண்ட வனுடைய மலை நாட்டின் வளம் பற்றியகுறிப்பு பெண்ணின் கூற்றாக அமைந்து இயற்கைக் காட்சியாக அமைந்துள்ளது.

பெண்ணுடைய அகவுணர்வைப் பெண்ணே கூறுவது போலப் பெண் மொழியிலே காட்சிப்படுத்தும்போது செய்யு ளைப் பாடிய புலவர் அதற்குரிய சொற்களைப் பயன்படுத் தியுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 'நாடனொடு நட்பே' என்ற தொடர் அவளுடைய உள்ளத்து உறுதியைக் காட்டுவதாக உள்ளது. தனக்கும் அவனுக்கும் இடையே உள்ள நட்பின் இறுக்கத்தை அவள் தன் தோழிக்குக் கூறும் போது எதையும் மறைக்கவில்லை. அகப்பாடல்களில் தோழியென்னும் பாத்திரம் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் நட்புத் தொடர்பை அறிந்தவளாகச் சித்திரிக்கப்பட் டுள்ளாள். இருவருடைய அகவுணர்வுகளையும் நன்கு புரிந்து கொள்ளும் அறிவாற்றல் படைத்தவளாகவும் உள்ளாள். இதனால் புலவரே தோழியாகத் தன்னைப் பாவனை செய்து பாடலைப் பாடுவதாகவும் ஒரு கருத்துண்டு. பெண்மையின் அகவுணர்வுகளைப் புலப்படுத்தும்போது ஏற்ற சொற்களைப் பயன்படுத்தி...

உரையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பாடலுக்கு உரை செய்யும்போது குறிஞ்சித் திணைக்குரிய புணர்தல் ஒழுக்கத்திற் குரிய பாடல் எனக் குறிப்பிட்டுள்ளனர். குறிஞ்சி நிலக் கருப்பொருள்களாக சாரல், குறிஞ்சி, தேன் என்பன அதை உணர்த்தி நிற்கின்றன. சாரல் என்பது வளம் பொருந்திய பக்கமலையாகும். மலைச்சார லிலே பெரிய தேன் கூடுகளிருப்பது இதற்குச் சான்றாகவுள் ளது. 'இழைத்தல்' என்ற சொல் தேனீக்கள் பக்குவமா கத் தங்கள் தேனைச் சேமித்து வைப்பதற்காக நுணுக்க மாக அமைக்கின்ற கூடுகளை அமைப்பதைக் குறிக்கின் றது. ஒரே அளவுள்ள சிறிய துவாரங்களையுடைய கூடு களை இன்றும் மலைச்சாரலிலே காணலாம். குறிஞ்சி மலர் இருப்பதால் மலைநாடு என்பது கருப் பொருளால் விளக்க முறுகிறது.

பாடல் இன்னொரு குறிப்பையும் தருகின்றது. 'நட்பு' என்ற சொல்லால் பெண் தனக்கும் அவனுக்கு மிடையே உள்ள தொடர்பின் நிலைப்பாட்டையும் கூறி விடுகிறாள். சங்கப் பாடல்களில் நட்பு, கேண்மையென இரு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நட்பு என்பது மனதளவான நெருங்கிய தொடர்பு. கேண்மையென்பது உள்ளமும் உடலும் ஒன்றிய நெருங்கிய தொடர்பு. எனவே இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் திருமணம் ஆகா தவள் என்பதும் 'நட்பு' என்னும் சொல்லால் பெறப்படுகிறது.

இப்பாடல் தேவகுலத்தார் என்பவரால் பாடப் பட்டது. 5 அடிகளால் அமைந்த இப்பாடலில் தலைவி தன்னுடைய நிலையைத் தோழிக்குக் கூறுவதாக அமைந் துள்ளதென உரையாசிரியர்கள் உரை செய்துள்ளனர். தோழியை விளிக்கும் சொல் எதுவும் பாடலில் இல்லை. ஆனால் பெண்ணின் உரையாடல் மூலம் தோழிக்குக் கூறிய கூற்று என்பது பெறப்படுகின்றது. பாடலின் அகவலோசை இதற்கு ஒரு சான்றாகவுள்ளது. தனது நட்பின் இறுக் கத்தை 'நட்பே' என்ற சொல்லின் ஈற்று ஏகாரம் தேற்றப் பொருளாக உணர்த்துவது முன்னி லையில் நிற்பவருக் குக் கூறும் செய்தி என்பதை நன்கு விளக்கி நிற்கிறது. சங் கப் பாடல்களில் வரும் இடைச் சொற்கள் நுட்பமான பொருளை உணர்த்துவன.




'ஆரளவின்றே' என்ற சொல்லில் வரும் ஏகாரம் எதிர்மறைப் பொரு ளில் அளக்க முடியாதது எனப் பொருள் தந்து நிற்கிறது. பெண் ணுடைய மொழி யின் பொருள் தரு மாற்றாலை இடைச்சொற்கள் மூலம் புலவர் வெளிப்படுத்தியிருப்பது புலவரின் தனித்துவத்தைப் புலப்படுத்தி நிற்கிறது. ★

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 125



அனுப்புபவர் பெயர்:...........................................

விலாசம்:...........................................

...........................................

கையொப்பம்:...........................................

### இடமிருந்து வலம்

1. நித்தியம்.
5. வேகம்.
7. வெட்டு.
8. கிருபை/ சுபாவகுணங்களில் ஒன்று.
9. மறைவில் தீட்டப்படுவது.
10. மனதில் ஏற்படும் குழப்பம், பெரும்பாலும் தவறு செய்ய மனதைம் தூண்டுவது இதுதான்.
12. நெருப்பு.
13. சாப்பிடு.
15. ஏழு நாள்கள்.
16. ஒதுக்கப்பட்டவர்களை இந்தியாவில் இப்படி அழைப்பார்.
17. புகழ்/ மரியாதை/ பெருமை.
18. சரஸ்வதி இதற்குரியவள்.
19. பெருக்கல்குறி/ புள்ளடி.
20. பலரகம்.
22. நிழல்.
23. திக்கு.

### மேலிருந்து கீழ்

1. திறனோடும், வீரத்தோடும் புரியப்படும் செயல்.
2. மரவேலை செய்வோர், சிற்பி கொல்லன் போன்றோரின் ஆயுதம்.
3. வாழ்.
4. காட்சிக்கு வருதல்.
5. இனிப்புச் சுவை தருவது.
6. தமிழில் இது இரண்டு. ஒன்று உயர்ந்தது. உயர்வு குறைந்தது.
8. சேர்.
11. அரைக்கும் உடல் உறுப்பு.
12. கை.
14. உள்ளத்து உணர்வு/ மன எண்ணம்.
15. குரங்கு.
16. எழுதப்பட்டது/ விதிக்கப்பட்டது.
17. கோவலனின் காதல் மனையாள்.
18. தூக்கத்தில் காணுவது.
20. நாங்கள்.
21. உடல் இயக்கத்துக்கு அவசியமானது.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 123 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)பதிபக்தி. (5)சாவி. (7)திட்டி. (8)சைகை. (10) கடுப்பு. (12) யமன். (13)பதினாறு. (14)அறிய. (15) நிதி. (17)உறவு. (18)தலைப்பு. (20)தவி. (21) விடை. (22) பின். (23)விடுதலை. (24) வலிமை.

**மேலிருந்து கீழ்**

(1)பதிகம். (2)திட்டு. (3)படிப்பறிவு. (4)திசை. (6)வியன்னா. (9)கையறுநிலை. (11)புதிய. (14) அறவிடு. (16)திப்பிலி. (17)உதவி. (18)தடை. (19)புன்மை. (21)விலை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 123 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக் கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** ம. திரேசா புஸ்பராணி, 348, கரையோரம், நெடுந்தீவு.

**2 ஆம் பரிசு** ஞா. ஞானஸ்ரீபனா, யா/ சென். சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** திருமதி செ. சாரதாதேவி, 'அபிராமி' நெல்லுளுவை, வல்வெட்டி

**4 ஆம் பரிசு** வ. நா. பரமலிங்கம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**5 ஆம் பரிசு** அ. பௌர்ஜா, கராச்சடி, சண்டிலிப்பாய்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) பா. ஈஸ்வரன், குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.

(2) முத்துக்குமாரு ஞான், பேரம்பலம் றோட், சாவகச்சேரி.

(3) ச. சண்முகம், இல: 63/12 சிவன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 125**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 18.08.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.125இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 22.08.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

# நாடற்றவனும் நாயும்

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அவள் இவ்வுலக வாழ்வை நீத்த நாள். கண்கள் வரண்டு போகும் வரை விக்கி விக்கி அழுதான். யமனோடு போராடிக் கொண்டிருக்கும் சமயத்திலும் அவள் சொன்னாள், வழக்கம்போல் ''மெய்யா, என் மகனே, என்னைப் பற்றி வருத்தாதேயடா! உனக்கு இன்னும் எவ்வளவோ ஆயுசு இருக்கு, என்னை நினைத்து நினைத்து அதை வீணாக்காதே! நான் எப்போதும் உன்னோடு கூடவே இருப்பேன்..... உடம்பைக் கவனித்துக் கொள். அத்துடன் உன் அப்பன் கொண்டு வந்த அந்த நாய்க்குட்டி - சூட்டி அதையும் மறந்திடாதே!''

அந்நாளில் சூட்டி குதித்தோடித் திரியும் அழகான நாய். 'கொழு கொழு' வென்றிருந்த அதன் உடம்பில் மென்மையான கம்பளம் போல் உரோமம் வளர்ந்திருந்தது. காதுகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு அது அவனை வரவேற்றும் போது வால் மட்டுமா ஆடும்? பிற்பகுதி முழுவதுமே ஆடும். மறக்க முடியாதது அந்த இன்பக் காட்சி. தாய் இறந்த பின் சூட்டிதான் மெய்யனின் உயிர்த்துணை. அறுந்து போன வீணை நரம்புகளில் எஞ்சிக் கிடக்கும் ஒரு துண்டு. தாயாரின் கடைசிப் பரிசு.

இன்று தன் வீட்டையும், மாமனையும் மாமியையும் - எல்லாவற்றிற்கும் மேலாக அந்த நாயையும் - விட்டுப் போவதை நினைக்க அவன் மனம் கிறுகிறுத்தது. இடிந்து நொருங்கி மண்குடிசை போலிருந்தது அவன் உள்ளம். மாமிக்கு அந்த நாயென்றால் பிடிப்பதில்லை. எனவே அதை ஸ்டோர் காவற்காரனிடம் கொடுத்து விடுவதென்று முடிவு செய்தான். ராமன் நாயைக் கேட்கிறான் என்று மெய்யன் தன் மாமியாரிடம் ஜாடையாகத் தெரிவித்த போது அவள் ஆட்சேபிக்கவே இல்லை. மௌனமாக ஆமோதிக்கவும் செய்தாள். இந்த மனப்பான்மை அவனுக்கு மேலும் ஆத்திரத்தையும் துக்கத்தையும் அளித்தது.

மெய்யன் வீடு திரும்பிய போது அவனுடைய பிரயாணத்துக்கு எல்லாம் தயாராகி இருந்தன. அவனுடைய சாமான்கள் எல்லாவற்றையும் திரட்டிக் கட்டி அறையின் ஒரு மூலையில் வைத்திருந்தாள் மாமியார். வழக்கத்திலேயே அதிகம் பேசாத மெய்யனுக்கு அன்று நாவும் கிட்டிப்போய்விட்டது.

மாமனார் சொன்னார். ''மெய்யன்! சஞ்சலப்படாதே. நாம் என்ன செய்ய முடியும். வேறு வழியில்லை ...... உன்னுடைய அப்பாட்டன் காலத்திலேயே நாங்கள் கிராமத்திலிருந்து புறப்பட்டு விட்டோம். இன்னும் யாராவது எட்டிய உறவினர் இருக்கக்கூடும். யார் கண்டார்கள்? ஆண்டவனை மறந்து விடாதே ஏழைகளுக்கு அவன் ஒருவன்தான் துணை..... பணத்தையும் பெர்மிட்டையும் கவனமாக வைத்துக்கொள்''

''சரி மாமா! சரி மாமா!'' இவ்விரு வார்த்தைகளிலும் தான் சொல்லப்படுவதெல்லாம் அடங்கிவிட்டது போல் திருப்பித் சொல்லிக் கொண்டிருந்தான் மெய்யன்.

புறப்படும் நேரம் கிட்டயதும் துணிப்பொட்டணியைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு, சூட்டியை கக்கத்தில் இடுக்கி, மௌனமாக பிரியாவிடை பெற்றான். ஸ்ரோர் காவற்காரனின் வீட்டை நோக்கி அவன் வயல்களுக்கூடாக நடந்து சென்றபோது, லயத்திலுள்ள தொழிலாளர்கள் அவனுடைய நிர்ப்பந்தமான புறப்பாட்டைப் பற்றியே பேசிக்கொண்டனர். அவனை எங்கேயோ கொலைக் களத்திற்கு அழைத்துச் செல்வதாக அவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள்.

சூட்டி மெய்யனின் தோளோடு ஒட்டிக்கொண்டிருந்தது. அடிக்கடி அவனுடைய சொக்கையை மோந்து நக்கிப் பார்த்துக் கொள்ளும். அதுவே தங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து செல்லும் கடைசிப் பிரயாணம் என்று அதற்கெப்படித் தெரியும். நாய்களுக்கு பிரஜா உரிமைச் சட்டம் இல்லையா? என்று மெய்யன் யோசித்தான். ஏதோ ஒரு வகைப் பத்திரங்களும் தஸ்தாவேஜூகளும் இருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் நாய்களின் உயிர்களுக்குமல்லவா ஆபத்து வந்துவிடும்! கடவுளே என்று சூட்டிக்கு அப்படி ஒன்றும் நேர்ந்து விடப்படாது.

மெய்யன் வரவை எதிர்பார்த்து நின்றான் ராமன். அதிகம் பேசுவதற்கு நேரமில்லை. அடுப்பங்கரைக்கு பின்னாலிருந்த ஒரு சிறிய அறையைச் சுட்டிக்காட்டி ''அந்த அறைக்குள் பூட்டி வைத்திருக்கிறேன் சூட்டியை. நாள் போகப் போக அது என்னோடு பழகிவிடும். அதைப் பற்றி ஒன்றுமே கவலைப்பட வேண்டயதில்லை. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்'' என்றான் ராமன்.

ஆம் என்று தலையசைத்து விட்டு மெய்யன் கதவண்டை நெருங்கினான். சூட்டி அவனை இறுக அணைத்துப் பிடித்தது. தரையில் அதை இறக்கிவிட்டு அறைக்குள் கூப்பிட்டான். அது மறுத்தது. கெஞ்சி அழைத்துப்பார்த்தான். சூட்டி அசையவேயில்லை. முன்னங்கால் இரண்டிலும் பிடித்திழுத்தான். அடி விழப்போகிறதோ என்று நினைத்து சூட்டி அவனைப் பரிதாபமாகப் பார்த்தது. சட்டென்று அதைத் தூக்கிக் கொண்டு போய் அறைக்குள் விட்டு விட்டு கதவைப் படீரென்று சாத்திவிட்டான். பாவம், சூட்டி முன்னங் கால்களால் கதவை பிராண்டியபடியே ஊளையிட்டது. இருவரும் மௌனமாக ரயில்வே ஸ்டேசனை நோக்கி நடந்தனர். மாலை மங்கி இரவு கலந்துகொண்டிருந்தது. சூட்டியின் ஊளைச்சத்தம் குழந்தையின் அழுகுரல் போல், இருட்டில் மிதந்து வந்து மறைந்தது. அந்தக் குரல்அவனுடைய தாயார் துயிலும் இடு காட்டிலிருந்து எழும் குரல் போலிருந்தது மெய்யனுக்கு. ஆமாம், தேயிலைச் செடிக்கடியில் அவளும் மண்ணோடு மண்ணாயல்லவா கிடக்கிறாள். ரயில்வே ஸ்டேஷனில் எப்போதும் போல ஏக தடபுடலாயிருந்தது. மெய்யன் டிக்கட் ஜன்னலண்டை போய் திருச்சி ஜங்சனுக்கு டிக்கட் வாங்கினான்.

கடைசி மணி அடித்தது.

"உள்ளே போ! ஒன்றுக்கும் கவலைப்படாதே! என்றான் ராமன், மெய்யன் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான். அப்போதுதான் வண்டியும் வந்து நின்றது. ஆண்களும், பெண்களுமாக ஏராளமான சனங்கள் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். தோட்டக்காட்டுப் பெண்கள் சிலர் விம்மி அழுதார்கள். மெய்யனுக்காக அழுவதற்கு யாரும் அங்கில்லை. பெட்டிக்குள் ஏறி ஒரு பெண்ணருகில் உட்கார்ந்து கொண்டான். எதையும் கவனிப்பதற்கு அவனுடைய [illegible] தானே! ரயில் வண்டி கீச்சிட்டுவிட்டு உருண்டு நகர்ந்தது. ராமன் வெளியே கையை மோவாய் கட்டையில் வைத்தபடி பார்த்துக்கொண்டு நின்றான். 'தகிடு தொம், தகிடு தொம்' என்று தாளம் போட்டுக் கொண்டே ரயில் வண்டி தன் வேகத்தை அதிகரித்தது. மெய்யனை சித்திரவதை செய்வது போலிருந்தது இந்த சக்கரங்களின் ஓசை. அவன் சீவியம் முழுவதையுமே சக்கரங்கள் அல்லவா வியாபித்திருந்தன. ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி ஸ்டோரில் விளக்கெரிவதைக் கண்டான். அந்த விளக்கொளி, ரயில்வே ஸ்டேஷனில் அந்தப் பெண்களின் ஓலம், சூட்டியின் பரிதாபமான அழுகை - எல்லாம் சேர்ந்து அவன் மூளையை சம்மட்டியால் அடித்தன. திடீரென்று இமிகிரேஷன் ஆபிஸில் கண்ட அந்த தடிக்கழுத்து இருளில் தோன்றியது.

யாத்திரையாகத்தான் இந்தியாவிற்குப் போனேன். என்று உண்மையைச் சொன்னேன். மனிதன் நம்பவில்லை. இது தான் எல்லாவற்றையும் விடப் பெரிய இறுதி யாத்திரை. வண்டி ஓடிக்கொண்டே யிருந்தது. வானில் நட்சத்திரங்கள் அவனைப் பார்த்து கண் சிமிட்டின. இதற்கு முன் அவன் ஒரு நாளாவது நட்சத்திரங்களைப் பார்க்க வேண்டுமென்று நினைக்கவில்லை. இன்றைக்கு என்னவோ அவற்றைப் பார்க்க வேண்டுமென்ற ஓர் ஆசை பிறந்து விட்டது. சூட்டியின் ஊளைக் குரல் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் எதிரொலித்தது. அவனுடைய நெஞ்சில் வந்து ஒடுங்குவது போலிருந்தது.

அந்த இளம் பெண் கொஞ்சம் கொஞ்சமாக கிட்ட நெருங்கி வந்து விட்டாள். அந்த உஷ்ணமான ஸ்பரிஷம் இன்ப போதையை அளித்தது. ஆனால் ஒரு கணம் தான். அடுத்த கணம் வேறு நினைவுகள். சல்லடைக் காம்பரா, சுழலும் சக்கரங்கள்... ரயில் வண்டி வேகமாகச் சென்றது. அடுத்த நாள் காலை ஈரச்சேற்றை உடம்பு முழுவதும் பூசிக் கொண்டு சூட்டி பழைய வீட்டுக்கு வந்து சேர்ந்தது. அதைக் கண்டவுடன் மாமி கூச்சலிட்டாள்.

இந்த நாசமாய்ப் போன நாய் மறுபடியும் வந்திட்டுதே! சூட்டி ஒரு தரம் வீட்டைச் சுற்றி ஓடி வந்து அவள் மேல் தொங்கிப் பாய்ந்தது.

''சீ, போ, நாயே'' என்று கத்தினாள் மாமியார். சூட்டி விறாந்தைப் பக்கம் வழக்கமாகத் தான் படுக்கும் மூலையைத் தேடியது. அங்கே கோழிக்கூடு வைக்கப்பட்டிருந்தது! ''போ வெளியே, பிசாசு!'' மீண்டும் கத்தினாள் மாமியார். சூட்டி கோழிக் கூட்டுக்கு வெளியே நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டு மெய்யனின் வருகையை எதிர்பார்த்திருந்தது. அவன் வந்தால் தானே! அதற்கொன்றும் விளங்கவில்லை.

காலை மாறி மத்தியானம் வந்தது. ஸ்டோரிலும் தோட்டத்திலும் வேலை செய்தவர்கள் பகற்போசனத்திற்கு வந்தார்கள். சூட்டி தெருவைப் பார்த்தபடி குந்திக் கொண்டிருந்தது. மெய்யனின் மாமனார் வந்தார். அது ஓடிப்போய் அவருடைய கால் விரல்களை மோந்து பார்த்து வாலை ஆட்டியது. அந்த மனிதர் உணர்ச்சி வசப்பட்டவராய் தூரத்து மலைகளைப் பார்த்த வண்ணம் நின்றார். நாய் ஊளையிட்டுக் கொண்டே அவருடைய முகத்தை அன்புடன் நோக்கியது...

பொழுது சாய்ந்து, இருள் சூழ ஆரம்பித்தது. சூட்டி அந்த இடத்தை விட்டு அகலவில்லை. கண்களைத் தெருவில் பதித்தபடியே இருந்து விட்டது...... ***

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் முதலாவது அரச அதிபர் பி.ஏ.டைக் 1839 இல் அதன் சனத்தொகை 2,12,408 பேர்களே

ஆவணப் பெட்டகம் 05

## யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்

தாண்டவன்

**கிளர்ச்சி**

**1800** ஆம் ஆண்டு ஜூன் - ஜூலை மாதங்களில் ஆபரண வரிக்கு எதிராக மக்களிடையே எதிர்ப்புக் கிளம்பியது. யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளில் ஆபரண வரிக்கு எதிராக மக்கள் கிளர்ந்த போதும், எவரும் நேரடியாகத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க முன்வரவில்லை.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த 3000 பேர் மன்னாரில் ஒன்று கூடி வரி உத்தியோகத்தர் ஒருவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தனர். யாழ்ப்பாணக் கலெக்டராயிருந்த கேணல் பார்பட் கிளர்ச்சியாளர்களில் ஒருவரைச் சுட்டுக்கொன்றதுடன் பத்துப் பேரைக் கைது செய்தார். நீர்கொழும்பு, சிலாபம், மாத்தறை, கொழும்பு பிரதேசசங்கங்களிலும் கிளர்ச்சிகள் இடம் பெற்றன. எனினும் பிரிட்டிஷார் இதனை முறியடித்தனர். மாத்தறையிலும் கிளர்ச்சியாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒகஸ்ட் மாதம் கிளர்ச்சிக் குழுக்களின் தலைவர்கள் ஐந்து பேருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

01.03.1824 அன்று பேர்சிவல் அக்லண்ட் டைக் (Percival Akland Dyke ) யாழ்ப்பாண உதவி கலெக்டராகவும் பொலிஸ் நீதவானாகவும் நியமிக்கப் பட்டார். 15.03.1822 இல் தனது பதினேழாவது வயதில் கடற்படைத்தளபதியாகப் பதவியேற்ற இவர் 01.03.1824 அன்று யாழ்ப்பாண பதில் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

30.12.1825 அன்று சி.பிறவுண்றிக் (C.Brownrigg) யாழ்ப்பாணக் கலெக்டராக நியமிக்கப்பட்டார். (இவர் 1812 முதல் 1822 வரை இலங்கை ஆளுநராகப் பதவி வகித்த றொபேர்ட் பிறவுண்றிக்கின் மகனாக இருக்கலாம்).

01.05.1827 அன்று உவில்ரியம் கிஸ்பேர்ண் (William Hisborn) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார். 12.07.1828 அன்று யோசப் பிறைஸ் (Joseph price) யாழ்ப்பாண கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

இவர் கொழும்புத்துறையில் பதின்நான்கு ஏக்கர் காணியில் தென்னை, எலுமிச்சை, பலா, மா மரங் களை சுற்றிவர நாட்டி அதன் நடுவே ஒரு அழகிய வீட்டைக்கட்டி அதில் வாழ்ந்து வந்தார். பதவியிலிருந்து இளைப்பாறிய பின்னரும் இவர் தனது அந்த இல்லத்திலேயே வசித்து வந்தார். 1863 ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபை இவரது வீட்டை விலைக்கு வாங்கி புனித யோசேப் அநாதை இல்லம் என்ற பெயரில் அநாதை இல்லமாக மாற்றியது. இவர் மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார். (Report on the Jaffna Catholic Schools and Orphan Asylums )

01.10.1829 அன்று ஏற்கனவே உதவிக் கலெக்டராகப் பதவி வகித்து வந்த டைக் கலெக்டராகப் பதவியுயர்வு பெற்றார். இவர் டைக் துரை எனவும் அழைக்கப்பட்டார். (அரசாங்க அதிபர், கலெக்டர் போன்றோர் துரை என்றே உள்ளூர்வாசிகளால் அழைக்கப்பட்டனர்)

1831 ஆம் ஆண்டு இவரது பதவிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் குடிசன மதிப்பீடு செய்யப்பட்டது.

1831ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் சனத்தொகை 146528 பேர் எனக் குறிப்புகளிலிருந்து தெரியவருகின்றது.

28.09.1832 அன்று இங்கிலாந்து அரசின் உத்தரவின் பிரகாரம் இராஜகாரி யம் அல்லது ஊழியம் என அழைக்கப்பட்ட சம்பளமின்றி கட்டாய அரச சேவையில் உள்ளூர் வாசிகளை ஈடுபடுத்தும் முறைமை குடியேற்ற நாடுகளில் ஒழிக்கப்பட்டது.

1833ஆம் ஆண்டு இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. இதே ஆண்டு சிவில் பொறியியலாளர் மற்றும் வீதி ஆணையாளர் அலுவலகத்தின் (Civil Engineer and Commissioner of Roads) இணை அலுவலகமொன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது. இது பின்னாளில் பொது வேலைத்திணைக்களம் (Public Works Department) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

* 1833 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் இறைவரி வருமானமும் செலவீனமும் சரிசமமாக இருந்ததாகக் குடியேற்ற நாடுகளின் செயலாளர் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

**அரசாங்க அதிபர்**

கோல்புறூக் ஆணைக்குழு இலங்கையில் மேற்கொண்ட சீர்திருத்தங்களையடுத்து கலெக்டர் பதவி அரசாங்க அதிபர் பதவி என (Government Agent) பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதுவரை காலமும் கலெக்டராகப் பதவி வகித்த டைக் 01.10.1833 முதல் அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்றார்.

1838 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைச் செமினறியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய ஹென்றி மார்ட்டின், வீதிகளில் மைல் கற்கள் நாட்டுவதற்கான திட்டவரைபை அரசாங்க அதிபர் டைக்கிடம் கையளித்தார். 1839ஆம் ஆண்டு பிலிப்முத்துக் கிருஷ்ணா முதலியார் யாழ்ப்பாணக் கச்சேரியிலிருந்து ஓய்வு பெற அவரது இடத்திற்கு சந்திரசேகர முதலியார் நியமிக்கப்பட்டார்.

1839ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தின் சனத்தொகை வருமாறு:

யாழ்.நகரம் - 62,187 பேர்
மல்லாகம் - 45,305 பேர்
தென்மராட்சி - 43,927 பேர்
வடமராட்சி - 35,747 பேர்
தீவகம் - 25,292 பேர்
மொத்தம் - 212,408 பேர்

01.03.1840 அன்று எச்.ஈ.ஓ சிறேடடி (H.E.O. Cyrady) உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார். 08.02.1843 அன்று அரசாங்க அதிபர் டைக் பதில் கணக்காய்வாளர் நாயகமாகவும் இறைவரிக் கட்டுப்பாட்டாளராகவும் பதவியுயர்வு பெற்றார். (Acting Auditor and Accountant General and Controller of Renenue). *(வளரும்)*

# இரும்புச் சத்து அதிகம் கொண்டது எள்ளு பஸ்பம் செந்தூரத்துக்கு அனுமானம் உருத்திராட்சம்

**உருத்திராட்சம்**

வேறு பெயர்:- அரனது விழிமணி, கண்மணி, சிவநேத்திரம் அக்கமணி.

தாவரவியற்பெயர் :- Elaeocarpus Lanceolatus (எலியோகார்பஸ் லஞ்சியோலேற்ற)

குடும்பம்:- Eleocarpaceae (எலியோகாபேசியே)

சமஸ்கிருதம்: ருத்திராக்ஷ

சிவ சின்னங்களில் முக்கியதான்து. உருத்திரனின் (சிவனின்) கண்ணிலிருந்து தோன்றிய விருட்சம் என்று இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. இது பெரு மர வகுப்புக்குரியது. இலைகள் நீண்ட முட்டை வடிவமாகக் காணப்படும். இலை விளிம்பில் சொர சொரப்பான பற்கள் கணப்படும்.



மார்கழி, தை மாதங்களில் பூக்கும் பூக்கள் வெண்மை நிறமாகவும், நறுமணமுள்ளவையாகவும் இருக்கும். ஆடி, ஆவணி மாதங்களில் காய்கள் உண்டாகும். உருத்திராட்சக் கொட்டைகளின் வெளிப்பரப்பு கரடு முரடாகவும் முகமுடையதாகவும் இருக்கும். உருத்திராட்சத்தில் ஒரு முகங் கொண்டதில் இருந்து 21 முகங்கொண்டதுவரை பல வகையுண்டு. உருத்திராட்சக் கொட்டைகளில் இயற்கையாகவே நடுவில் துவாரமும் காணப்படும். இதன் இலை, விதை என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன.

முக்குற்றங்கள் மிகுந்த நிலையிலும், கபம் அதிகரித்த நிலையிலும் இதன் இலைச் சாற்றைக் கொடுத்துக் கட்டுப்படுத்தலாம்.

பஸ்பம், செந்தூரம் என்பவற்றுக்கு அனுபானமாகவும் இலைச் சாறு பயன்படுகிறது.

குழந்தைகளுக்குண்டாகும் தோடத்துக்கு உருத்திராட்சத்தைத் தாய்ப்பாலில் உரைத்து, குழந்தையின் நாக்கில் தடவி வர மாறும்.

உருத்திராட்சக் கொட்டையைத் தேனில் உரைத்து நாக்கில் தடவிவர சந்நிபாத தோடம், விக்கல், பித்தமயக்கம் என்பன நீங்கும்.

நோய் நீக்கும் மந்திர ஜபங்களிலும் உருத்திராட்சம் முக்கிய இடம் பெறுகிறது. சாதாரணமாக ஜபம் செய்வதிலும் பார்க்க உருத்திராட்சம் அணிந்து ஜபம் செய்து சிகிச்சிக்கும் போது விரைவாகவும் மிகுந்த பலனும் ஏற்படுகிறது. விஷக்கடி, மானசீகரோகங்களில் இவ்வித ஜபப் பிரயோகம் செய்யப்படுகிறது.

**எள்ளு**

**வேறுபெயர்:** திலம்

**தாவரவியல் பெயர்:**- Sesamum indicum (சிசமம் இண்டிக்கம்)

**குடும்பம்:**- Pedaliaceae (பேடலியேசியே)

**சிங்களம்:** தல

**சமஸ்கிருதம்:** தில

**ஆங்கிலம்:** Gingelly oil plant

மகாவிஷ்ணுவிலிருந்து தோன்றியதால் எள்ளும் ஒரு தெய்வீக மூலிகையாகும். காத்தற் கடவுளிடம் இருந்து தோன்றியதால் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதிலும் எள்ளு முக்கிய பங்கு வகிக்கிறது. எள்ளும் அதிலிருந்து பெறப்படும் நல்லெண்ணெயும் உடலுக்கு வன்மையைக் கொடுக்கின்றன. ''இளைத்தவனுக்கு எள்ளுக்கொடு'' என்று ஒரு மருத்துவப் பழமொழியும் உள்ளது. எள் சிறு செடிவகுப்புக்குரியது. வயல்களில் பயிரிடப்படுகிறது. தனி இலைகள். வெள்ளை, செந்நிறப்பூக்கள் உள்ள இனங்களுண்டு. விதையிலும் வெள்ளை, கறுப்புநிற பேதங்களுண்டு.

எள் மங்கள, அமங்கல காரியங்கள் இரண்டிலும் பயன்படுத்தப்பட்டாலும் பெரும்பாலானவர்கள் அதை ஒரு அமங்கலக் காரியத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் பொருளாகத் தவறாகக் கருதுகிறார்கள். மரணக் கிரியைகள், திவசம், மாளயம், தர்ப்பணம் போன்றவற்றில் எள்ளுப் பயன்படுத்தப்படுவற்கு முக்கிய காரணம் அவ்விடங்களில் பேய், பிசாசு, துஷ்ட தேவதைகள் வருவதைத் தடுத்தற் பொருட்டேயாம். மங்கல நிகழ்வுகளில் எள் நவதானியங்களில் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது.

மேலும் நவக்கிரகங்களில் சனீசுவரனுக்குப் பிடித்த தானியமாக எள்ளும், பிடித்த உலோகமாக இரும்பும் கூறப்பட்டுள்ளது. எள்ளில் மிகுதியான அளவில் இரும்புச் சத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எள் இலை, பூ,காய், விதை, எண்ணெய் என்பன மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

எள் இலையை அரைத்து வீக்கம், கட்டிகளின் மேல் பூசி வர அவைமாறும்.

பூ ஊற வைத்த நீரால் கண்களைக் கழுவி வரக் கண்நோய் குணமாகும்.

கர்ப்பிணிகள் எள்ளையும் பனங்கட்டியையும் சேர்த்து இடித்து ஆறாம் மாதத்துக்குப் பின்னர் கொட்டைப் பாக்களவில் தினமும் சாப்பிட்டு வந்தால் மலச் சிக்கல் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதுடன் அவர்களுக்குத் தேவையான கல்சியம், இரும்புச் சத்து என்பனவும் கிடைக்கும்.



மூல நோயுள்ளவர்கள் கறுப்பு எள், வேர்க்கொம்பு, திப்பலி என்பவற்றைச் சம அளவில் எடுத்திடித்து வைத்துக் கொண்டு தினமும் தேன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் மூல நோய் இல்லாதொழியும்.

நல்லெண்ணெய் ஓர் அத்தியாவசியமான கொழுப்பமிலாமாகும். (Essential fatty acid) இது கர்ப்பாசய உறுப்புகளின் வளர்ச்சி, உரோம வளர்ச்சி, சர்மம் என்பவற்றுக்கு அவசியமான ஒன்றாகும். இது இரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகரிப்பதையும் தவிர்க்கிறது. எனவே இதை உணவாகப் பயன்படுத்திப் பயன்பெறலாம்.

அத்துடன், தலைக்கு வைப்பதன் மூலமும் உடலுக்குப் பூசிக் குளிப்பதன் மூலமும் கண்ணுக்கும் உடலுக்கும் குளிர்ச்சி ஏற்படுவதுடன் தோலில் கிருமித் தொற்றுக்கள் ஏற்படாமலும் தடுக்கும்.

வாய்க்கரம் அல்லது வாய்ப்புண் உள்ளவர்கள் நல்லெண்ணெயை வாயில் விட்டுக் கொப்புளித்துவர குணம் ஏற்படும். *(வளரும்)*



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏல விற்பனை

## டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்

2010 ஒகஸ்ட் மாதம்
14 ஆம் திகதி சனிக்கிழமை
முற்பகல் 10 மணியிலிருந்து

At LOLC Vehicle Yard Facility Centre,
98 J/1, Avissawella Road,
Mahabuthgamuwa, Wellampitiya.

CLC COMMERCIAL LEASING COMPANY LTD.

## MOTOR CARS

| | | | |
|---|---|---|---|
| PEUGO 406 | EXECUTIVE | 1997 | 300-XXXX |
| SUZUKI ALTO | | 2002 | WPKC-XXXX |
| MARUTI ZEN VXI | | 2005 | WPKA-XXXX |
| MARUTI 800CC | | 1995 | 19-XXXX |
| HONDA CIVIC EG8 | | 1993 | 19-XXXX |

## TRACTOR

| | | |
|---|---|---|
| TAFE 35DI | 2008 | NCRB-XXXX |

## THREE WHEELERS

| | | | |
|---|---|---|---|
| BAJAJ | AUTO 2 STROKE | 2004 | WPJD-XXXX |
| BAJAJ | AUTO 4 STROKE | 2009 | NWQS-XXXX |

## HAND TRACTORS

| | | |
|---|---|---|
| KUBOTA K75 | 2003 | WPSH-XXXX |
| NEWLION | 2003 | NCSH-XXXX |
| EDGRO SUPER 12 | 2008 | NCSF-XXXX |
| FARMERS GN12 | 2008 | EPSH-XXXX |

## MACHINERY

| | |
|---|---|
| DAKSHIMA 0035 TRESHER MACHINE | 3500 |

## LORRIES

| | | |
|---|---|---|
| ISUZU ELF NKR66E | 2000 | CPLA-XXXX |
| DAIHATSU HIJET | 2000 | SGJQ-XXXX |
| TOYOTA DYNA | 1994 | 68-XXXX |
| LANKA ASHOK LEYLAND | 1998 | 68-XXXX |
| TOYOTA DYNA | 1994 | 227-XXXX |
| JAC | 2008 | SPLF-XXXX |
| MITSUBISHI CANTER | 1997 | SPLF-XXXX |
| HONDA ACTY | 1998 | SPHO -XXXX |
| TOYOTA DYNA | 1994 | 227-XXXX |
| MITSUBISHI FUSO | 1994 | 226-XXXX |
| TATA 1613SE | 1999 | 227-XXXX |
| NISSAN ATLAS | 1995 | 68-XXXX |
| TATA ACE | 2008 | WPLF-XXXX |
| TATA ACE | 2009 | WPLG-XXXX |

## MOTOR VANS

| | | |
|---|---|---|
| TOYOTA TOWNACE CR36 | 1990 | 54-XXXX |
| MAZDA BONGO | 1991 | 56-XXXX |
| DAIHATSU HIJET | 1999 | WPJF-XXXX |
| TOYOTA HIACE LH 40 | 1981 | 60-XXXX |

2010 ஒகஸ்ட் 12 ஆம் திகதி வியாழக்கிழமையும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 5 மணிக்குமிடையில் பார்வையிடலாம்.

## CONDITIONS OF SALE

Entrance by a Non Refundable Ticket of Rs.500/- & Refundable Deposit of Rs.5000/- per person on Days of

Payment: 25% in cash at the fall of the Hammer (cash non refundable), Balance 75% also in Cash & removal latest by 3.00 p.m. on Saturday 22nd to paid to Lanka ORIX Leasing Company PLC., No.100/1, Sri Jayawardenepura Mw, Rajagiriya.

The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.

# Schokman & Samerawickreme

Government Approved & The Only ISO 9001:2000 Certied Reputed Pioneer Chartered Auctioneers, Consultant Valuers & Realators in Sri Lanka

Head Oce:
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593 Tel/Fax: 081 2224371
e-mail schokmankandy@sltnet.lk

City Oce & Showroom:
290, Havelock Road, Colombo 05.
Tel: 011 2502680, 2585408, Tel/Fax: 011 2588176
e-mail schokman@samera1892.com

Web: www.schokmanandsamerawickreme.com Our is An Islandwide Service of Quality

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய நோய் சிகிச்சைச் சேவையில் குடாநாடு வளர்ச்சி காண தடையாக அமைந்தது போர்ச் சூழலின் பாதிப்பே

## டாக்டர் ஜீ.ஆர். ஹன்டி ஞாபகார்த்தப் பேருரை 01

**இதய நோய் நிபுணர் சங்கத்தின் 10 ஆவது வருடாந்த விஞ்ஞான மாநாடு கொழும்பு சினமன்ஸ் கார்டின் ஹோட்டலில் கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்றது. அம் மாநாட்டில் "யாழ்ப்பாணத்தில் இதய நோய் சிகிச்சையும் எதிர்நோக்கும் சவால் களும்" என்ற தலைப்பில் டாக்டர் ஜீ.ஆர். ஹன்டி ஞாபகார்த்தப் பேருரையை யாழ்.போதனா வைத்தி யசாலை இதய நோய் வைத்திய நிபுணர் டாக்டர் P. லக்ஸ்மன் நிகழ்த்தினார். அவரது அந்த ஞாபகார்த்தப் பேருரையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.**



டாக்டர் ஜீ.ஆர். ஹன்டி

டாக்டர் ஜீ.ஆர். ஹன்டி அவர்கள் இதய சிகிச்சைத் துறையின் முன்னோடி மட்டுமல்லாமல் இலங்கை இதயநோய் நிபுணர் சங்கத்தின் ஸ்தாபகராகவும் விளங்கினார். அவர் மருத்துவப் பணியிலும் மருத்துவக் கல்வி போதிப்பதிலும் சிறந்து விளங்கியதுடன் தன்னுடைய கனிஷ்ட வைத்தியர்களுக்கு ஒரு சிறந்த முன் உதாரணமாகத் திகழ்ந்தார். அவர் தெய்வ பக்தியுள்ளவராக - ஒரு உண்மையான கிறிஸ்தவனாக வாழ்ந்தார். வேலைப் பழு காரணமாக அவருக்கு போதிய நேரம் கிடைக்காத போதிலும் தேவாலயம் செல்லவும் தன் சமூகப் பணிக்காகவும் நேரம் ஒதுக்கினார். இதனால் கொழும்பின் உயர் சமூக மட்டங்களில் நன்கு அறியப்பட்டவராக விளங்கினார். தன்னுடைய உயர் பணியை இறுதிவரை தொடர்ந்தார். அவர் மரணப் படுக்கையில் இருந்த போது கூட அதை மிகுந்த மனப் பக்குவத்துடன் ஏற்றுக் கொண்டதுடன் தனது 93 ஆவது வயதில் காலமானார்.

இதய சிகிச்சை தொடர்பான சேவை நலனுக்கான டாக்டர் ஜீ.ஆர்.ஹன்டி ஞாபகார்த்த நிதியத்தின் பங்களிப்பு மதிப்பிட முடியாதது. கொழும்பு தேசிய




வைத்தியசாலையின் இதய நோய் சிகிச்சைப் பிரிவுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 5 மில்லியன் ரூபாவை இந்நிதியம் வழங்கியுள்ளது. மேலும் இந்த நிதியத்தின் உதவியுடன் அங்கு குழந்தைகளுக்கான இதய சிகிச்சைப் பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.




பிறப்பின் போது காணப்படு கின்ற ASD, PDA போன்ற குறைபாடுகளுடன் காணப்பட்ட 100 குழந்தைகளின் இதய சத்திரசிகிச்சையை (Open Heart Surgery) ஒழுங்கு செய்தமை இதன் மற்றைய உன்னத சேவை ஆகும். இதற்கான செலவின் ஒரு பகுதி இந்த நிதியத்தால் ஏற்றுக் கொள்ளப் பட், மிகுதிச் செலவு ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணச் சமூகமும் இந்த நிதியத்தால் பெரிதும் பயனடைந்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் இதய சிகிச் சைப் பிரிவை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்த ஹன்டி ஞாபகார்த்த நிதியத்தின் முயற்சிகள் கிட்டியிருக்கா விட்டால் அந்தப் பணி தாமதப் பட்டிருக்கும். ஹன்டி ஞாபகார்த்த நிதியமானது யாழ். வைத்தியசாலை இதய நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்காக அரிமா கழகத்தினதும், றோட்டரி கழகத்தினதும் கூட்டு முயற்சியாலும் தனது சொந்த நிதியத்தின் மூலமாகவும் 24 மில்லியன் ரூபாவைத் திரட்டியது.

இந்த நாட்டின் முதல் இதய சிகிச்சை நிபுணரை நினைவு படுத்துகின்ற இந்த வேளையில் போரினால் பாதிக்கப் பட்ட ஒரு பிரதேசத்தில் வழங்கப்பட்ட இதய சிகிச்சை தொடர்பான சேவைகள் பற்றிப் பேசுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என நான் எண்ணுகின்றேன்.

இலங்கையின் வடமுனையில் உள்ள யாழ். மாவட்டம் வரலாற்று ரீதியாக, பண்பாடு ரீதியாக, மொழி ரீதியாக, நில அமைப்பு ரீதியாக தனித்துவம் வாய்ந்தது. போரினால் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் யாழ்ப்பாண சமுதாயத்தின் தனித்துவமான அம்சங் களில் அது சிறிய தாக்கத்தையே ஏற்படுத்தியது.


பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் யாழ். மாவட் டம் பாரிய வளர்ச்சி கண்டது. ஆனால் அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் போரின் காரணமாக 80 களில் காணப்பட்ட நிலைமையிலேயே இப்போதும் உள்ளது. மக்கள் எதிர் நோக்கிய துன்பங்கள் கற்பனைக்கும் அப்பாற்பட்டவை. மூன்று தசாப்த காலமாக நீடித்த போர் காரணமாக ஏறக் குறைய சனத்தொகையின் அரைவாசி மக்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறி உள்ளனர்.

1981 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாண மாவட்ட சனத்தொகை ஏறத்தாழ 975,000 பேர் ஆகக் காணப்பட்டது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதைய சனத்தொகை சுமார் 600,000 பேர் ஆகும். இந்த மனிதப் புலம்பெயர்வு அலை (Wave of human migration) சமுதாயத்தின் பல்வேறுபட்ட மட்டங்களிலும் சமூக ஊடியக்க பொறிமுறையிலும் (Social Mechanism) தாக்கத்தை ஏற்படுத்தியது. பெரும் பாலான தகுதி வாய்ந்த வைத் தியத்துறை நிபுணர்கள் வாய்ப் புக்களை நாடி இந்த நாட்டில் வேறு இடங்களுக்கோ அல்லது வெளிநாடு களுக்கோ போனமையால் சுகாதாரத் துறை அவ்வாறு பாதிக்கப்பட்ட துறை களில் ஒன்றாக உள்ளது.

உண்மையில் இதய சிகிச்சை தொடர் பான சேவைகள் யாழ்ப்பாண வைத்திய சாலையில் ஐம்பதுகளின் முதற் பகுதியில் அறிமுகம் செய்யப்பட்டது. அப்போது டாக்டர் ஏ.ரீ.எஸ்.போல் மயக்க மருந்து நிபுணர் ஒருவர், தாதிய உத்தியோத்தர் ஒருவர், மற்றும் உதவி வைத்திய நிபுணரொருவர் (Registrar) ஆகியோர் சகிதம் யாழ்ப்பாணத்திற்கு வந்து மூன்று வாரங்கள் தங்கியிருந்து சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டார். அவற்றில் பெரும்பாலானவை இருகூர் வால்பு தொடர்பானவை ஆகும். 1963 இல் டாக்டர் எஸ்.ஜே.ஸ்ரிபன் இதய சத்திர சிகிச்சை நிபுணராக நியமிக்கப்பட்டு இதய சிகிச்சை பிரிவு ஒன்று ஏற்படுத்தப் படும்வரை அவரின் சேவை தொடர்ந்தது. இதன் பின் டாக்டர் கணேசானந்தன் இச்சேவையைத் தொடர்ந்தார். 1970 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட டாக்டர் நற்குணம் 1977 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். இதனைத் தொடர்ந்து டாக்டர் ருத்ரா ராசரட்ணம் 1984 ஆம் ஆண்டு வரை சேவை புரிந்தார். இன்று சத்திரசிகிச்சை விடுதியாகக் காணப்படுகின்ற விடுதி 24ஆம் இலக்கக் கட்டடமே முதலாவது இதய சிகிச்சைப் பிரிவாக உருவாக்கப்பட்டது.

மூன்று தசாப்த காலத்துக்கு முன்பு எவ்வாறு இந்தச் சேவைகள் வழங்கப் பட்டன என்பதை பின்வரும் புள்ளி விவரம் எடுத்துக் காட்டுகிறது.

1970 - 1976 ஆம் காலப்பகுதிகளில் இதய மார்புச் சிகிச்சைப் பிரிவால் சுமார் 600 பாரிய மார்புச் சத்திர சிகிச்சைகள் (Major) மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 189 பேருக்கான சிகிச்சை இதய சத்திரசிகிச்சை தொடர்பானவை ஆகும்.




1984 ஆம் ஆண்டு டாக்டர் ருத்ரா இராசரத்தினம் சேவையிலிருந்து விலகிய பின்னர் எந்தவொரு இதய சத்திர சிகிச்சை நிபுணரோ (Cardio Thoracic Surgeon), இதய சிகிச்சை நிபுணரோ (Cardiologist) போர்ச்சூழல் காரணமாக இங்கு சேவை செய்ய முன்வராத காரணத்தால் இதய சிகிச்சை தொடர்பான சேவை கள் கைவிடப்பட வேண்டிய துரதிருஷ்ட வசமான சூழ்நிலை ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் இதய சிகிச்சை சேவைகளும் வசதி களும் நாட்டின் ஏனைய பாகங் களில் புதிதாக ஏற்படுத்தப் பட்டு மேலும் வளர்ச்சி கண்டன.

கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்திய சாலையில் காணப்பட்ட இதய சிகிச்சை சேவைகள் தவிர மேல் மாகாணத்திலுள்ள கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு வைத்தியசாலைகளும் இந்தச் சேவையைப் பெற்றன. இவற்றுடன் கண்டி, காலி, மாத்தறை, பதுளை, இரத்தினபுரி, குருணாகல், அனுராதபுரம் வைத்தியசாலைகளுக்கும் இந்தச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டன.

1984 ஆம் ஆண்டு இதய சிகிச்சை சேவைகள் யாழ். வைத்தியசாலையில் நிறுத்தப்பட்டபோது அதன் தாக்கம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் முழு வட பகுதியிலுமே உணரப்பட்டது. ஏனெனில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஏறத்தாழ ஒரு மில்லியன் மக்கள் யாழ். வைத்தியசாலையின் சேவையைப் பெற்று பயனடைந்தார்கள். இதனால் இந்தச் சேவையை பெற்றுக் கொள்வதில் இப்பகுதி மக்கள் 1984 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

1984 - 1990 காலப்பகுதியில் யாழ்ப்பாணத் திலிருந்து கொழும்புக்கான தரைப்பயணம் நோயாளிகளைப் பொறுத்தவரையில் மிகவும் கஷ்டமான தாகவும் நெருக்கடி மிகுந்ததாகவும் காணப்பட்டது. சில வேளைகளில் இப் பயணம் சுமார் 40 - 48 மணி நேரம் கூட நீடித்தது.


வைத்திய கலாநிதி P.லக்ஸ்மன்
இதயநோய் சிகிச்சை நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை

1990 - 1995 காலப் பகுதி யில் மிகக் கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இந்தப் பயணம் சாத்தியமற்ற ஒன்றாகவே மாறிவிட்டது. ஏனென்றால், மக்கள் கிளாலிக் கடல் நீரேரிப் பகுதியை கடந்துதான் வன்னிப் பகுதியை அடைந்து கொழும்புக்கான தரைப் பயணத்தைத் தொடர வேண்டியிருந்தது. இது மிகவும் ஆபத்தானதாகக் காணப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் மாத்திரம் ஐ.சி.ஆர். சி. கப்பல்கள் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு பின்பு அங்கிருந்து வாகனங்கள் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டு A9 பாதை திறக்கப்படும் வரை இதே நிலையே தொடர்ந்தது. இக்காலப்பகுதியில் பல நோயாளிகள் உரிய சிகிச்சையின்றி இறந்திருக்கக் கூடும். ஆனால் இவை தொடர் பான புள்ளிவிவரங்கள் இல்லை.



*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம்பகம் கிராம மீளக்குடியமர்வு பதிவுகள்

தென்மராட்சி, ஓக 08

தென்மராட்சி கிழக்கு கரம்பகம் கிராம் அலுவலர் பிரிவில் மீள் குடியமர்வுக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பிரிவில் மீளக்குடியேற விரும்பும் மக்கள் உடனடியாக கிராம அலுவலர் அலுவலகத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-207)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு இ.பசுபதீஸ்வரன் SLPS 2-II
M.A, B.com, Dip.in Ed.

எமது பாடசாலையில் ஆசிரியராகவும், விளையாட்டு பொறுப்பாசிரியராகவும் அளப்பரிய சேவைகள் புரிந்த திரு இ.பசுபதீஸ்வரன் அவர்கள் இலங்கை அதிபர் சேவை SLPS.2-II இற்கு பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவர்கள் மேலும் சிறப்புக்களைப் பெற வாழ்த்துகின்றோம்.

நல்லுறவு மன்றம்,
யா/ செங்குந்த இந்துக்கல்லூரி. (சி/569734)

## போக்குவரத்து முகாமையாளர் தேவை

பிரத்தியேகமான பிரயாண நிர்வாகி ஒருவரின் மாளிப்பாயில் அமைந்துள்ள காரியாலயத்தில் பணியாற்ற போக்குவரத்து முகாமையாளர் தேவை.

போக்குவரத்து நிர்வாகத்துறையில் அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.

தமிழ், ஆங்கில மொழியில் சரளமான பரிச்சயம் இருப்பது அவசியம்.

சம்பளம் பேசித் தீர்மானித்துக்கொள்ளலாம்.

சுயவிவரக் கோவையை அனுப்புக.

intotal@aol.Com

AERO STAR TRAVELS &TOURS (PVT) LTD,
246/2, NAWALA ROAD, NAWALA.
TEL: 075 8264655

## மணமகள் தேவை

R.C. லண்டன் P.R. உடைய யாழ். கௌரவ குடும்பம், 29 வயது நிரம்பிய மணமகனுக்கு 5'5" மேல் உயரமுடைய படித்த அழகிய மணமகள் தேவை.

தொடர்பு கொள்க:
0774859302

## வாடகை/குத்தகை

காங்கேசன்துறை வீதியில் மருதனார் மடம் ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு அருகில் வீதியோரமாக 4000 சது விஸ்தீரணத்தில் வர்த்தகக் கட்டடத் தொகுதி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத் தொகுதியை வாடகை/குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள விரும்பும் அரச/அரச சார்பற்ற/வர்த்தக நிறுவனத்துக்கு ஏற்றவகையில் கட்டடத்தொகுதி விரும்பிய வடிவில் அமைத்துவழங்கப்படும்.

விவரங்களுக்கு: தொ.பே:0778445705
மின்னஞ்சல்: Suhi 123@gmail.com

## Jesus Calls

இயேசு அழைக்கிறார் – ஜெப கோபுரம்
யாழ்ப்பாணம்
உதவி பராமரிப்பாளர் உடனடியாக தேவை

எதிர்பார்க்கப்படுவது :-

- வயது 25ற்கும் – 45ற்கும் இடைப்பட்டவர்.
- கணனி அறிவு உள்ளவர்.
- ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழித்திறன் உடையவர்.
- ஊழியத்தை அர்ப்பணிப்போடு செய்பவர்.
- அலுவலக அனுபவம் உள்ளவர்.

விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் ( e-mail ) மூலம் அனுப்பவும்.

Administrator, Jesus Calls International,
15/1B, Joseph Lane
Colombo-04, Fax: 011 2598251
Email: jcisladmin@sltnet.lk

மணி நேர ஜெப உதவிக்கு
011 2555400



சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேர்பவனி காணத் திரண்டு வாரீர்! வாரீர்!

இரதோற்சவப் பெருவிழா நடைபெறும் இன்றைய நாள் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் மங்களம் பொங்கும் நன்னாளாக அமைய துர்க்கை அம்மன் திருப்பாதங்களைப் பணிந்து வேண்டுகின்றோம். அனைவரும் வாரீர் வாரீர் தேர்வடம் பிடிப்போம் வாரீர்! வாரீர்!

செயலாளர்,
தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம்.
திருமதி கு.கமலாதேவி

## STUDY IN UK

CANADA, AUSTRALIA, USA, SWISS
For Sept 2010/2011 INTAKE

**CAS LETTERS WITHIN 2 DAY'S**

↓

**WITHOUT - IELTS**
**DOWN PAYMENT - $1500**
**FULL COURSE FEE - $3000**

20 HOUR'S WORK (Level-6)
**Hotel Management**
6 Months Study and 6 Months Work - $3000
1 Year Study and 1 Year Work - $3000

Sponsor/Accommodation
Airport Pickup Arrangement (Part time Job)
Mohamed - 0716825369
Kamalini - 0774739720
Priya - 0115655066

**Educare International**
422/1, Galle Road, Colombo-03.
educare @shnet.lk

## ASIAN FURNITURE
## ஏசியன் தளபாடம்



மொறட்டுவவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அலுமாரிகள், கதிரைகள், அலுவலக மேசைகள், கணனிமேசைகள், மெத்தைகள், கட்டில்கள் போன்ற அனைத்து தளபாடங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற நாடவேண்டிய இடம்.

உள்நாட்டு வெளிநாட்டிற்கான ஆவணங்கள்,பொதிகள்,சீடிக்கள் மற்றும் கொழும்பு, யாழ்.பொதிகள் குறைந்த கட்டணத்தில் அனுப்பி வைக்கப்படும்.



## ஏசியன் ராண்ஸ்போட்

யாழ்-கொழும்பு
கொழும்பு- யாழ்



3 கிலோவுக்கு குறையாத பொதிகளை லண்டன், சுவிஸ், கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளிற்கு அனுப்புவதற்கு 1 கிலோவுக்கு 450/- மட்டுமே.

யாழ்ப்பாணம்
தொடர்பு: ஏசியன் தளபாடம்
133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212227892, 0773583879.

கொழும்பு
36/2, கதிரேசன் வீதி,
கொழும்பு 13


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக 08

புலோலி வட மேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மெய்வன்மைப் போட்டியும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார்.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு நிலையத் தலைவர் த.அரவிந்தன் தலைமையில் பொதுக்கூட்டமும், பரிசளிப்பு விழாவும் நடைபெறும். (204)


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02 ★ 02 ★ 1977



ஆண்டவன் அடியில் 08 ★ 08 ★ 2005

அமரர் தருமராசா சிவானந்தம்

கற்றவர்க்கும் உற்றவர்க்கும் உறவு ஆனவன்-நண்பர்
போற்றுகின்ற பண்புடைய தோழனானவன்
ஆற்றலுடன் ஆங்கிலத்தில் ஆசானானவன்-ஆனந்தன்
பெற்றவர்க்கு பெருமை சேர்க்கும் புதல்வனானவன்

பாராளும் சந்நிதியான் தேரேறும் கோலம் காண
ஊரோடு ஒத்துழைத்தும் சீரோடு பாலம் கண்டாய்-அது
வேரோடு உனை மாய்க்கும் பொறியாகிப் போனதடா
யாரோடு சொல்லியழ யாரெமக்கு நீதி தர?

(101673) இடைக்காடு நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி தேவசகாயம்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த திருமதி மனோன்மணி தேவசகாயம் 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேக்கப் தேவசகாயத்தின் (முன்னாள் அதிபர், மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை) அன்பு மனைவியும் திருமதி நாகம்மா சிவகுரு, காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், இராசரத்தினம் ஆகியோரின் சகோதரரும் தேவமனோகரி சத்தியரத்தினம், தேவமனோகரன், தேவமனோசுதன், தேவமனோரதன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஸ்ரெலா, சசில்டா, சைலஜா, சோபாய், எஸ்மன், ஸ்ரவினி, சொந்தரின், செருபின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சத்தியரத்தினம் மற்றும் சறோஜினி, தயாகரி, வசந்தி ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு 'மனோவாசம்', ஏழாலை வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: T.தேவமனோகரன் (மகன்)

(101683) ILE SUPPLY CHAIN CENTER



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியேற இன்னும் ஒரு சில வருடங்கள் காத்திருக்கக் கோருகிறார் கெஹலிய

போருக்குப்பின் வடக்கு-தெற்கு உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பும் முயற்சியில் தேசிய சமாதானப் பேரவை பெரும் பங்காற்றி வருகின்றது. நாட்டில் நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில்



ஊடகங்களுக்குள்ள பெரும் பங்கினை உணர்ந்துகொண்ட தேசிய சமாதானப் பேரவை ஊடகவியலாளர்களை

## மாவட்டச் செயலகங்களில் ஊடகவியலாளருக்கு அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடு

பிரதேசங்களுக்கிடையே பரிமாற்றம் செய்து அங்குள்ள மக்களின் அபிலாஷைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது வாழ்வியல் தன்மைகள் ஆகியவற்றினை அறிந்து அவற்றினை ஊடகங்கள் மூலம் மற்றவர்களும் அறிந்துகொள்ள வைக்க பல்வேறு நடவடிக்கைகளைக் கடந்த காலங்களில் மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே தென்னிலங்கை பத்திரிகைத் துறையினர் கிழக்கிலங்கை ஊடகவியலாளர்கள் போருக்குப் பின் வடபகுதிக்கு அழைத்துவரப்பட்டு இங்குள்ள நிலைமைகளை அவர்கள் தெரிந்துகொள்ள தேசிய சமாதானப் பேரவை சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அம்முயற்சியின் ஓர் அங்கமாக வடபகுதி ஊடகவியலாளர்களையும் தென்பகுதிக்கு அழைத்துச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அங்குள்ள ஊடகத்துறையினர் ஆகியோருடனான சந்திப்பினையும் கலந்துரையாடல் களையும் ஒழுங்கு செய்து கொடுக்க தேசிய சமாதானப் பேரவை முன்வந்தது. அதற்கான ஒழுங்குகள் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளின் ஊடகவியலாளர்களையும் தமது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அச்சு, இலத்திரனியல் ஊடகங்களின் ஊடகவியலாளர்களையும் வடக்கு-தெற்கு உறவுப்பாலப் பயணத்திற்காகத் தெரிவு செய்தது. கடந்த ஜூலை 29ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் வடபகுதி ஊடகவியலாளர்கள் தென்பகுதியில் கலந்துகொள்ளவுள்ள நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகளை தேசிய சமாதானப் பேரவை ஏற்பாடு செய்திருந்தது.

28ஆம் திகதி புதன்கிழமை மாலை 7மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையிலிருந்து வடக்கு- தெற்கு நல்லுறவுப் பால நிகழ்ச்சிக்கு செல்ல வென ஒழுங்கு செய்யப்பட்ட தனியார் மினிபஸ்ஸில் எமது பயணம் ஆரம்பமானது. ஒரு பெண் ஊடகவியலாளர் உட்பட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பதினாறு ஊடகவியலாளர்கள் இப்பயணத்தில் இணைந்து கொண்டார்கள். இரவு 9.30 மணியளவில் பஸ் வவுனியாவைச் சென்றடைந்தபோது வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் மூன்று ஊடகவியலாளர்கள் வவுனியாவிலிருந்து எம்முடன் இணைந்து கொண்டனர்.

மறுநாள் 29ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவிருந்த முதலாவது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நாம் ஆர்வம் காட்டிய போதிலும் நாம் பயணித்த வாகனத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக 29ஆம் திகதி காலை 8.30 மணிக்கே எம்மால் கொழும்பைச் சென்றடைய முடிந்தது.

வடபகுதி ஊடகவியலாளர்கள் தங்குவதற்காக தேசிய சமாதானப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பம்பலப்பிட்டியில் உள்ள 'ஹொட்டல் வெஸ்ரன்'இல் எமது வரவை எதிர்பார்த்து நின்ற தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெஹன் பெரேரா, தேசிய சமாதானப் பேரவையின் ஊடகக்குழுத் தலைவர் துசால் விதானகே, தேசிய சமாதானப் பேரவையின் ஊடக உதவி இணைப்பாளர் சாந்தமகிந்தபால மற்றும் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் எம்மை அன்போடு வரவேற்றார்கள்.

காலை உணவை முடித்துக் கொண்டு முதல் நாள் நிகழ்ச்சிக்கு நாம் தயாரானோம். எமது பயணத்தில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக அன்றைய தினம் முதல் நிகழ்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'வீரகேசரி' பத்திரிகை நிறுவனத்திற்கு விஜயம் செய்யும் நிகழ்ச்சி ரத்துச் செய்யப்பட்டது. அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களை சமூக சமய நடுநிலை மையத்தில் சந்தித்தோம். அங்கு உரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழக மாணவத் தலைவர் [illegible] முகாமிற்கு நாம் விஜயம் மேற்கொண்டபோது, வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அங்கு சந்தித்த கஷ்டங்களையும், துன்பங்களையும் விலாவாரியாக எடுத்துக்கூறினார். வெளியால் அம்முகாம்களுக்குள் செல்லத் தடைவிதிக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த தேர்தல் காலத்தில் தேசிய சமாதானப் பேரவை சார்பிலேயே தாம் அங்கு செல்ல முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார். சிறிய கொட்டகை ஒன்றுள் நாலு அல்லது ஐந்து குடும்பங்கள் அங்கு வாழ்ந்ததையும் அவர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகளும் காணப்படவில்லை எனவும், அங்கிருந்த மாணவர்களுக்கு கல்வி கற்க விருப்பம் இருந்த போதிலும் அவ்வசதி அவர்களுக்குக் கிட்டவில்லை எனவும் அவர் தெரிவித்தார். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அக்கறைகாட்டப்படவில்லையெனவும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். பெரும்பான்மையின மக்கள் மத்தியிலும் எமது மக்களின் கஷ்டங்களும் பிரச்சினைகளும் உணரப்பட்டிருக்கின்றது என்ற மன ஆறுதலோடு அவர்களிடம் இருந்து விடைபெற்றோம்.

அன்று பிற்பகல் ஒரு மணிக்கு ஊடகத்துறை அமைச்சில் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல உடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. அமைச்சர், வடபகுதி ஊடகவியலாளர்களை வரவேற்று உரையாற்றும் போது ஊடகவியலாளர்களை எனது நண்பர்கள் என்றே பார்க்கின்றேன். ஊடகவியலாளர்கள் என்ற வகையில் கடந்த காலத்தில் பாரிய அழுத்தங்களுக்கு முகம் கொடுத்து இங்கு வந்திருக்கின்றீர்கள். அனைத்து மக்களிடமும் நல்லுறவு பேணப்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் மக்களின் தேவையறிந்து, அவை மக்களுக்கு கிடைக்க உதவ வேண்டும். ஊடகவியலாளர்களுடன் கருத்தாடலை நடத்தவுள்ளோம். முதலில் கண்டியிலும் தொடர்ந்து திருகோணமலையிலும் நடத்தவுள்ளோம். உங்களையும் விரைவில் இக்கருத்தாடல்மூலம் சந்திக்கவுள்ளோம்.

தற்போது வடக்கில் அபிவிருத்தி நடைபெறுகின்ற போதிலும் நீங்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றீர்கள். அப்படியான பிரச்சினைகளுக்கு எப்படியான தீர்வினைக் காணலாம் என கலந்துரையாடி வருகின்றோம். வடக்கு- கிழக்கில் நடைபெறுகின்ற அபிவிருத்தி சம்பந்தமான செய்திகளை ஊடகங்கள் வெளியிடவேண்டும். அபிவிருத்தி நடைபெறாவிடில் அது சம்பந்தமாகவும் செய்திகள் வெளியிடப்படல் வேண்டும். சகல மாவட்டச் செயலகங்கள் தோறும் ஊடகப் பிரிவை உருவாக்கவுள்ளோம். ஊடக அமைச்சினால் வழங்கப்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கான அடையாள அட்டையினை தாங்கள் கடமையாற்றும் ஊடக நிறுவனம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வன்செயலினால் உயிரிழந்த ஊடகவியலாளர்களுக்கு நட்டஈடு வழங்கும் திட்டம் ஏதும் இருக்கின்றதா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது அது சம்பந்தமான விடயங்கள் எதுவும் தனது கவனத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லையெனவும் தற்போது அது சம்பந்தமான நடைமுறைகள் எதுவும் இல்லையெனவும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்கள் ஆதாரங்களுடன் தனது கவனத்தின் கீழ் கொண்டு வந்தால் தான் அதனை பரிசீலிக்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் தமது தொழிலுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு ஏதாவது உதவ முடியுமா என அமைச்சரிடம் கேட்கப்பட்டபோது அதற்கான ஒரு லட்சம் ரூபா கடன் திட்டம் ஒன்று உள்ளதாகவும் ஊடகவியலாளர்கள் தமது பிரதேசங்களில் உள்ள ஊடகவியலாளர்கள் சங்கங்கள் மூலம் தொடர்பு கொண்டால் அத்தகைய கடனைப் பெற முடியும் எனவும் அமைச்சர் பதிலளித்தார்.

வடக்கு-கிழக்கு ஊடகவியலாளர் உறவுப்பால நிகழ்சித் தொகுப்பு -1



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள் யாழ். குடாநாட்டில் தெளிவாகக் கேட்பதில்லை என ஊடகவியலாளர் ஒருவரால் தெரிவிக்கப்பட்ட போது கொக்காவிலிலுள்ள ஒலிபரப்புக் கோபுர திருத்த வேலைகள் நடைபெற்று வருவதாகவும் பொறியியலாளர்கள் நாளை அங்கு அனுப்பிவைக்கப் படுவார்கள் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

**திவ்விய குமார்**

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீள்குடியேற்றம் சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் கேட்டபோது 30 ஆண்டுகள் பொறுத்திருந்தீ நீங்கள் இன்னமும் ஒரு சில ஆண்டுகள் பொறுத்திருங்கள். நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத் தப்பட்ட பின்னர் அது நிறைவேற்றப்படும் எனவும் அமைச்சர் பதிலளித்தார்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ப்பு கலர்மீன்கள் விற்பனை

கப்பீஸ், கோல்ட்பிஷ், ஏஞ்சல், கலிக்கோ, குரா, காப்ஸ் போன்ற கலர்மீன்களும் ஏனைய வகை மீன்களும் அவற்றுக்குரிய உபகரணங்களும் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு :- ஓரியன்டல் அக்கறியம்
(மல்ரி பாம் சென்ரர்) 61, இராமநாதன் வீதி, கலட்டி (101700)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தினதும்
வி.கழகத்தினதும் உறுப்பினர்
N.எழில்மோகன் (கலா) அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி நாகராசா கமலாம்பிகை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய ச.ச.நிலையமும்,
(101693) விளையாட்டுக்கழகமும்.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவ பீடத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் கைத்தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- சாருஜன் 0771166253

## விற்பனைக்கு

பருத்தித்துறை Courts Roadஇல் அமைந்துள்ள 6 பரப்பு 6 குழி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- 011 2360220

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் 2½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அருகில்.

தொடர்பு 077111400

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகர பிரதான வீதிகளில், U.K விசா ஆலோசனை நிறுவனத்துக்கு, 3 அறைகளுடைய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0718107181

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி முருகேசு



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய திருமதி மகேஸ்வரி முருகேசு 05.08.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - வேதநாயகம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற இராமலிங்கம் முருகேசுவின் மனைவியும் காலஞ்சென்ற இராசநாயகத்தின் சகோதரியும் திலகத்தின் தாயாரும் யுவராஜ் செல்லையாவின் மாமியாரும் கௌரீசன், கௌரீஸ்வரி, கௌரிமனோகரி, கௌரிசங்கர், கௌரிகரன் ஆகியோரின் மாமியும் சிவசங்கரி, முருகதாஸ் ஆகியோரின் அம்மம்மாவும் சுபோதினி, பிரபாகரன், அபிராமி, செந்தூரன், சாரங்கன், பவித்திரன், வைகரி, ஆரணி, கௌதமன், மயூரி, தமிழ்மாறன், திலீபன், மாதுமை, வாணன் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.08.2010) சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9 மணி வரையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 11 மணிவரையும் 10, Cachet Wood Court, 16th Ave & Hwy 404 இல் அமைந்துள்ள Highland Funeral Home - Markham Chapelஇல் பார்வைக்காக வைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை Bowmanville Crematoriumஇல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 416 - 278 6760,
905 - 597 0685

கனடா. S.பிரபாகரன்.

### திருமதி லில்லி நேசமணி கனக்ரத்தினம்



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த லில்லி நேசமணி கனகரத்தினம் நேற்று (07.08.2010) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜே.சி. கனகரத்தினத்தின் (உபதேசியார்) அன்பு மனைவியும், ஏஞ்சலின் செபரத்தினம் (ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), ஜெபநேசன் (கனடா), செல்வரஞ்சினி இராசையா (ஆசிரியை, பாலர் பாடசாலை, தென்னிந்தியத் திருச்சபை, வட்டுக்கோட்டை), சத்தியரஞ்சினி அருந்தவஈஸ்வரன் (ஜேர்மனி), ஜீவரஞ்சினி, ஜெபரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையில் நடைபெற்று, பூதவுடல் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
T.P. : 0213214926

தகவல் :
திருமதி ஏஞ்சலின் செபரத்தினம்
(101695) (மகள்).

## DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS
## GAMA NEGUMA DEVELOPMENT PROGRAMME - 2010

| NO | PARTICULARS | REQUIRED NOS. | NON REFUNDABLE DEPOSIT (RS) |
|---|---|---|---|
| 01 | SUPPLY AND INSTALLATION OF DRIP IRRIGATION SYSTEM TO BANANA DENSE PLANTING | 50 UNITS | 1000.00 |

1. The Government Agent, Jaffna invites sealed Bids from eligible and qualified bidders for the supply and installation of Drip Irrigation System to the Banana dense planting.
2. Interested Bidders may obtain information from the Office of the Deputy Director of Agriculture (Ext), Palaly Road, Jaffna on any working days from 9 am to 4 pm. Contract No 021 222 2175.
3. A complete set of bidding documents in English language may be purchased by interested Bidders from the Finance Branch of the office of the Deputy Director of Agriculture (Ext) from 09.08.2009 until 31.08.2009 between 9 am to 4 pm upon payment of non refundable fees of rupees Thousand (1,000.00) at the Finance Branch of the Office of the Deputy Director of Agriculture (Ext) or by submission of a Cheque in favor of Deputy Director of Agriculture (Ext).
4. Bid shall be deposited in the Tender box or sent by under Registered Post to reach the Planning Secretariat, District Secretariat, Jaffna on or before 01.09.2009 at 3.00 pm. Late Bids will be rejected.
3. Bids will be opened on 02.09.2009 at 10.00 am in the present of Bidders or their authorized Representative at the, District Secretariat, Jaffna.
4. Duly filled and scaled Bids to be marked "Bids for Procurement of Supply and Installation of Drip Irrigation System to the Banana dense planting on the left hand corner of the envelop.

**Mrs.Emelda Sukumar**
**Government Agent and District Secretary**
**District Secretariat**
**Jaffna**

## முன்பள்ளி கல்விச் சான்றிதழ் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஓக.8

இலங்கையில் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப் பப்படிவங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த. சாதாரண தரத்தில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் முதல்மொழி உட்பட ஆறுபாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும் இவ்விரங்களுக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து விண்ணப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.(ஒ-ஐ)

'நிலவு' நிறுவனம் நடாத்தும்

## - தமிழ் மென்பொருள் அறிமுக விழா -





இடம் : வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்
காலம் : 14/08/2010 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி

மென்பொருள்களின் செயல்முறை விளக்கமும் விற்பனையும் இடம்பெறும்.

வெளியிடப்படும் மென்பொருள்கள்

பொன்மொழி, பொன்பேனா, பொன்விழி

புத்தகம்.com ஈழத்தமிழரின் சர்வதேச புத்தகக்கடை! உங்கள் புத்தகங்களை நாங்கள் விற்கிறோம்!!

- அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் -



பொன் தமிழ்
தமிழால் கணினி உலகை வெல்வோம்




பொன்மொழி
தமிழுக்குத் தரமான, விரிவான சொல்திருத்தியுடன் அகராதி, அகரவரிசையாக்கம் என வசதிகளைக் கொண்ட ஒரு மென்பொருள்.




பொன்பேனா
உங்களது கையெழுத்தினை உடனடியாக தமிழில் தட்டச்சு செய்துதரும் மென்பொருள்.




பொன்விழி
Scan செய்யப்பட்ட பக்கங்களில் இருந்து தமிழ் எழுத்துகளை பிரித்து உணர்ந்து தட்டச்சு செய்துதரும் மென்பொருள். தமிழ் OCR.

தொடர்புகளுக்கு : 0 777 769 751, 0 777 707 839

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை. முன்னனுபவம் உள்ளவர்கள், பழக விரும்புயவர்கள் (ஆண்கள் மட்டும்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை
24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0212227179

## மாங்கல்யா திருமணசேவை

24 வருஷமாக திருப்தியான, நம்பிக்கையான, துரிதமான, சேவை நடப்பதை என்னுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் நன்கு அறிவர். கவலைப்பட்டு அலைந்து திரிந்தும் மனதிற்கேற்ற சாதகங்கள் கிடைக்கவில்லையென்று கவலைப்படாமல் தொடர்புகொள்ளவும். சகல நாள்களிலும் ஒரு மணிக்கு பின் தொடர்புகொள்ளலாம்.

கு.திருவிளங்கம், 90, சட்டநாதர் கோவில் வீதி,
நல்லூர் வடக்கு. 021 222 6043, 0771386846

## தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் கணனி நிறுவனம் ஒன்றுக்கு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு :
இல.01, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி (நீராவியடி
பிள்ளையார் கோயில் முன்பாக),
யாழ்ப்பாணம்.

## கணனி விற்பனைக்குண்டு

Dell Studio XPS
Intel 17 2.66 GHz
DDR-3 Ram 6 GB
500GB (6.5 Gb/s) Hard Disk
24" LCD (LED) Dell Display
Blue Ray R/W & DVD R/W
More Details:
0779835541, 0778448627

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கதவு திறப்பது எப்போது?

நாட்டில் இயல்புநிலை தோன்றுவதற்கான எத்தனங்கள் பரவலாக முன்னெடுக்கப்படுகின்றன. மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகள் சிலரின் விடுதலை, அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவெல்லாம், கட்டம் கட்டமாக நிகழ்ந்து வருகின்றன. நீண்ட காலமாக நடைபெற்ற போரினால் வாழ்வின்மீது பிடிப்பற்றுக்கிடந்த மக்களுக்கு இவையெல்லாமே நம்பிக்கையின் கீற்றுக்கள்தான். ஆனாலும் இத்தனை ஆரவாரங்களுக்கு மிடையில் சிறையில் வாடுவோரின் சில குரல்கள் இன்னமும் உரியவர்களின் காதுகளுக்கு எட்டியதாகத் தெரியவில்லை.

புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் 765 அரசியல் கைதிகள் இன்னமும் விடுதலையாகாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்துவிட்டது, புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்று அரசாங்கம் அறிவித்து 18 மாதங்கள் உருண்டோடிவிட்டன. புலிகள் அமைப்பின் இணைந்திருந்தவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு படிப்படியாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைவிட ஒருபடி மேலே போய், புலிகளின் அடுத்த தலைவர் தானேதான் என்று மே இறுதியில் பிரகடனம் செய்த கே.பி.என்கிற குமரன் பத்மநாதனுக்குக் கூட சொகுசு வாழ்க்கை அளிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் கசிகின்றன. ஆனால் புலிகளோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் என்போரின் வாழ்வு இன்னமும் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருள் கவிந்த நிலையிலேயேதான் நகர்கிறது.

எப்போது விடுதலை கிடைக்கும்? என்ற ஏக்கம் நிரம்பிய வினாவோடுதான் இந்த அரசியல் கைதிகளின் ஒவ்வொரு காலையும் விடிகின்றது. ஆயினும் இவர்களுக்கு இன்னமும் விடிவு வெகுதூரத்திலேயே- எட்டாக்கனியாகவே-இருக்கின்றது. சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் சந்தேகத்தின் பின்னர் கைது செய்யப்பட்டவர்களும் விசாரணைகளும் இன்றி பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தபடி, வெளியுலகத் தொடர்புகள் எதுவுமின்றி நான்கு சுவர்களுக்குள் நடைப்பிணங்களாகவே இவர்கள் நடமாடிவருகின்றனர்.

தம்முடைய விடுதலை குறித்து நடவடிக்கை எடுக்கும்படி தமிழ் அரசியல் கைதிகள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் பலமுறை உருக்கமான கடிதங்களை அனுப்பி வைத்திருந்தனர். ஆனாலும் இவற்றுக்கெல்லாம் பதிலேதும் கிடைக்கவில்லை. கடைசியாக இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வல்லமை கொண்டவர்கள் எனக் கருதப்படும் பௌத்த மதத்தின் முக்கியமான அஸ்கிரிய, மல்வத்த, சியாம் பீடங்களின் மகாநாயக்கர்களுக்கும் இவர்கள் தம்மை விடுவிக்க ஆவன செய்யுமாறு கடிதங்களை அனுப்பியிருந்தனர். அதற்கும் பதில் இல்லை. தொடர்ந்தும் இன்னல்களைச் சந்தித்தபடியே இவர்களின் பொழுதுகள் நகர்கின்றன.

நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லப்படுவதும் திரும்பவும் சிறைச்சாலைக்கு அழைத்து வரப்படுவதுமாக அவர்களின் வாழ்க்கை அல்லாடுகிறது.

ஒவ்வொரு முறையும் இவர்கள் நீதிமன்ற விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும்போதும் மீளவும் உள்ளே கொண்டுவரப்படும்போதும் முப்படையினராலும் இவர்கள் உடல் பரிசோதனை செய்யப்படுகின்ற அவலம் இன்னமும் தொடர்கதையாகவே நீள்கின்றது. இதுதவிர சிலவேளைகளில் சிறைக்காவலர்களின் மூர்க்கமான கோபம் கைதிகளையே பதம்பார்க்கிறது. கறுப்பு ஜூலை தினத்தன்று-23-07-2010 அன்று-தமிழ் அரசியல் கைதியொருவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் அளவுக்கு சிறைக்காவலர்களால் தாக்கப்பட்ட சம்பவம், கைதிகள் மீது இன்னமும் வன்முறை தொடர்வதையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலுள்ள இன்னொரு பரிதாபம் என்னவென்றால் குற்றமேதும் அறியாத - விருத்தெரியாத-உலகம் புரியாத-பச்சிளம் பாலகர்கள் கூட தடுத்து வைக்கப்பட்டிருப்பதுதான். ஒன்றரை வயதுமுதல் ஐந்து வயது வரையான இந்தத் தளிர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது தாய்மாரோடு இரும்புக் கம்பிகளுக்குப் பின்னாலேயே வாழ்ந்து வருகிறார்கள். துள்ளித்திரிய வேண்டிய வயதில் துடுக்கடங்கி சிறைக்குள்ளேயே முடங்கிப் போகின்ற இந்தப் பிஞ்சுகளின் பரிதாப நிலையை என்னவென்பது? இவர்களுக்குரிய போஷாக்கு உணவுகள் கூட கிடைப்பதில்லை என்றும் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் புதிய மகசின் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள கைதிகளின் அவலத்தை நேரில் கண்ணுற்ற, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தமிழ் அரசியல் கைதிகளை பிணையில் விடுவிக்கக் கோரி சட்டமா அதிபருடனும், நீதியமைச்சருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.

கேளுங்கள் தரப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும் என்பது ஆன்மீகக் கூற்று. தமிழ் அரசியல் கைதிகள் காலங்காலமாக அதிகாரத்தின் கதவுகளைப் பலமாகவே - பல்வேறு வழிகளில் - தட்டிவருகிறார்கள். கதவு திறக்குமா? கைதிகளுக்கு விடிவு பிறக்குமா? இவர்களுக்குப் யார் சொல்வார் பதில்?

## நோய் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக

# டெங்கு ஒழிப்பு சுத்திரிகரிப்புப் பணிகள்; நாளை இரண்டாம் கட்ட செயற்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஓக8

இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்பட்டு வரும் இரண்டாம் கட்ட செயற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதியின் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய டெங்கு தடுப்புச் செயலணிக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஓகஸ்ட் மாதத்தில் நான்கு நாள்கள் (2ஆம், 9ஆம், 21 ஆம், 28 ஆம் திகதிகள்) இலங்கை முழுவதும் டெங்கு நோய்த் தடுப்பு தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே. வடமாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற டெங்கு நோய் கட்டுப்பாடு தொடர்பான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய குறித்த தினத்தில் சகல வியாபார நிறுவனங்கள், சந்தைகள், தொழிற்சாலைகள் என்பனவற்றில் டெங்கு தடுப்பு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.அரசஅதிபர் இமெல்டா சுகுமார் அனைத்துத் தரப்பினருக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு-

1. எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

* கடைத்தொகுதி, சந்தை அடங்கிய நகர பிரதேசத்தை வலயங்களாப் பிரித்து அதற்கான குழுக்களை வர்த்தக சங்கங்கள், ஏனைய நிறுவனத் தலைவர்களின் உதவியுடன் நியமித்தல்.
* தேவையான கைவண்டிகள், சுத்தம் செய்வதற்கான உபகரணங்கள் உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும்.
* சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே நேரத்தில் வீதியோரங்கள் சேரும் கழிவுகளை அகற்றுவதற்கு தேவையான வாகனங்களை, ஆளணி உள்ளூராட்சி சபைகளினால் வழங்கப்படும்.
* கடைத் தொகுதிகள், தொழிற்சாலைகள் என்பனவற்றை வேலைத்தல ஊழியர்களின் உதவியுடன் சுத்தம் செய்து நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அழிக்கும் வேலைத்திட்டம் செய்யப்பட வேண்டும்.
* பொது இடங்களில் காணப்படும் நுளம்பு பெருகும் இடங்கள் பெருகக் கூடிய கொள்கலன்கள் யாவும் சரியான முறையில் அகற்றப்பட்டு அழிக்கப்பட வேண்டும்.

2. டெங்குக் கட்டுப்பாடு சிரமதானப் பணிகளுக்கான ஆலோசனையை சுகாதார வைத்திய அதிகாரிகளும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் வழங்குவர்.

3.டெங்கு சிரமதானப் பணிகளை கண் காணிக்க சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் அமைக்கப்பட்டு டெங்கு சிரமதானப் பணிகளை நேரடியாகச் சென்று கண்காணிக்க வேண்டும்.

4. டெங்கு சிரமதானப் பணிகளின் நிறைவில் சம்பந்தப்பட்ட வியாபார நிறுவன உரிமையாளர் நிறுவனத்தில் டெங்கு சிரமதானப் பணிபூரணமாக நடைமுறைப் படுத்தியதை உறுதிப்படுத்தி ஒரு சான்றிதழ் வழங்க வேண்டும். இதற்கான படிவம் அப்பிரதேசத்துக்குரிய பொது சுகாதார பரிசோதகரினால் வழங்கப்படும்.

5. பொதுச் சுகாதார பரிசோதகர் நிறுவனத்தை பார்வையிட்டு சிரமதானப் பணி திருப்திகரமாக நிறைவு பெற்று இருந்தால் உறுதிப்படுத்தி சான்றிதழை சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிப்பார். சிரமதானப் பணி பூரணமாக நிறைவேற்றப்படாவிடின் அது பற்றி ஆலோசனைகளை வியாபார நிலைய உரிமையாளருக்கு வழங்குவார்.

6. டெங்கு தடுப்பு சிரமதானப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத வியாபார நிலைய உரிமையாளருக்கு எதிராக டெங்கு தடுப்பு சட்டத்தின் கீழ் உரிய சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். -இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (ஓ-10)

## மாவைமுருகன் பெருவிழாக் கோலம் கண்டு வணங்கிடுவீர் !

மாவை யழகனின் பெருவிழாக் கோலம்
கண்டுக ரங்குவிப்பீர்
மால்மரு கன்காங் கேயன் புகழினைப்
பாடிம னம்மகிழ்வீர்
பாவைகு றமகள் குஞ்சரி யோடெழில்
நடனம் மிகுபுரிவான்
பார்புகழ் மாருதப் புரவல்லி குன்ம
பிணிகெட மருந்தானான்
சிவைமகிழ் செல்வன் சிங்கார வேலவன்
திருவருள் ஒளிபெருக்கும்
சிந்தா குலம்கெடச் செய்திரு முருகன்
வேட்டை கார்த்திகையும்
நவைதவிர் சப்பரம் தேருலாக் கண்டும்
நாயகன் அடிதொழுதும்
நாடிய அருள்புரி கண்டகி தீர்த்தம்
ஆடிம கிழ்வீரே.

சு.குகதேவன், தெல்லிப்பழை.

# சாவகச்சேரி நகர சபைப் பிரதேசத்தில் பற்றைகளை அகற்ற காலக் கெடுவிதிப்பு

## துப்புரவு செய்யாவிட்டால் தண்டம் விதிக்கப்படும் என எச்சிரிக்கை

தென்மராட்சி, ஓக. 8

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுளம்பு பெருக்கக்கூடிய அனைத்துப் பற்றைக் காணிகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் துப்புரவு செய்யுமாறு ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் துப்புரவு செய்யப்படாத ஆதனங்களின் உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் மீது டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்காதமைக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்குள் துப்புரவு செய்யப்படாத ஆதனங்கள் நகர சபையின் டெங்கு ஒழிப்பு பிரிவினரால் துப்புரவு செய்யப்பட்டு அதற்குரிய செலவீனத்துடன் தண்டப் பணமும் ஆதன உரிமையாளர்களிடம் அறவிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வில்லூன்றியில் நாளை ஆடி அமாவாசைத் தீர்த்தம்

யாழ்ப்பாணம்,ஓக.8

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுஷ்டானங்களும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 5.45 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், 6.45 மணிக்கு விசேட பூசையும் 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளன.

வில்லூன்றி புனித தீர்த்ததில் காலை 8 மணிக்கு தீர்த்தவாரி இடம் பெற்று 8.30 மணிக்கு தீர்த்த மண்டபத்தில் அனுக்கிரகமும் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு சுவாமி கோயிலுக்கு எழுந்தருள்வார்.

பக்தர்கள் காலை 8.30 மணிக்கு அமாவாசைத் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும், பிதிர்த் தர்ப்பணங்கள் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (204)

# கீழ் மட்ட மக்களின் சேமிப்பை ஊக்குவிக்க மத்திய வங்கி விசேட திட்டம் அறிமுகம்

## யாழ்ப்பாணத்தில் அலுவலகம் திறக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.8

மிகவும் கீழ்மட்ட வருமானத்தை ஈட்டும் மக்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளுக்காகவும் வங்கி அதிகாரிகள் பொதுமக்களை நாடிச் சென்று ஆலோசனை வழங்குவதற்கான திட்டமொன்றை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, இலங்கை அரசாங்கம், ஜப்பான் அரசின் ஜெய்க்கா அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படுகின்ற வறுமை ஒழிப்பு நுன்பாக நிதியிடல் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் கடன்கள் வழங்குவதற்கென சுமார் 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது 100 மில்லியனுக்கும் மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வங்கிகளுடனான தொடர்புகளைப் பேணுவதற்கு கிராமப்புற மக்களை அணுகி அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதே இதன் நோக்காகும்.

இச்செயற்பாடுகளுக்கான பிரத்தியேக அலுவலகமொன்று இலங்கை மத்திய வங்கியால் யாழ்ப்பாணத்தில் விரைவில் திறக்கப்படவுள்ளது. (ஐ-16)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 24 | : 09.08.2010 |
| | : திங்கட்கிழமை |
| திதி | : சதுர்த்தசி |
| | மு.ப. 11.30 வரை |
| நட்சத்திரம் | : பூசம் |
| | மு.இ 10.29 வரை |
| சுபநேரம் | : 12.04 - 01.34 |
| ராகுகாலம் | : 07.34 - 09.04 |

## மட்டுவிலில் இன்று இரத்ததான முகாம்

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தில் நடமாடும் இரத்ததான முகாம் இன்று காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும் என்று யாழ்.போதனா வைத் தியசாலை இரத்தவங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் என்.சிந்துஜா தெரிவித்தார். இரத்தானம் செய்ய விரும்புபவர்களை சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் இறந்தவர் மதிக்கப்பட வேண்டியவர்கள்

போரில் இறந்தவர்களை மதித்தல் இலங்கையின் பண்டைய வரலாற்றில் இருந்து அண்மைய வரலாறு வரை உள்ளது. எல்லாள மன்னனை வென்ற துட்டகைமுனு அவனுக்கு நினைவுச் சின்னம் அமைத்து அதனை அனைவரும் வணங்க வேண்டும் எனக் கட்டளையிட்டு இருந்தான். அதே போல் அண்மைய இலங்கையிலும் 1987 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கில் தமிழ்மக்கள் மீது பல்வேறு அழிவுகளைப் புரிந்த இந்திய அமைதிப்படை (IPKF) இங்கு இறந்த வீரர்களுக்கு கொழும்பில் இலங்கை ஜனதிபதியால் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது. சர்வதேச மனித நேயச்சட்டமும் யுத்தத்தில் இறந்தவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் கௌரவிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்துகின்றது. யுத்த நினைவுச் சின்னங்கள் அழிக்கப்படல் கூடாது. குறிப்பாக அமைதிக் காலத்தில் அவற்றினை அழித்தல் மனித்துவம் இல்லாத செயலாகும்.

தமிழ்ப் பண்பாட்டில் சங்க காலத்தில் மக்கள் போரில் இறந்தவர்களிற்கு நடுகல் இட்டு வணங்கி வந்தனர். இத்தகைய மரபில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஆத்மீக ரீதியில் ஓர் அமைதி ஏற்படும்.

புறநானூற்றில் நடுகல்லினை மக்கள் எவ்வாறு வணங்கினர் என்பதனை

''இல்லடு கள்ளின் சீல் குடிச் சீறூர்ப்
புடை நட கல்லிறாட் பலியூட்டி
நன்னீராட்டி நெய்ந்தலைக் கொளீஇய
மங்குள் மாப்புகை மறுகுடன் கமழும்''

(புறம் 329)

என ''வீடுகளில் காய்ச்சப்படுகின்ற கள்ளையுடைய சிலகுடிகள் வாழ்கின்ற சிறிய ஊரில் பக்கத்தில் நடப் பட்ட நடுகல்லிற்கு விடியற் காலத்தில் பலியிட்டு நன்னீரால் நீராட்டி, நெய் விளக்கேற்றி, அதன் புகை, மேகம் போல் எழுந்து தெருவில் மணக்கின்றது''

என விபரிக்கின்றது.

அக நானூற்றில்

''நெடுங்கல் அகலிடங்குயின்ற பல்பெயர் மண்ணி
நறுவரை மஞ்சனீர்ப் புறம் பொலிய''

(அகம் 269)

என நீண்ட நடுகற்களை நீராட்டி நறுமணம் உள்ள மஞ்சள் பூசி வழிபட்டனர் எனக் குறிப்பிடப் படுகின்றது.

அதே பண்பாடு கடந்த 30 வருடத்தில் யுத்தத்தில் இறந்தவர்களுக்கு ''மரணத்தை வென்ற மாவீரர்களே'' என இறந்தும் இறவாத நிலையில் அவர்களது உறவுகளால் மாவீரர் துயிலும் இல்லங்களில் வணங்கப்பட்டது.

உறவுகளை இழந்தவர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த இத்தகைய இடங்கள் பேணப்படுவதும் அங்கு அவர்கள் சென்றுவர அனுமதிக்கப்படலும் மனிதநேய அடிப்படையில் அவசியமானதாகும்.

ஆனால் தற்போது யுத்தத்தில் இறந்தவர்கள் புதைக்கப்பட்ட இடங்கள் புல்டோசர் போடப்பட்டு இடிக்கப்பட்டு அந்த நினைவிடங்கள் அகற்றப் படுகின்றன. இது தற்போது கோப்பாயிலும் நடைபெறுகின்றது. இறப்புக்கு முன்னர் பகைவராயினும் இறந்த பின்பானது அவர்களது ஆத்மாக்களை அநாகரிகமான முறையில் சிதைக்காமல் இருப்பதற்கு மதத் தலைவர்கள் தமது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறல் வேண்டும். மக்களின் மனதில் ஏற்படும் உண்மையான அமைதியே நீடித்த சமாதானத்தினை ஏற்படுத்தும். அன்றேல் யுத்தத்தில் இறந்தவர்களின் இலட்சக்கணக்கான உறவுகளின் மனதில் இடம் பிடித்தல் கடினமானதே.

அடுத்து சர்வதேச மனித நேயச்சட்டத்தினை நன்கு அறிந்த சட்டத்தரணிகள், நீதிபதிகள் இவ்விடயத்தில் சமூக நீதியினை எடுத்துச் கூறல் வேண்டும். Condlict Rejolution and Sustainables peacc proccss என்கின்ற பிணக்குகளின் முடிவும் நீடித்த சமாதானமும் என்ற தொனிப் பொருளினை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இறந்தவர்களின் நினைவு இடங்கள் அழிக்கப்படலை தவிர்க்க முன்வரல் வேண்டும்.

**டாக்டர் சி.யமுனானந்தா**

அடுத்து உளவியல் ரீதியாகவும் சமூகத்தில் சாந்தி நிலவுவதற்கு இவ்வாறான செயல்கள் உகந்ததல்ல. அடுத்து மனிதப் பண்பாட்டிற்கும் ஏற்புடையதல்ல.

எனவே போரில் இறந்தவர்கள் மதிக்கப்படல் வேண்டும் என்பதனையும் அவர்களது நினைவுச் சின்னங்கள் பேணப்படல் வேண்டும் என்பதனையும் நாம் ஆணித்தரமாகக் கூறல் வேண்டும். இது எமது அடிப்படை முரண்பாடுகள் கலைவதற்கான முதற்படியாக அமையும்.

# கலைக்காக வாழ்ந்த மிருதங்க இசைஞர், கலாபூசணம், கலாமான்ய க. சண்முகம்பிள்ளை



இசை எனும் சொல் உச்சரிக்கப் படும் போதே மனத் துள் இனிமையை நிறைக்கும். இசை எல்லோர் மனதையும் ஏதேதோ வகையில் வசப்படுகிறது. இசையின் வியாபகம் நாடு, மொழி, இனம், மதம் எல்லாம் கடந்தது. இத்தகைய தெய்வீகம் கலந்த இசையை ஒரு மனிதன் முறைப்படி கற்றுணர்ந்து மற் றவர்களுக்கு அந்த இன்பத்தை அள்ளி அளித்து, ஆன்மாக்களை மகிழ் விப்பதென்பது ஒரு பெருங் கைங்க ரியமே. இந்தப் பெரும் கடமையை தன் பிறப்பின் பயனாகக் கருதி தன்னை அர்ப்பணித்து செயலாற்றிய ''றேடியோ சிலோன் சண்முகம்பிள்ளை'' என அன்பாக அழைக்கப்பட்ட மிருதங்க வித்துவான் கந்தசாமி சண்முகம்பிள்ளை கடந்த 14.05.2010 அன்று இவ்வுலகில் இருந்து விடைபெற்றுள்ளார். என்றும் இசையுலகில் நீங்கா இடம்பிடித்துள்ளார்.

தமிழும் சைவமும், இசையும் மணம் கமழும் புகழ்பூத்த இணுவையிலே உயர் வேளாளர் குலத்தில் கந்தசாமி தங்கமுத்து மணஇணையருக்கு மகனாக 21.07.1917 இல் பிறந்த இவர், சிறு வயதிலேயே தந்தையின் அனுசரணை யுடன் மிருதங்கம் இசைப்பதில் ஆர்வம் காட்டினார். கேள்வி ஞானத்தின் மூலமும் கச்சேரிகளை பார்ப்பதன் மூலமும், முக்கியமாக இணுவைக் கந்தனுக்கு அவ்வப் போது இசையர்ப்பணம் செய்த தன் மூலமும் படிப்படியான வளர்ச்சியை பெற்றார். தொடர்ந்து தென் இந்திய இசைக்கலைஞர்களின் வாசிப்பினால் ஈர்க்கப்பட்டு இந்தியா சென்று குருகுல வாசம் செய்து, முறையான பயிற்சி பெற்று சிறந்த அடித்தளத்தை இட்டுக்கொண்டார். அத்துடன் அங்குள்ள தலை சிறந்த விற்பன்னர்களின் அறிமுகங்களும், நட்பும், ஆதரவும் கிடைக்கப் பெற்றார். 1942 ஆம் ஆண்டளவில் 'கொழும்பு றேடியோவிற்கு' முதல் கச்சேரி மூலம் அறிமுகமாகி தொடர்ந்த வாய்ப்புக்களிலெல்லாம் வாசித்து வந்தார். பின் பெயர் மாற்றம் பெற்ற

**கலைக்கூடல்**

''றேடியோ சிலோனில்'' 1952ஆம் ஆண்டு அமைக்கப்பெற்ற நிலைய வாத்தியக் குழுவில் ''அதிசிறப்பு நிலை'' (Super Gradc) மிருதங்க வித்துவானாக நிரந்தர நியமனம் பெற்று இசைபரப்பிப் புகழ் பெற்றார். 1976ஆம் ஆண்டளவில் நிலையத்திலிருந்து ஓய்வு பெற்றாலும் இசைக் குடும்பஸ்தரான இவர் கலைக்கு தொடர்ந்தும் பல்வகையிலும் பங்களிப்பு நல்கியுள்ளார்.

நீண்ட காலமாக கொழும்பில் வாழ்ந்த இவர், தனது குடும்பத்தையும் ஒரு கலைப் பெட்டகமாகவே உருவாக்கி யுள்ளார். மனைவி விஜயலட்சுமி தலைசிறந்த நடன ஆசிரியை. மூத்த மகள் சிறந்த நடன ஆசிரியை. இரண்டாவது மகள் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் இலங்கையின் புகழ் பூத்த நாட்டியத்தாரகை. மூத்தமகன் விஸ்வநாதன் இலங்கை ஒளிபரப்பு சேவையில் துறைசார் முத்திரை பதித்து பிரகாசிப்பவர். வெளிநாட்டில் வசிக்கும் வழி இளையமகனும் இசைஞானம் உடையவர். இதன் மூலம், சிறந்த ஆசானாக, காட்டியாக இருந்து குடும்பத்தினரை கலைப்பணி செய்ய வைத்துள்ளமை புலனாகின்றது. சிறந்த ஒழுக்க விழுமியங்களுடன் நிதானமானதொரு வாழ்வை வாழ்ந்து நிறைவு செய்த இந்த மனிதர், வள்ளுவரின் வாக்கிற்கமைய தன் எச்சங்களை பூவுலகில் வைத்து, வானுறையும் தெய்வத்துள் சேர்ந்துள்ளார்.

செல்வஸ்தன்






பணிக்குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் அவர்களின் பாராட்டு விழா நேற்றுமுன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் விழா நாயகன் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், வெள்ளி விழாக்காணும் அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய நூலை யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை வெளியீட்டு வைப்பதை இரண்டாவது படத்திலும் -

யாழ். ஆயர் ஆசியுரை வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ் வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரைஇறுதிப் படத்தில் காணலாம்.

(படங்கள்: சுகந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மன் அதிரடியாக ஆடி 103 ஓட்டங்களைக் குவித்தார்; இந்திய – இலங்கை தொடர் சமநிலையில் முடிந்தது



கொழும்பு,ஓக.8

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்டில் வெற்றி பெற்றதன் மூலம் ஆட்டத் தொடரை இந்தியா சமன் செய்தது.

இந்திய அணி வீரர் லக்ஷ்மன் அதிரடியாக ஆடிக் குவித்த 103 ஓட்டங்கள் இந்தியாவின் வெற்றிக்கு காரணமாயிற்று.

மூன்றாவது டெஸ்டில் நேற்றைய இறுதி நாளன்று இந்தியா 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இலங்கை வந்துள்ள இந்திய அணி, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. முதல் டெஸ்டில் இலங்கை வென்றது. இரண்டாவது டெஸ்ட் சம நிலையில் முடிந்தது. இதனையடுத்து மூன்றாவது டெஸ்ட், கொழும்புவில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் இலங்கை 425, இந்தியா 436 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் இலங்கை அணி 267 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் இந்திய அணியின் வெற்றிக்கு 257ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இலக்கை விரட்டிய இந்திய அணி, 4ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 53ஓட்டங்கள் எடுத்திருந்தது. சச்சின் (11), இஷாந்த் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 5 வது நாள் ஆட்டம் நடந்தது. ரந்திவ் சுழலில் வெறும் 4 ரன்களுக்கு வெளியேறினார் இஷாந்த் சர்மா. பின்னர் சச்சினுடன் லக்ஷ்மன் இணைந்தார். இந்த ஜோடி இலங்கை பந்து வீச்சை சமாளித்து ஆடி ஓட்டம் சேர்த்தது. டெஸ்ட் அரங்கில், 56ஆவது அரை சதம் கடந்த சச்சின், 54 ஓட்டங்களுக்கு பெவிலியன் திரும்பினார். சச்சின், லக்ஷ்மன் ஜோடி 5 வது விக்கெட்டுக்கு 109 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து வந்த ரெய்னா நல்ல ஒத்துழைப்புக் கொடுக்க, டெஸ்ட் அரங்கில் 16 வது சதம் கடந்தார் லக்ஷ்மன். மறு முனையில் வெலகெதர பந்து வீச்சில் ரெய்னா, ஓர் இமாலய சிக்சர் அடிக்க, 68.3 ஓவர் முடிவில், 5 விக்கெட்டுகளை இழந்த இந்திய அணி 258 ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்றது. லக்ஷ்மன் (103), ரெய்னா (41) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை லக்ஷ்மனும், தொடர் நாயகன் விருதை ஷேவாக்கும் தட்டிச் சென்றனர். இதனையடுத்து டெஸ்ட் தொடர் 1-1 என்ற கணக்கில் சமனானது. (ஐ)

## மணல் திட்டு இடிந்து குடும்பஸ்தர் மரணம்

கிளிநொச்சி,ஓக.8

கிளிநொச்சி, திருவையாறுப் பகுதியில் மணல் ஏற்றிக்கொண்டிருந்தவேளை மணல் திட்டு இடிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி, சாந்தபுரம் பாடசாலை இடைத்தங்கல் முகாமைச் சேர்ந்த பாலசிங்கம் சிவகுமார் (வயது 30) என்பவரே மரணமானவர் ஆவார்.

இரணைமடுக் குளத்தின் ஆறான கோரமோட்டை ஆற்றில் மணல் ஏற்றிக்கொண்டிருந்த சமயம் மேல் இருந்த மணல் திட்டு இடிந்து வீழ்ந்துள்ளது.

இதற்குள் சிக்கிக் கொண்ட குறித்த நபரை ஏனையவர்கள் மீட்டெடுத்து மயக்கமுற்ற நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் இவர் மரணமானார்.

சடலம் மரணவிசாரணைகளின் பின் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மரணமானவர் குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக மூன்று தினங்களுக்கு முன்பே வேலைக்காகச் சென்றுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஒ-10-405)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவருக்கு இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.8

ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கணித, விஞ்ஞான, வரலாறு, தமிழ் ஆகிய பாடங்களுக் குக்கான இலவச வழிகாட்டலும் கருத்தரங்கும் இன்று காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கொட்டாஞ் சேனை அருள் கல்வி வட்டத்தின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## வேலணை முருகன் ஆலயத்தில் தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.8

வேலணை, வங்களாவடி வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெறும்.

இன்று காலை வசந்த மண்டபப் பூசை நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து அருள்பாலிப்பார்.

நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சுவாமி ஆலயத்திலிருந்து எழுந்தருளி 7 மணிக்கு வெள்ளக் கடற்கரை, புண்ணிய சமுத்திரத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

(சிறப்பிதழ் 6 ஆம் பக்கத்தில்)

## சில்லறை நாணயங்களின் மாயம்; குடாநாட்டு மக்கள் பெரும் பாதிப்பு

கொழும்புத்துறை, ஓக. 8

யாழ்.குடாநாட்டில் சில்லறை நாணயக் குற்றிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக நிலையங்களிலும் போக்குவரத்து பஸ்களிலும் நுகர்வோரும் பயணிகளும் மிகுதிப்பணத்தைப் பெறுவதற்கு சில்லறைக் காசுகள் புழக்கமின்மையால் பெரிதும் பாதிப்புறுகின்றனர்.

அதேவேளை சில்லறைத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு இடையிடையே வங்கிகள் மூலம் ஒரு ரூபா, 2 ரூபா, 5 ரூபா நாணயக் குற்றிகளைப் புழக்கத்துக்கு வங்கி வாடிக்கையாளர்களூடாக வெளியே விடுவதாகவும் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நாணயங்கள் எங்கே மாயமாய் மறைகின்றன என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதனிடையே குறிப்பிட்ட ஒரு ஆண்டில் வெளிவந்த 5 ரூபா நாணயக் குற்றிகளை உருக்கி மோதிரம், காப்பு, சங்கிலி போன்ற ஆபரணங்களைச் செய்து தங்க முலாமிட்டு மக்கள் பாவனைக்கு உட்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

மேலும் 2 ரூபா, ஒரு ரூபா வெள்ளி நாணயங்களை உருக்கி மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆடம்பரப் பொருள்கள் தயாரிக்க பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச முத்திரை பதிக்கப்பட்ட நாணயக் குற்றிகளை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஒ-135)

## வவுனியா தனியார் பஸ் சேவை தரிப்பிடத்தை விவசாயப் பண்ணைக்கு மாற்றத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.8

வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள தனியார் சிற்றூர்தித் தரிப்பு நிலையம் கண்டி வீதியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணைக்கு மாற்றப்படவுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வவுனியா செயலக மாநாட்டு மண்டபத்தில் வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே தனியார் சிற்றூர்தித் தரிப்பிடம் போதிய இடவசதி இன்றிக் காணப்படுவதுடன் பயணிகள் வெவ்வேறு இடத்துக்குச் சென்றே தனியார் பஸ்களில் ஏற வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையிலேயே விவசாயப் பண்ணை அமைந்துள்ள பகுதியில் மூன்று ஏக்கர் காணியில் தனியார் பஸ் தரிப்பிடத்தை அமைப்பதெனவும் இதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிதியும் அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளதாகவும் வவுனியா மாவட்ட செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-ஐ-86)

## பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் வயோதிபரின் சடலம்

பருத்தித்துறை, ஓக. 8

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் கடந்த சில தினங்களாக வைக்கப்பட்டுள்ள வயோதிபரின் உடலை அவரது உறவினர்கள் அடையாளம் காட்டி எடுத்துச் செல்லுமாறு வைத்திய அத்தியட்சகர் கே.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

சந்நிதிகோயில், தொண்டைமானாறு என்ற முகவரியையுடைய 83 வயதான ஏ.பாலசிங்கம் என்பவரது உடலே பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

## தட்டிக் கேட்பாரின்றி விடியவிடிய மணியந்தோட்டத்தில் மணல் அகழ்வு

### சட்டவிரோத செயலை கட்டுப்படுத்த எவருமில்லையா?

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ்ப்பாணம், மணியந்தோட்டப் பகுதியில் கடந்த சில நாள்களாக சட்டவிரோத மணல் அகழ்வு மிக வேகமாக நடைபெறுவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

உழவு இயந்திரங்கள் பலவற்றைப் பயன்படுத்தி இரவு முழுவதும் - நாளொன்றுக்கு 25இற்கு மேற்பட்ட தடவை பெட்டிகள் நிரம்பி வழியுமளவுக்கு மணல் அகழ்ந்து செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இரவில் முழுநேரமும் விடியவிடிய தட்டிக் கேட்பார் எவருமின்றி இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வு தடையின்றி நடைபெற்று வருகிறது.

இந்த மணல் அகழ்வு கடற்பகுதிக்குச் சமீபமாக இடம்பெறுவதனால் கடல் வெள்ளம் அதிகரிக்கும். மழைக்காலங்களில் ஏற்கனவே தோண்டப்பட்டுள்ள பெரிய குழிகள் நிரம்பி கிராமப்பகுதிக்குள் வெள்ளம் வரக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த உழவு இயந்திரங்கள் இராணுவ சாவடியைத் தாண்டியே இரவில் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காணி உரிமையாளர்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் இந்தச் சட்டவிரோத செயலைத் தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் கவனமெடுக்கவேண்டும் என்று இப்பகுதி சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக் கின்றனர்.









இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் அருட்திரு. ஏ.ஜே.பேசுதாஸ் அடிகளின் குருத்துவ வெள்ளிவிழா நிகழ்வு நேற்று இளவாலையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விழா நாயகரை யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் குருக்கள், பாடசாலைச் சமூகத்தினர் அழைத்து வருவதை முதற்படத்திலும் அருட்தந்தை ஜேசுதாஸ், குருக்களுடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுப்பதை இரண்டாவது படத்திலும் மக்களின் காணிக்கைகளை ஏற்றுக்கொள்வதை மூன்றாவது படத்திலும் விழாவில் கலந்துகொண்ட பாடசாலைச் சமூகத்தினர், மக்கள் ஆகியோரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்று வலுவுள்ளோருக்கு முச்சக்கர வண்டிகள் திருத்தத்துக்கான பதிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 8

மாற்றுவலுவுள்ள பயனாளிகளின் முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகளைத் திருத்திக் கொடுப்பதற்கு யாழ். ஜெய்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

திருத்த வேலைகள் தேவைப்படும் பயனாளிகள் தமது முழுப்பெயர், முகவரி, முச்சக்கர வண்டி அல்லது சக்கர நாற்காலியைப் பெற்றுக்கொண்ட திகதி, தேவைப்படும் திருத்த வேலைகளின் விவரம் என்பவற்றைத் தத்தமது பிரதேச செயலகங்களில் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யப்படும் முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் பிரதேச செயலகங்களூடாகப் பொறுப்பேற்று திருத்தம் செய்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ-10)

## கொழும்புத்துறை வீதியை புனரமைக்கும் பணி ஆரம்பம்

கொழும்புத்துறை, ஓக. 8

கொழும்புத்துறை வீதியைப் புனரமைத்து செப்பனிடும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ். நகரின் பிரதான பாதைகளில் ஒன்றான இவ்வீதி சுண்டுக்குளிச் சந்தியில் இருந்து கொழும்புத்துறை மணிப்புரி வரையான நீண்ட வீதியாகும்.

நீண்டகாலமாக சேதமடைந்திருந்த இந்த வீதியால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது இவ்வீதி தார் ஊற்றிச் செப்பனிடும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதைக் காணமுடிகிறது. (ஒ-135)

## யாழ்நகர் புல்லுக்குளத்தின் சுற்றுப்புறத்தில் இருக்கைகள்

கொழும்புத்துறை, ஓக. 8

யாழ்நகரில் புல்லுக்குளத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள நடைபாதையில் இடையிடையே நிரந்தர நீண்ட இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்கள் உல்லாசமாக பொழுதைக் கழிக்க இந்த இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளத்தைச் சுற்றி ஏழு இடங்களில் பலர் அமரக்கூடிய நீண்ட இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளன. (ஒ-135)

**SPOKEN ENGLISH & GRAMMAR**
(தபால் மூலம் அல்லது வீடுகளுக்கு வந்து)
By: Mr.B.Ruban (A/L Eng. Teacher & BBA)
SMS Your address for Course Details.
More Details : 0779785749, 0718561532

**வேலைக்கு ஆள்கள் தேவை**
கடை ஒன்றுக்கு கணக்குப் பதிபவர் உடன் தேவை.
தொடர்பு: S.K ஏஜென்சி, இல.128/D மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**ஊழியர்கள் தேவை**
எமது புடைவை ஸ்தாபனத்திற்கு ஆண்/பெண் வேலையாள்கள் தேவை. (அனுபவமும், யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களும் விரும்பத்தக்கது.)
கமலேஸ்வரி ரெக்ஸ்
இல.25, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## விடுதலைப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதம ஆயுதக் கொள்வனவுப் பொறுப்பாளராக பணிபுரிந்து இப்போது இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பில் உள்ள கே.பி. என அழைக்கப்படும் செல்வராஜா பத்மநாதன்.

மயிலிட்டியைச் சேர்ந்த இவர் கனடாவில் உள்ள ஆங்கில இணையத் தளம் ஒன்றுக்கு வழங்கிய முழு நீள விசேட செவ்வியிலேயே இவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் பேட்டியின் முக்கிய பகுதிகளில் ஒரு சில வருமாறு:-

இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் விடுதலைப்புலிகளின் முக்கிய தரப்பினர் கூட தமது உடைமைகளை விட்டு பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இந்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய ஆவணங்கள் மற்றும் கணனி தரவுகள் என்பவற்றை இலங்கையின் புலனாய்வுத்துறையினர் மீட்டுள்ளனர்.

இந்த தரவுகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் தொடர்பிலான வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள், நிதி வழங்கியவர்கள் மற்றும் ஒத்துழைப்பாளர்கள் குறித்த அனைத்து தகவல்களையும் புலனாய்வுத் தரப்பினர் அறிந்து வைத்துள்ளனர்

### பிரபாவின் டயரி

குறிப்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பரபாகரன் உள்ளிட்ட முக்கிய தரப்பினர் எழுதிய நாள்குறிப்புகள் கூட இறுதி யுத்தத்தின் போது மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் விடுதலைப் புலிகள் குறித்த தகவல்களை அறிவதற்கு என்னுடையதோ அல்லது ஏனைய செயற்பாட்டாளர்களுடையதோ ஒத்துழைப்புகள் தேவை ஏதும் இல்லை.தகவல்கள் அனைத்தையும் கொண்டுள்ள அவர்கள் அதன் அடிப்படையிலேயே விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை தாம் மலேசியாவில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதன் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்திக்க அஞ்சியதாக தெரிவித்துள்ளார்.

### புத்தர் சிலையும் கோத்தபாயவும்

சிங்கள இனவாதி என கோத்தபாய பற்றி தம்மிடம் வர்ணிக்கப்பட்டதாக தெரிவித்த பத்மநாதன் அச்சத்துடன் அவரது இல்லத்துக்கு சென்ற போது, அங்கிருந்த புத்தர் சிலை தன்னை சுதாகரித்துக் கொள்ள வழி செய்ததாக தெரிவித்துள்ளார்.

தன்னுடைய வீட்டிலும் புத்தர் படம் இருப்பதாகவும் தன்னுடடைய மனைவியின் மதம் என்ற அடிப்படையில் புத்த மதம் தனக்கு அன்னியமாகப்படவில்லை எனவும் தெரிவித்த அவர், அச்சத்துடன் இருந்த தனக்கு புத்தர் சிலை தன்னம்பிக்கையை கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் கோத்தபாயவை சந்தித்த போது மிகவும் பொறுமையாக தன்னுடன் பேசியதாகவும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தாம் தமிழ் மக்களுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் விசாரணைக்கு உட்புடுத்தப்பட்ட வேளையில், தமக்கு இருந்தது இரண்டு வாய்ப்புகள். ஒன்று விசாரணைக்கு ஒத்துக்கொள்ளாதிருப்பது மற்றது அவர்களுடன் ஒத்துழைப்பது என்பதே ஆகும்.

ஒத்துழைக்காத பட்சத்தில் தாம் பல வருடங்களுக்கு தடுத்து வைக்கப்படலாம், அத்துடன் தன்னால் யாருக்கும் பலன் இருக்காது. எனினும் அரசுடன் ஒத்துழைக்கும் பட்சத்தில் ஏதேனும் தமிழ் மக்களுக்கு செய்ய முடியும் என்ற நம்பக்கை தமக்கு ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் அடிப்படையிலேயே அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முன்வந்துள்ளதாகவும் குறிப்பட்ட அவர், தற்போது தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இல்லத்திற்குள் தமக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

யாருடன் வேண்டுமானாலும் தொலைபேசியில், மின்னஞ்சல் போன்றவற்றில் தொடர்பு கொள்ள முடியும் எவரையும் சந்திக்க வேண்டுமானால் சில அதிகாரிகளின் அனுமதியுடன் அதனை மேற்கொள்ள முடியும் என்றும் விரும்பிய இடங்களுக்கு அதிகாரிகளின் அனுமதியுடன் சென்று வரமுடியும் எனக் குறிப்பிட்டுள் ளார். (அ-ஒ-ஐ-10)

**வேலையாள்கள் தேவை**
1. விடுதி மேற்பார்வையாளர்.
(சிங்களம் தெரிந்தவர், தங்குமிட வசதியுண்டு)
2.பஸ் ஆசனப் பதிவு செய்பவர்.
தொடர்பு: யாழ் போன் சொப், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0773611282

## யாழ்.மாவட்டத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இன்னமும் கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட வில்லை.

ஒவ்வொரு பாடசாலைக்கும் 35 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. உலக வங்கி குறிப்பிட்ட நிதி வடக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டும், கட்டடப் பணிகளை ஆரம்பிக்க குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு இன்னமும் நிதி வந்து சேர வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டம் 2008ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டபோதிலும் மாகாண சபை அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக இன்னமும் அந்த நிதி பாடசாலைக்குக் கிடைக்கவில்லை எனக் குறை கூறப்படுகின்றது.

கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படாத நிலையை அடுத்து திட்டத்தை மறுபரீசீலனை செய்த உலக வங்கி வரணி ம.விக்கான திட்டத்தை நிறுத்தியுள்ளது.

ஏனைய பாடசாலைகளில் பணிகளை விரைவாக ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை உலக வங்கி அறிவுறுத்தியுள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. (ஒ-ஐ)

## சென்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதைத்தொடர்ந்து குறிப்பிட்ட விமா னம் சென்னையை வந்தடைந்ததும் பரப் புடன் வெடிகுண்டு நிபுணர்களும் படை அதிகாரிகளும் சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தினர். ஆனால் அந்த விமானத்தில் சந்தேகத்துக்குரிய எந்தப் பொருளும் அகப்படவில்லை. அதைத் தொடர்ந்து விமான நிலையப் பகுதி வழமை நிலைக்குத் திரும்பியது.

வெடிகுண்டு மிரட்டல் விடுத்த அந்த நபர் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்திவருகின்றனர். (ஒ)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை மற்றும் சேந்தாங்குளம் ஆகிய நுழைவாயில்கள் ஊடாக போக்குவரத்துச் சபை மற்றும், தனியார் பஸ் சேவைகளும் தனியார் வாகனங்களும் செல்ல அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

## தொல்பொருள் பிரதேசப் பாதுகாப்புக்கு விசேட படைப் பிரிவு உருவாக்கம்

கொழும்பு, ஓக. 8

நாட்டில் உள்ள தொல்பொருள் நிலையங்களைப் பாதுகாக்க பொதுமக்கள் பாதுகாப்புப் படையில் விசேட பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பிரிவில் 600 பேர் இடம் பெறுவர் என்று தொல்பொருள் திணைக்கள நிர்வாகப் பணிப்பாளர் செனரத் திஸநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் அந்த அமைச்சின் வழிகாட்டலில் இந்தப் பிரிவு இயங்கும்.

தொல்பொருள் பிரதேசங்களைப் பாதுகாப்பதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைக்காண இந்தப் பிரிவு உதவும் என மேலும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## பட்டதாரிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாரிகள் நாவலர் மண்டபத் தில் கூட்டம் நடத்தச் சென்றனர். நாவலர் மண்டபம் மூடப்பட்டிருந்ததால், வீதியில் கூட்டம் கூட்டமாக பட்டதாரிகள் கூடி நின்றனர்.

அங்கு வந்த பொலிஸார் வீதியில் கூடுவதைத் தடைசெய்து, கலைந்து செல்லுமாறு தெரிவித்தனர். ஆங்காங்கே கூடி நின்ற பட்டதாரிகள் பின்னர் கலைந்து சென்றனர்.

ஒருங்கிணைந்த தொழில்வாய்ப்பற்ற பட்டதாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் தினிது சமன் ஹென்நாயக்க இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். (ஒ-ஐ-16-135)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயப் பிரதேசமான கிளிநொச்சியில் விவசாயபீடம் அமைவதே உகந்தது. அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் ஆராய்ச்சி மற்றும் செயன்முறைப் பயிற்சிகளுக்கு கிளிநொச்சியே பொருத்தமான ஏற்ற இடமாகும். அதன் காரணமாகவே கிளிநொச்சியில் விவசாயபீடம் இயங்கி வந்தது.

அந்தப் பீடம் யுத்தநிலைமை காரணமாக யாழ்ப்பாணத்துக்கு இடம்மாறியது. அதனை மீண்டும் கிளிநொச்சியில் இயக்க ஏற்பாடு செய்யயவேண்டும் - என்று கோரிக்கை விடுத்தார்.

கிளிநொச்சியில் அறிவியல் நகரில் உள்ள கட்டடங்களில் விவசாயபீடத்தை இயக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார். (ஒ-ஐ)

**விற்பனையாகிறது**
தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்க்கானதும் தரம் 1-5 வகுப்புகளுக்குரியதுமான சிங்களம், தமிழ், ஆங்கிலம் புரிய இணைப்புடன் மீண்டும் வெளிவந்துள்ளது.
தொகுப்பு : பா. பாலகுமார்
யாழ். நகரிலுள்ள புத்தகக் கடைகள்,
ஸ்ரீகாந் புத்தகசாலை - நல்லூர்.
துர்க்கா பொத்தகச் சோலை - சுன்னாகம்.
ஆகிய இடங்களில் கிடைக்கும்.

**புதியபிரிவுகள் ஆரம்பம்**
Advanced Dip. in Video mixing (Morph, Cool3d, Project, Premiere, Soundforge, Combustion, Power director, Vcd and convertor, Editing using Photoshop)
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→ 09வரை)
Group Classes
CBCA
முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

**மரண அறிவித்தல்**



*பொன்னுத்துரை காசிலிங்கம்*
மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை காசிலிங்கம் நேற்று (07.08.2010) இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத் துரை - கனகம்மா தம்பதியரின் மகனும், நாகேஸ்வரியின் சகோதரனும் றஞ்சிதமலரின் அன்புக் கணவரும், பவிஷா, திவேஜன், தவதர்சிகன், கபிலன், திரிசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
*காளி கோயிலடி, ஏழாலை மத்தி, ஏழாலை.*
*தகவல்:* கு.லோகேந்திரன் *(மச்சான்).*

**வீடும் காரும் விற்பனைக்குண்டு**
மருத்துவ பீடத்துக்கும், கல்வாரி தேவாலயத்துக்கும் அருகில் உள்ள பிறவுண் வீதி, கொக்குவில் பகுதியில் 4 அறைகள், 2 மலசல கூடங்கள், கிணறு மற்றும் குழாய் நீர் வசதி கொண்ட 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு, KE70, TOYATA CORRALA 13 மொடல் காரும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775423886

நவாலி தெற்கு, கொத்துக்கட்டி றோட்டில்
**விற்பனைக்கு**
மின்சாரம், கிணறு, மலசலகூடம், பயன்தரு மரங்கள் மற்றும் வசதிகளுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0728035559, 0728035541

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**
நிறை கூடிய புறொயிலர், க்ல்பேட்ஸ் என்பன மலிவான விலையில் தினமும் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். *தொடர்பு:*
மல்ரி பாம் சென்ரர் 61, இராமநாதன் வீதி, கலட்டி. தொ.பே.: 0217912783

**Deutsch, Dutch, French, Italian**
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
**Vivekananda Academy**
**(Centre for International Language Studies)**
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்[illegible]வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2010 இல அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## ஓகஸ்ட் 08 முதல் ஓகஸ்ட் 14 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் செலவு, அலைச்சல்களைச் சந்திக்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் சிறு சச்சரவுகள் உருவாகலாம். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். திட்டமிட்ட காரியங்களைத் தங்கு தடையின்றி முடிப்பீர்கள். பரபரப்பாகச் செயற்படும் நாள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். எதிர்பாராத சில வாய்ப்புகள் தேடி வரலாம். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. இருந்தாலும், தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை அவசியம். கணவன் மனைவி உறவில் சச்சரவு ஏற்படலாம். திடீர் வெளியூர் பயணங்களால் கணிசமான பணம் கரையும். பழைய வாகனங்களை மாற்றிப் புதிய வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான வகையில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்யாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வருவது தள்ளிப் போகலாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான வகையிலும் சிரமங்களே அன்றி திருப்தி இருக்காது. குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். பயணங்கள் செல்லலாம்.

### இடபம்

இந்தவாரம் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். கடன் வசூலாகும். உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். ஒன்றுக்கு இரு மடங்காக செலவாகலாம். தொழில் ரீதியாகச் சிலருக்கு உதவி செய்யலாம். வேண்டாத விவகாரம் ஒன்றில் தலையிட்டு மன உளைச்சலுக்கு ஆளாகலாம். வேலைப்பளு கூடும். அரசு தொடர்பான காரியங்கள் சிரமம் இல்லாமல் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை மீதான பாசம் அதிகரிக்கும். அவர் உங்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள், விருந்து உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். புதிதாகச் சில நல்ல காரியங்களை நிறைவேற்ற முற்படுவீர்கள். யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். எந்த விடயத்திலும் சரியான முடிவுக்கு வராமல் தடுமாற்றங்கள், குழப்பங்களுக்கு அடிக்கடி ஆளாகலாம். மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பி எதிலும் இறங்க வேண்டாம். நிலம், பூமி, சகோதரர்கள், வேலையாள்கள் வகையில் தொல்லைகள், இடர்பாடுகள் நேரும். ஊக்கம், உற்சாகம் கூடும். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். பணவரவுகளைப் பெறலாம்.

### மிதுனம்

இந்த வாரம் பரபரப்பாகச் செயற்படும் நாள். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். உறவினர்கள் சந்திப்பு நிகழும். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். குடும்பத்தினரின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சுகமான அனுபவங்களைப் பெறலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பழைய பொருள்களை மாற்றிப் புதிய பொருள்கள் வாங்கலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மனைவி வழி உறவுகளுக்குச் சில உதவிகள் செய்யலாம். கண் தொடர்பான சிறு உபாதைகளுக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்களிடம் எந்த விடயத்திற்கும் அதிகமாக கோபம் கொள்ளாமல் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். பணிபுரிவோர் அதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். அரசு காரியங்கள் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் இல்லை. தேக ஆரோக்கியத்திலும், தாயார் உடல் நலன் தொடர்பான விடயத்திலும் கவனம் அவசியம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ அலைச்சல்கள் அதிகரிக்கும். எந்த வேலையையும் திட்டமிட்டபடி செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குரு வக்கிர கதியில் இருப்பதால், வளர்ந்த பிள்ளைகளால் ஆதாயம் பெறலாம். வரை செலவு, அலைச்சல் உண்டு.

### கடகம்

இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். சில பிரச்சினைகளை நினைத்து அதிக அளவில் கோபம் அடையலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் தெம்பு, குறையும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். நீண்ட நாள் இழுபறி வேலைகள் முடியும். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். பெண்களால் அனுகூலம் பெறலாம். ஜென்மத்தில் இருக்கும் சூரியனால், அவ்வப்போது உங்களின் கோபம், வேகத்தைத் தூண்டும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். தந்தை, அதிகாரிகள், அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளும் திருப்தி தரும் வகையில் இருக்காது. வீண் அலைச்சல் உண்டாகும். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிட வேண்டாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், உறவுப் பெண்கள், மனைவி வழி உறவுகள் போன்ற வழிகளில் சந்தோஷ அனுபவங்களைப் பெறலாம். மனதிற்கு ஆறுதல் தரும் விடயங்கள் நடக்கலாம். கையில் காசு பணப்புழக்கமும் அதிகரிக்கும். வியாபாரிகள் புத்துணர்ச்சியுடன் செயற்படுவர். கடன்மிகுதிகள் வசூலாகும். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் உருவான சொத்துப் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வீர்கள். இழுபறியாக இருந்த வழக்கு விவகாரங்கள் தீரும். மாற்று மதத்தினர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

### சிங்கம்

இந்த வாரம் சந்திராஷ்டமம் என்பதால், சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபட்டு மன அமைதி பாதிக்கப்படலாம். தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதியுண்டு. ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். உங்களுக்கு வேண்டிய சிலருக்காக நீங்கள் மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லலாம். விரயஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், தந்தை, மருத்துவம், அரசியல்வாதிகள் தொடர்பான வழிகளில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். அரசு தொடர்பான காரியங்கள் எளிதில் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் அனுகூலம் இல்லை. வியாபாரிகள் அகலக்கால் வைக்காமல் இருப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும் போது வார்த்தைகளில் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். நண்பர்களுக்காக பிணை கொடுக்க வேண்டாம். கடன் பிரச்சினைகளை நினைத்தும் கலக்கம் அடையலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களிலும் நினைத்தது நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் வாய்ப்பு உருவாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்லவும். காரிய வெற்றி உண்டு. குடும்பத்தில் குதூகலம் கூடும். பணம் வரும். பொருள் சேரும்.

### கன்னி

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். நண்பர்கள், உறவினர்களுடன் பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடலாம். சந்திராஷ்டமம் என்பதால், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, திட்டமிட்ட காரியங்களில் தடை, வாக்குவாதம், பயணங்களில் சிரமம் போன்றவற்றைச் சந்திக்கலாம். லாபஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வகையில் அனுகூலம் உண்டு. அரசு காரியங்கள் தடையின்றி, சுமுகமாக முடிவுக்கு வரும். அரசியல்வாதிகளுக்குச் செல்வாக்கு கூடும். புதன் சாதகமற்ற நிலையில் உள்ளதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். இல்லையெனில், அவர்களுக்குப் பணம் கொடுத்து உதவலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில், அணிவதில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் மத்தியில் உங்களைப் பெரிய ஆளாகக் காட்டிக் கொள்வீர்கள். மனைவி வழி உறவுகளால் உதவிகள் கிடைக்கும். குரு பாதகமான நிலையில் இருப்பதால், பணப்புழக்கம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. பெரிய மனிதர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளால் எரிச்சல் அடைவீர்கள். மனைவி, குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் சிரமங்கள் உண்டாகும். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சந்தோஷ செய்தி கேட்கலாம்.

### துலாம்

இந்த வாரம் எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். தடைபட்ட காரியங்கள் முடிவுக்கு வரும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். உடல் நலம் தொடர்பான விடயங்களில் அதிக எச்சரிக்கை அவசியம். மற்றவர்களை நம்பிப் பெரிய அளவிலான காரியங்களில் இறங்க வேண்டாம். எந்த வேலையும் எளிதில் முடியாமல் இதோ, அதோ எனச் சுற்றலில் விடும். உத்தரவாதம் கொடுத்த உடன் பிறப்புக்கள் கடைசி நேரத்தில் காலை வாரி விடுவர். வேலையாள்களாலும் தொல்லைகளுக்கு ஆள்படலாம். வழக்கு விவகாரங்கள், கடன் விவகாரங்களாலும் மன அமைதி பாதிக்கப்படும். உறவுப் பெண்கள், சகோதரிகள், பெண் பிள்ளைகள் வழியில் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். வாகனங்கள் வழியிலும் பிரச்சினைகள் உருவாகும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். உங்களின் முயற்சிகளுக்கு அவர்கள் உறுதுணையாக இருப்பர். அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். தண்டச் செலவு நேரும். கலகலப்பான அனுபவம் உண்டு.

### விருச்சிகம்

இந்த வாரம் பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி கேட்கலாம். சில பிரச்சினைகளால் குழப்பம் அடையலாம். பணவரவுகளைப் பெறலாம். வழக்கமான பணிகளைத் தங்கு தடையின்றி முடிப்பீர்கள். விருந்து, விசேடங்களாலும், பொழுதுபோக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் சாதகமாக முடியும். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். ஆடை, ஆபரணங்கள் சேரலாம். வெளியூர் பயணங்கள் உற்சாகம் தரும் வகையில் அமையும். உறவுப் பெண்கள் அல்லது பிற பெண்கள் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். மகிழ்ச்சியான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகிப் பாசம் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். வருமானத்தை அதிகரிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் அனுகூலம் பெறலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். தொழில் ரீதியான வருவாய் அதிகரிக்கும். தந்தை தொடர்பான விடயங் களில் பட்டும்படாமல் நடந்து கொள்ளவும். ஊக்கம், உற்சாகம் கூடும். சிரமங்கள் இருந்தாலும், தொடர்ச்சியாகப் பல வேலைகளை முடிப்பீர்கள். கவனம் அவசியம்.

### தனுசு

இந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் காரியம் சாதிக்கலாம். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். ஏதோ சில பிரச்சினைகளை நினைத்து மிகுந்த வருத்தம் அடைவீர்கள். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியான சுமைகள் அதிகமாக இருக்கும். ஓய்வின்றி பல மணி நேரம் உழைக்க நேரிடும். கடும் பிராயத்தனம் மேற்கொண்டும் பல காரியங்கள் எளிதில் முடியாமல் இழுத்தடிக்கலாம். உங்களை உழைப்பைப் பாராட்டுபவர்களைவிட, விமர்சிப்பவர்களே அதிகம். இருந்தாலும், குருவின் பார்வை கிடைப்பதால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். கடந்த காலத்தில் கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள்கள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். ஆடம்பர ஈடுபாடுகளில் கட்டுப்பாடு அவசியம். இல்லையெனில், அளவுக்கு மீறிய வகையில் பணம் கரையலாம். பெண்கள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். சூரியன் சாதகமற்ற நிலையில் உள்ளதால், அரசாங்கம், அரசியல், மருத்துவம் சம்பந்தமான செலவுகள், சிரமங்கள் ஏற்படலாம். பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். நன்மையுண்டு.

### மகரம்

இந்த வாரம் சந்திரன் சகாய, ஜெயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தெம்பு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். கடன்மிகுதிகள் வசூலாகும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. நண்பர்கள் வட்டம் விரிவடையும். சில முக்கிய வேலைகளில் முடக்கம், தடை ஏற்படலாம். உறவினர்களின் அன்புத் தொல்லைகளை சந்திக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான விடயங்களும் சாதகமாக முடியும். நீண்ட தூரப் பயணங்கள் வாகன வசதி கிடைத்தல், உறவுப் பெண்கள் சந்திப்பு அல்லது இதர பெண்களின் அனுகூலம், பொழுதுபோக்கு, விருந்து உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். அரசியல், மருத்துவம், அரசாங்கம், தந்தை தொடர்பான விடயங்களில் சஞ்சலங்கள், சிரமங்களைச் சந்திக்கலாம். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். அவர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சுபச் செலவுகள் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த பெரிய ஆலயங்களுக்குச் செல்லலாம்.

### கும்பம்

இந்த வாரம் குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கடும் பிரயத்தனம் செய்வீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். உங்களுக்கு விருப்பமான பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு. எந்த வேலையிலும் சிரமங்களையும், இடர்பாடுகளையும் சந்திக்கலாம். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியங்களில் எல்லாம் சிறிய அளவில் பலன் கிடைக்கலாம். எந்த விடயத்திலும் கவனமாகவும், ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செயற்படுவது நன்மை தரும். அடிக்கடி சலிப்பு, மனச்சோர்வு போன்றவை ஆள்கொள்ளும். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்துகொள்ள வேண்டும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வாகனங்களில் செல்லும்போது அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் வழியில் உதவிகள் கிடைக்கும். பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். சூரியன் சாதகமாக இருப்பதால், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கலாம். மருத்துவச் சிகிச்சைகள் பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. அலைச்சல், திரிச்சல், தண்டச் செலவு நேரும்.

### மீனம்

இந்த வாரம் நினைத்த காரியங்கள் நடந்தேறுவதன் மூலம் மனதில் உற்சாகம் குடிகொள்ளும். அதேநேரத்தில் சிலரின் செயற்பாடுகளால் கோபம், வேகம் உண்டாகலாம். பணவரவைப் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகள் உருவாகும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். சகோதரர்களுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க எச்சரிக்கை அவசியம். விவசாயிகள் விவசாயப் பணிகளில் தாமதங்களையும் சிரமங்களையும் சந்திக்கலாம். காவல்துறை தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். கணவன், மனைவி உறவிலும் பிரச்சினைகள் உருவாகலாம். ஒருவரின் உடல்நலம் பாதித்து அவர்களுக்காக மற்றவர்கள் சிரமப்படும் சூழ்நிலை உருவாகும். கூட்டுத் தொழிலும் திருப்தி தரும் வகையில் இருக்காது. பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். தந்தை தொடர்பான வகையில் அலைச்சல், சிரமங்கள், இடர்பாடுகள் நேரிடலாம். புதன் சாதகமாக இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், வெளிவட்டாரத்தில் உள்ளவர்கள், வர்த்தகத் தொடர்புள்ள பெரிய மனிதர்கள் உதவி, அனுசரணை கிடைக்க வாய்ப்பு உண்டு. காரியங்கள் தங்கு தடையின்றி நடந்து பெருமைப்படுவீர்கள். பணவரவு உண்டு. வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணா? விண்ணா? பெரியது

இவ்வுலக வாழ்வு என்பது இறைவன் மனிதனுக்கு வழங்கிய மாபெரும் கொடையாகும். அந்தக் கொடையின் இறுதிப்பயன் எமது வாழ்வியலின் தன்மையைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. நன்மை பயக்கும் நற்கனிகளும், தீமை விளைவிக்கும் வேண்டப்படாத நச்சு விதைக்கனிகளும் நிறைந்த உலகில் நாம் எதைத் தேர்ந்தெடுக்கின்றோமோ அதன் விளைச்சலையே அறுவடையாகப் பெறுவோம். அந்த அறுவடை நேரம் இன்றோ? நாளையோ? அது எம் கையில் இல்லை. படைத்தவன் அழைக்கும் போது படியேறத் தயாராய் இருக்க வேண்டும்.

'நீங்களும் ஆயத்தமாய் இருங்கள்; ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார்' (லூக் 12:40)

ஒரு செல்வந்தன் தனது சொத்துக்களை பணியாளர்களின் கண்காணிப்பில் விட்டுவிட்டு வெளியூர் சென்றிருந்தான். 'உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டை' என்பது போல பொறுப்பற்ற ஊழியர்கள் சிலர் ஆடல், பாடல், போதைகளில் மதிமயங்கித் தம்மை மறந்து நாள்களை உல்லாசமாகக் கழித்து வந்தனர். மற்றும் சில பணியாளர்கள் இரவு பகல் பாராது விழிப்புடன் தமது கடமைகளில் கண்ணும் கருத்துமாய் இருந்து தலைவனின் உடமைகளைப் பாதுகாத்து வந்தனர்.

திடீரென ஒரு நாள் நள்ளிரவில் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. தலைவர் உள்ளே வந்தார். விழித்திருந்த நம்பிக்கைக்குரிய ஊழியர்களுடன் விருந்துண்டு மகிழ்ந்தார். அவர்களை பெரிய பொறுப்புக்களில் அமரச்செய்தார். தூக்க மயக்கத்திலிருந்த நம்பிக்கைத் துரோகிகளைத் தண்டித்து சிறையில் தள்ளினார்.




இயேசுவே எம் கடவுள், எம் தலைவன் என்று கூறிக் கொள்ளும் நாம் அவர் தந்த வாழ்வுச் செல்வத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம்? பொறுப்புக்கள் மட்டில் நாம் பிரமாணிக்கமாய் இருக்கின்றோமா?

இவ்வுலக செல்வத்தை முதன்மைப்படுத்தும் போது விண்ணுலகு பின்தள்ளப்படுகிறது. இயேசு இவ்வுலகில் துன்பங்கள் பாடுகள் சிலுவையை ஏற்றார். விண்ணுலகில் தந்தையின் அரியணையில் சமபங்கேற்றார்.

நாம் சேர்த்துள்ள செல்வங்களான பணம், பதவி, ஆற்றல், கல்வி, பண்பு, அன்பு, மன்னிப்பு ஆகியன விண்ணக செல்வமீட்டும் படிக்கற்களாக அமையட்டும். இவை பிறர் வாழ்வை வளமூட்ட உதவட்டும். அதன் வழியாக இறைவன் அழைக்கும்போது உரிய இடம் செல்ல எம்மைத் தயார்ப்படுத்துவோம்.

''உங்கள் உடைமைகளை விற்று தர்மம் செய்யுங்கள். இற்றுப்போகாத பணப் பைகளையும் விண்ணுலகில் குறையாத செல்வத்தையும் தேடிக்கொள்ளுங்கள். அங்கே திருடன் நெருங்குவதில்லை. பூச்சியும் அரிப்பது இல்லை'' (லூக் 12:33)

கொழும்புத்துறை. எஸ்.யேசுதாஸ்

## கிராம சேவையாளர் பணிமனை இடமாற்றம்

வண்ணை,ஓக.8

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட ஜே/98, வண் - வட மேற்கு கிராம சேவகர் பணிமனை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக சிவப்பிரகாசம் வீதி வீடொன்றில் இயங்கி வந்த மேற்படி பணிமனை இம்மாதம் தொடக்கம் கேசாவில் வீதி, நாச்சிமார் கோயிலடி உப தபால் அலுவலகம் அமைந்துள்ள இடத்தின் பின்பக்க அறையில் இயங்கி வருகின்றது.

மக்கள் விடுமுறைகள் மற்றும் புதன்கிழமைகள் தவிர்த்து பணிமனையில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-160)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.8

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் சு.சே.குலநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (201)

DIABETIC CARE AND PHYSIOTHERAPY CENTRE

- பக்கவாத நோய் (STROKE) உள்ளவர்கள் WARD இல் தங்கி சிகிச்சை பெறுதல்.
- இரத்தம், சிறுநீர் (LABORATORY) பரிசோதனைகள்.
- நீரிழிவு நோயாளருக்கான தேர்ந்தெடுத்த உணவு வகைகள்.
- ஆடை நீக்கிய (NON FAT) பசும்பால் என்பனவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

GOPISHAANTH HEALTH CARE,
191, 1st CROSS STREET, JAFFNA.
(NEAR VEMBADY GIRLS' HIGH SCHOOL) T.P.: 0779850291

## A SERVICE OF THANKSGIVING



for

MR SIVASAMBOO THANAPALAN,

Principal Emeritus, St. John's College,

will be held on Monday 09th August 2010, 4.30p.m. at ST. JOHN THE BAPTIST'S CHURCH, CHUNDIKULI.

All are invited.

Mrs .P.Thanapalan & Family members of late Mr.S.Thanapalan

# மரண அறிவித்தல்



## திருமதி நாகராசா கமலாம்பிகை

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகராசா கமலாம்பிகை 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - அன்னம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற செல்லத்துரை - நாகம்மா தம்பதியரின் பெறாமகளும் முத்துக்குமார் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் முத்துக்குமார் நாகராசாவின் அன்பு மனைவியும் மோகனதாசன் (ஜேர்மனி), எழில்மோகன் (கலா - திருநெல்வேலி வர்த்தகர்), காலஞ்சென்ற ஜெகன்மோகன் மற்றும் மோகனகரன் (கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்), யமுனா (இந்தியா), ஜீவா (லண்டன்), ராஜமோகன் (ஜேர்மனி), விஜயமோகன் (விஜி - வர்த்தகர்) காலஞ் சென்ற மோகனரூபன் மற்றும் வளர்மதி (யாழ்ப்பாணம்), கமலமோகன் (பின்லாண்ட் ஆகியோரின் அன்புத் தாயும் பவளராணி (ஜேர்மனி), ஜெயராணி (வசந்தா), சற்குணதேவி (யாழ்.போதனா வைத்தியசாலை), ஜீவராசா (இந்தியா), இராசரூபன் (லண்டன்), உசா (ஜேர்மனி), சந்திரநாயகி, ஜெகதீசன், சுதர்சினி (பின்லாண்ட்) ஆகியோரின் அன்பு மாமியும் சாரதாதேவி, சந்திரலேகா, சிவாஜி காலஞ் சென்ற அருண சிவாஜி மற்றும் ஈஸ்வர சந்திரகாந்தி, உருத்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், தவகுலரத்தினம், கமலாதேவி மற்றும் சிவயோகேஸ்வரி, பவளக்கொடி, விஜயகுமாரி, மனோன்மணி, சிவயோகம், காலஞ்சென்ற ராசறஞ்சன் மற்றும் மனோறஞ்சிதம், காலஞ்சென்ற பாக்கியநாதன் மற்றும் ஜெகநாதன், ஞானறஞ்சிதம், சத்தியறஞ்சிதம், சூரியகுமாரன், ஜெயசூரியன் ஆகியோரது மைத்துனியும் இராமச்சந்திரன் புஸ்பதேவி, கந்தசாமி விஜயலட்சுமி, காலஞ்சென்றவர்களான பாஸ்கர சிவாஜி, பாக்கியநாதன், ஈஸ்வரசிவாஜி ஆகியோரது உடன் பிறவாச் சகோதரியும் கமல், றஜிந்தர், சுரேந்தர், நிறோ, காருண்யா, நவீன், ஜெனித்தன், யதுஸ்சியா, விதுசியா, ராஜவண்ணன், வினோயா,றிசானா, கவி (கொக்குவில் இந்துக் கல்லூரி), தீபன், ஜெகன், கோபி, கார்த்திகா, சுகி, வினோ, சிந்து, பவி, தனு, நர்த்தனன், சரன், நிவேதன், டினுசன், யுவேதிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றியா, கணா, நிசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்,

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (சி/569726) மகன் எழில்மோகன் (கலா) வர்த்தகர், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

19
வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
July.2010 to Dec..2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம், மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.alimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

**விண்ணப்ப முடிவுத் திகதி : 10.08.2010**

## இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் செல்ரர்,**
*19, முருகேசர் லேன், நல்லூர்*

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1 தரமான Broiler கோழிக்குஞ்சுகள் (விசேட விலையில்) 16.08.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

**நல்லூர் பாம் செல்ரர்,**
*19, முருகேசர் லேன், நல்லூர்.*
தொ.பே: 021 222 6944

நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையத்திலும் பதிவு செய்யலாம்.
தொ.பே: 0774656377

ஆட்டி பாம் வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம்.
தொ.பே: 021 321 6290

குறிப்பு: (தீவனம், மருந்து என்பன விசேட விலையில் பெற்றுக்கொள்ளலாம்)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப 1988 இல் பிறந்த, அனுசம் 8 இல் செவ்வாய் - கிரகபாவம் 76, வங்கி உத்தியோகத்தரான மணமகளுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகனை எதிர்பார்க்கிறார்கள். அரச சேவை/ வங்கிச் சேவையில் உள்ளோர் விரும்பத்தக்கது.

தொடர்பு: விளம்பர இல, 4051, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு உண்டு

375, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (முஸ்லிம் பள்ளிக்கு முன்) வீடு வாடகைக்கு உண்டு. மாடி வீடு மேல் தளத்தில் 3 அறைகள், 1 Hall, குளியலறை, மலசல கூடம் உண்டு.

கீழ்த் தளத்தில் 3 அறைகள் 2 Hall, குசினி, குளியலறை, மலசலகூடம் உண்டு. தேவையானவர்கள் நேரில் பார்வையிடலாம்.

தொடர்பு T.P:0773087110

## நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவுகளில்

அமரர்
**சின்னத்துரை பாலசுந்தரம்**



உதிர்வு
20.07.2009

மலர்வு
21.03.1943

திதி: ஆடி அபரபக்க சதுர்த்தசி 08.08.2010

மெசின்பாலு மெசின்பாலு என்று செல்லமாக அழைத்தகாலம் போய் இன்றோடு ஓராண்டு ஆகின்றதே அப்பா!
அன்பு மொழி பேசி எமைச் சிரிக்க வைத்து ஆதரித்தவரே எங்கள் ஆசை அப்பாவே!
எம்மை எல்லாம் எங்குவிட்டுச் சென்றீர்கள் அப்பா!
அம்மா எங்களை விட்டுப் பிரிந்தபின் அப்பா நீங்களே தனித்துவமாய்த் தலை நிமிர்ந்து நின்று தாயுமாகித், தந்தையுமாகி உங்களது அயராத உழைப்பாலும், முயற்சியாலும் கண்ணை இமை காப்பதுபோல எமைக் காத்து கல்விக் கடலிலே கலங்கரை விளக்காய் நின்று எம்மைக் கரை சேர்த்த எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
எங்களை விட்டுப்பிரிய எப்படியப்பா மனம் வந்தது? உமை இழந்த துயரில் கதறுகி றோம் அப்பா எம்மை அணைக்க மீண்டும் வந்திடப்பா!
எல்லாம் ஒருகனவு போலத் தோன்றுதப்பா!
எங்கள் உள்ளங்களில் உறைந்து விட்ட அப்பாவின் ஓராண்டு நினைவில் என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப்பெருமானையும், பொறிக் கடவை அம்மாளையும் வேண்டுகின்றோம்.


ஓம் சாந்தி!

ஆசிரியர் வீதி, பெரியரசடி,
சாவகச்சேரி.

மக்கள், மருமக்கள், பேர்த்திமார்,
பேரன்மார்,
மற்றும் குடும்பத்தினர்.

# நீங்கள் ஏமாற வேண்டாம்.!!

நீங்கள் வாங்கும் நீர் குழாய்களிலும் பொருத்துக்களிலும் எஸ் லோன் இலட்சினை இல்லையெனில் அவை எஸ் லோன் அல்ல.




எஸ் லோன் இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்த்து வாங்குங்கள்

S-Lon

என்றும் முன்னணியில்

எஸ்-லோன் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்.
148, வொக்சோல் வீதி, கொழும்பு 02.

## விற்பனைக்குண்டு

யப்பான் தயாரிப்பிலான லான்சர் மொடல் C-50, பெட்ரோல் மீட்டர் மொடல் சாளி (வெள்ளை) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776701626

## மோட்டார் சைக்கிள்விற்பனைக்குண்டு

நல்ல பாவனையில் உள்ள கொண்டா 50 சுப்பர் கப் ஜப்பான் GG XXXX மோட்டார் சைக்கிள் உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:0718799157, 0772261888

## வீடு வாடகைக்கு

நவீன வசதிகளுடன் 3 படுக்கை அறைகள், குளியல் அறைகளுடன் வீடு வாடைகைக்கு உண்டு. இல.33 கொய்யாத்தோட்டம், புது வீதி, 6 ஆம் வட்டாரம்.
தொடர்பு: 0213212442

## வேலையாள்கள் தேவை

பான்சிக் கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**ராஜா பான்சி**
*153, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.*

## யாழ்.நகரில் குத்தகைக்கு காணி தேவை

முன்னணி நிறுவனமொன்றுக்கு நகர எல்லைச் சுற்றுவட்டாரத்துக்குள் 2 அல்லது 3 பரப்புக்காணி அல்லது வீட்டுடன் அமைந்த காணி வாடகைக்கு அல்லது நீண்டகால குத்தகைக்குத் தேவை.
**தொடர்பு:- 0776164901**

## விற்பனைக்கு

52-XXXX இலக்கமுடைய டபிள் கப் இசுசு கன்ரர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: பிரகாஸ் எலக்ரோனிக்ஸ் பருத்தித்துறை. 077 3222837

## காணி விற்பனைக்கு

சங்கானை முருகமூர்த்தி வீதியில்-பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் தொலைவில் 6 ½ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடும், தோட்டப் பயிர்களும் செய்யக்கூடிய 35 பரப்பு நெற்காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு தொலைபேசி எண்கள்: 0718387361, 0777556244

## சேவை

குறைந்த செலவில் குறுகிய காலத்தில், உயர்ந்ததரத்தில், நினைவு மலர், மற்றும் நினைவு மலர்களுக்கான படங்கள் அச்சிட்டுக் கொடுக்கப்படும்.

**பிள்ளையார் அச்சகம்**
நல்லூர்.

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1Kg 460/= கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

**விஜயகுமாரன்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளக்குடியமர்ந்தோருக்கு உணவு அல்லாத பொருள்கள்

கண்டாவளை, ஓக. 8

கரைச்சி கிழக்குப் பிரரேதசத்தில் 20.06.2010 இற்கு முன்னர் வெளிமாவட்டங்களில் இருந்துவந்து மீள்குடியேறியோருக்கு உணவு அல்லாத பொருள்கள் அடங்கிய பொதிகள் திங்கட்கிழமை இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட மக்கள் வந்து பொதிகளைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-10-405-432)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஞானசுந்தரம் நகுலேந்திரன்

தோற்றம்: 26.03.1953 மறைவு: 20.07.2009

எங்கள் அன்புத் தெய்வமே!
பாசத்தின் ஒளி விளக்கே!
அன்பான வார்த்தையும்
அமைதியான பண்பும்
அரவணைக்கும் நற்குணமும்
என்றும் எம் மனதை விட்டு அகலாது
ஆறாத்துயருடன் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உடுவில் தெற்கு,
யாமாச் சந்தி, மானிப்பாய். (101546)

குடும்பத்தினர்.

## மணமகள் தேவை

கௌரவ குடும்ப, குற்றமற்ற, சுத்தபோசன, 51 வயது தொழிலதிபருக்கு 40 வயதுக்குட்பட்ட மணப்பெண் தேவை. தொடர்பு:- 07770711365

## சாவகச்சேரிப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம், ஓக. 8

சாவகச்சேரி பிரதேச சபை இவ்வாண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

வேவில் மயானச்சூறகு மடம் அமைத்தல், ஐங்கரன் சனசமூக நிலையத்துக்குக் கட்டடம் அமைத்தல், மிருசுவில் முருகன் கோயில் வீதி திருத்தம், கைதடி பொது நூலகத்துக்கு சிறுவர் பகுதி கட்டடம் அமைத்தல், நாவற்குழி சித்தி விநாயகர் வீதி 2ஆம் முறை தாரிடுதல், பாலாவி வாகையடி வீதி திருத்தம், வரணி இயற்றாலை-தாவளை இயற்றாலை வீதி திருத்தம் என்பனவற்றிற்கு மேற்படி பிரதேச்சபை நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. (த-122)

## சமூக பராமரிப்பு பயிற்றுவிப்பாளர்களுக்கு நாளைமுதல் செயலமர்வு

நாவற்குழி, ஓக. 8

சமூகசேவைகள் அமைச்சு சமூக பராமரிப்புச் செயற்றிட்டத்திற்கு பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் செயலமர்வு நாளை முதல் 13ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் கீழ் பணிபுரியும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முன்பிள்ளைப் பராய அபிவிருத்தி உதவியாளர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் பதவிகளில் தெரிந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்க உள்ளனர்.

கொழும்பு அதுருகிரிய ஜயவர்த்தன மாவத்தையிலுள்ள தேசியப பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டு அங்கு ஐந்துநாள் வதிவிடப் பயிற்சிநெறியாக இது நடைபெறவுள்ளது.

சமூக பராமரிப்புச் செயற்றிட்டம் என்ற நவீன எண்ணக் கருவை அமைச்சு நாடெங்கும் பரவலாக முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-121)

## கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஓக. 8

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள் ஸ்ரீ பருவதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு தீர்த்த திருவிழா நடைபெறும். (ஐ-204)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
செல்லையா
நடராஜா
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
திதி: சதுர்த்தசி (08.08.2010)

தோற்றம் 05★08★1945

மறைவு 23★07★2006

ஆண்டுகள் நான்கானாலும் ஆறாத்துயரில் கண்ணீர் சொரிய நின்று உங்கள் நினைவால் வாடுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

சக்கலாவத்தை, கரணவாய் வடக்கு, கரவெட்டி. (சி/569675)

ந.புவனேஸ்வரி (மனைவி)
செ.கனகம்மா (அம்மா)
த.மகேஸ்வரி (தங்கை).


வசீகரத் தோற்றத்திற்கு!

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பூ, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பத்மாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமச் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.

'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250. (சி/555203)


# DANISH DEMINING GROUP

DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operation in Sri Lanka since 2003. Presently the work force consists of 600 personnel which is expected to increase to 700, including deminers, administrative staff and a Management group, mainly built upon national capacity supported by expatriate Programme Manager, Operations Manager and Technical Advisors. DDG presently operates in Jaffna, Vavuniya, Killinochchi districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. The Demining project in Sri Lanka is scheduled to run upto December 2010, with the possibility of extension upto 2011, depending on funding.

**VACANCY FOR A LOGISTICS ASSISTANT (Vavuniya based)**

He should be a Sri Lankan National. GCE A/L qualified with at least 2 years experience in similar capacity. He should be fully conversant with planning and procurement of all supplies, maintenance of inventory and quality control of stores. Should be a team player. A diploma from the Institute of Supplies and Materials Management is not a must but would be a definite advantage. Should hold a valid Sri Lankan driving licence.

- Be fluent in English, Sinhala and Tamil
- Be computer literate.

**How to Apply**

Applications for all positions should submit a letter to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non-related referees to

**Address:**

DANISH DEMINING GROUP
178 A, Poonthoddam,
Vavuniya.

**E-mail:** vavofficemgr@ddg.lk

**Fax No:** 024 7451125

**Closing Date:** 15th August 2010.

Only candidates who meet all the above requirements will be invited for an interview/test. The Job description could be obtained on request.



# தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவகால நிகழ்வுகள்

★ திருடர்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் அடியார்களே! உங்கள் உடைமைகள், நகைகள் என்பவற்றுக்கு நீங்களே பொறுப்பு.

மெய்யடியார்களே!

நிகழும் விகிர்தி வருடம் ஆடி மாதம் 25ம் நாள் 10.08.2010 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகும்.

10.08.2010 அன்று மாலை இரண்டாம் திருவிழா நடைபெறும்.

சகஸ்ர (1008) மகா சங்காபிஷேகமும் விசேட உற்சவமும் நிகழும் விகிர்தி வருடம் ஆடி மாதம் 26ம் நாள் புதன்கிழமை (11.08.2010) காலை 6 மணிக்கு சங்குப் பூசையும் காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் பகல் 9.30 மணிக்கு சண்முக அர்ச்சனையும் 4.30 மணிக்கு முருகப்பெருமான் சண்முகப் பெருமானுடன் வள்ளி தெய்வானையும் வீதிவலம் வந்தருளுவார். விஷேட மோனக்கச்சேரியும் இடம்பெறும். ஆலய மண்டபத்தினுள் அன்னதானம் வழங்கப்படும்.

5ம் திருவிழா (13.08.2010) வெள்ளிக்கிழமை காலைத்திருவிழா ஆரம்பமாகும். அன்று மாலை 4.00 மணியளவில் விநாயகரும் முருகப் பெருமானும் எழுந்தருளுவர்.

10ம் திருவிழா (18.08.2010) புதன்கிழமை காலை 10 மணிக்கு பூங்காவனம்.

11ம் திருவிழா கைலாச வாகனம் (19.08.2010) காலை 8 மணி

சப்பறத் திருவிழா (22.08.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி

தேர்த் திருவிழா (23.08.2010) திங்கட்கிழமை காலை 8.00 மணி

தீர்த்தத் திருவிழா (24.08.2010) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அன்று மாலை மௌனத் திருவிழா நடைபெறும்.

**தினமும் காலைத் திருவிழா 06 மணிக்கும் இரவுத் திருவிழா 01 மணிக்கும் நடைபெறும்.**

மு.கு. திருவிழா சம்பந்தமாகவும் ஆலய கைங்கரியங்கள் பற்றியும் நேர்த்தி முதலிய விடயங்களுக்கும் எம்மிடம் தொடர்புகொள்ளவும்.

ஆலயத்தில் அன்னதானம் வழங்குதல் மிகவும் சிறப்பாக நடைபெறும். அதனால் வழமைபோல அன்னதானம் வழங்கவிரும்பும் அடியார்கள் எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்தி சிறப்பாக அப்பணி தொடர ஒத்துழைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள். அத்துடன் அபிஷேகம், சண்முக அர்ச்சனை, சங்காபிஷேகம், திருமணம் போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் அடியார்கள் எம்முடன் தொடர்புகொள்ளவும். எங்கள் மெத்த வீட்டுக் கந்தசாமி ஐயர் மடம் தற்போது வழமையான செயற்பாடுகளுடன் தொடர்ந்தும் நடைபெறுகிறது என்பதை சந்நிதியான் அடியார்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

T.P. 077 431 9786
021 300 6653
People's Bank Valvettithurai
Account Number 207-015064-3
A/C 2037

இப்படிக்கு
பிரதமகுரு சிவஸ்ரீ ச. கந்தசாமி ஐயர்
பிரதமகுரு உலககுருநாத ஐயர்
ஆலய உரிமையாளர்
செல்வச்சந்நிதி தொண்டைமானாறு
மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை
க/கு இல. AC/2037

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org